அரசியல் ஞானபோதினி—5.

இராஜபுத்திர வீரர்

கும்ப மஹாராணா

(MAHARANA KUMBHA)

கிருஷ்ணஸ்வாமி சர்மா
எழுதியது

விலை அணு 6

"ஞானபோதினி" பிரசுராலயம்
33, இருளப்பன் வீதி
சௌகார்பேட்டை, சென்னை
1923

அரசியல் ஞான போதினி—5

இராஜ புத்திர மகா வீரர்

கும்ப மஹாராணு

(MAHARANA KUMBHA)

கிருஷ்ணஸ்வாமி சர்மா
எழுதியது

விலை அணு 6

"ஞானபோதினி," பிரசுராலயம்
33, இருளப்பன் வீதி
சாவுகார் பேட்டை, சென்னை

1923

அட்டவணை

முகவுரை

வட இந்தியாவிலுள்ள இராஜபுதனத்தில் தோன்றின இராஜபுத்திரர்களும் இராஜபுத்திரிகளும் மிக்க வீரஞ்செறிந்தவர்கள். அவர்கள் அறத்திலும் மறத்திலும் மேன்மை கொண்டவர்கள். தேசாபிமானமும் மதாபிமானமும் அவர்களுடைய இரத்தத்தில் கலந்திருக்கும். இராஜபுத்திரர்களொவ்வொருவரும் அசகாய சூரர்கள். தகப்பனென்றும் பிள்ளையென்றும் மித்திரனென்றும் சுற்றமென்றும் சற்றேனும் பாராமல், யுத்த தர்மத்தைச் செவ்வனே நடத்தும் இயல்பினைப்பெற்றவர்கள். பாரதநாட்டில் இராஜபுத்திர வீரர்களின் அருஞ்செயல்கள் மிகவும் ஆச்சரியமானவை. தேசத்தின் நன்மைக்காகவும் சுதந்தரத்திற்காகவும் இராஜபுத்திரர்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்தவர்கள். உலகத்தில் தோன்றின வீர வகுப்பினர்களில் இராஜபுத்திரர்கள் முதன்மையானவர்கள். அவர்கள் சிறந்த க்ஷத்திரிய சிகாமணிகள். இராணுவ சாகஸமும் அரசியல் அமைப்பும், தேசாபிமான உணர்ச்சியும், தர்ம சிந்தையும், ஜீவகாருண்யமும் அவர்களுடைய இயற்கைக் குணங்களாகும். இராஜபுத்திரிகள் சிறந்த பதிவிரதா ரத்தினங்கள். இத்தகைய க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்தவர்களில் **மஹாராணா கும்பன்**

மிகவும் சிறந்தவர். ஆதலால், அவருடைய சரிதை எழுதப்பட்டது. இச்சரித்துடன் தொடர்ச்சியாக இன்னும் சில இராஜபுத்திர மகா வீரர்களின் சரித்திரங்களும் விரைவில் வெளிவரும். பிரதாப்ஸிங், பிரிதிவிராஜ், பீம்ஸிங், இராஜஸிங் முதலிய மகா வீரர்களின் சரிதங்களும் இராணி சம்யுக்தா, பத்மினி, இலட்சுமீ பாய் முதலிய வீர பெண்மணிகளின் சரிதங்களும் பிரசுரிக்கப்படும். இவை யாவும் நம் தமிழ் மக்களின் தேசாபிமான உணர்ச்சியை யூட்டவே எழுதப் படும். தமிழ் நாட்டில் வசிக்கும் ஸ்திரீபுருடர்கள் ஒவ்வொருவரும் வீரர்களின் சரித்திரங்களை யறிதல் வேண்டும். ஜாதீய கலாசாலையில் கற்கும் மாணவர்களுக்கும், மற்ற கல்விச்சாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இச்சரித்திரங்கள் இன்றியமையாதனவாகும்.

வேலூர் சிறை,
1923.

கிருஷ்ணஸ்வாமி சர்மா.

கும்பமஹாராணு

1. குஹிலோத வமிசத்தரசர்கள்

பூர்வம் இராஜஸ்தானத்தைச் சேர்ந்த மீவார இராஜ்யத்தையாண்ட இரஜ புத்திர மகா வீரர்களுள் **கும்ப மஹாராணு** மிகவும் சிறந்தவர். இவரை மஹாராணு **கும்பகர்ணன்** என்றும் அழைப்பர். இராஜ ஸ்தானத் திற்குரிய ஏழு இராஜ்யங்களுள் மீவார் மிகவும் பெரு மைவாய்ந்தது. இதை **ஜயத்ரஸிங், அமீர்ஸிங், க்ஷேத் திரஸிங், ஸங்கிராமஸிங், பிரதாப்ஸிங், இராஜ்ஸிங்** முதலிய தீர புருடர்கள் ஆண்டனர். மீவார இராஜ் யத்தை யாண்ட இம்மன்னர்கள் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இக்ஷுவாகு வம்சத்தில் தோன்றின ஸ்ரீராமபிரானுடைய மூத்த குமாரரான லவ மகா ராஜாவின் சந்ததியார்களென இவர்கள் கூறுவர். சூரிய வமிசத்தைச்சேர்ந்த குஹிலோத மரபிற் பிறந்தவர்க ளென கூறப்படுகிறது. குஹிலோத வமிசம் கிரகாதித் யரிடமிருந்து உண்டாயிற்றென சிலர் கூறுவர். மற்

றுஞ் சிலர், கிரீஸ் தேசாதிபதி அலெக்ஸாண்டருடன் போர்செய்த புரூரவஸ¬விடமிருந்து உண்டாயிற் றெனவுங் கூறுவர். பின்னுஞ் சிலர், கோஹ என்பவ னிடமிருந்து உண்டாயிற்றெனவுங் கூறுவர். பூர்வம், வல்லபபுரத்தை யாண்டு வந்த சிலாதித்யன் வன வீரர்களால் தோல்வியடைந்து யுத்தத்தில் கொல்லப் பட்டவுடனே அவனுடைய பட்ட மகிஷிகளில் அநே கர் உடன் கட்டை யேறினார்கள். புஷ்பாவதி பூர்ண கர்ப்பவதியாயிருந்ததால், அவள் தனக்கு ஆண் பிள் ளேயே பிறக்கவேண்டுமென்று தன் இல்லுறைத்தெய்வ மாகிய பவானி தேவியை வேண்டிக்கொள்ளக் கோயி லுக்குப் போயிருந்தாள். கோயிலினின்றும் திரும்பி வரும் வழியில், தன் கணவனரின் மரணத்தையறிந்து, மாளிகைக்குச் செல்லாமல், உடனே வேறுவழியாகத் திரும்பினாள். அவள், கொஞ்சதூரம் சென்றதும், பிரசவ வேதனையால் வழிநடக்க முடியாமல் பக்கத்தி லிருந்த ஒரு குகையில் ஓர் ஆண் மகவையீன்றாள். பிறந்த குழந்தையை ஒருவருமறியாதபடி மறைத்துக் கொண்டு பக்கத்திலுள்ள வீர நகரமென்னுங் கிராமத் தையடைந்து, அவ்வூரிலுள்ள கமலாவதி யென்னும் ஒரு பார்ப்பினியிடம் குழந்தையைக் காப்பாற்றி வரும் படி ஒப்புவித்துத் தன் கணவன் சென்றவழியே அவள் செல்லலானாள். குகையில் பிறந்தமையால் அப்புத்திரனுக்கு குஹன் என்று பெயருண்டாயிற்று. அவன் வழியே யுண்டானவர்களுக்கு குஹலோத ரென்று கூறப்படுகின்றதென பலர் கூறுவர். இந்த வமிசத்தார் மீவார இராஜ்யத்தில் பதினைந்கு நூற்றாண் டளவு அரசுபுரிந்து வந்தனர். அவர்கள் நல்ல வீர பிர

நாபங்கொண்ட தீரபுருடர்கள் ; தர்மவான்கள் ; சத்திய நெறியைக் கொண்டவர்கள் : உயர்ந்த தேசாபிமானத்தைக் கொண்டவர்கள். தேசத்தின் பொருட்டு சதா இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி உழைத்த மகான்கள். அன்னிய பிரபுத்துவத்தைச் சற்றேனும் சகிக்காத சுதந்தரத்தன்மையைக் கொண்டவர்கள். இத்தகைய அருங்குணங்களை ஒருங்கே பெற்ற உயர்குலத்தில் கும்பமகாராணு பிறந்தார். இவர் கி. பி. 1433-ம் ஆண்டில் மீவார இராஜ்யசிம்மாதனாதிபதியானார். இவர் மோகல்ராணு என்பவரின்சீமந்தபுத்திரன் ; இவருடைய தாய் சௌபாக்கியதேவி ; பாமார வம்சத்தைச் சேர்ந்த இராஜா ஜயத்மால் சாங்கலரின் புத்திரி. இவளுக்கு மாயாகன்னி என்னும் ஒரு பெயருண்டு. பாமார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அக்கினி குலத்தவர்கள். புத்தமதத்தினரையழிக்க ஆபூபர்வத்தில் பிராமணர்கள் செய்த யாகத்தின் அக்கினி குண்டத்தில் தோன்றின நால்வகை வீரர்களுள் பாமார் முதன்மையானவரென்று கூறப்படுகிறது. பாமார் வமிசத்தைச் சேர்ந்தவர்கள் மகாபராக்கிரமசாலிகள். இந்தவமிசத்தில் ஸ்திரீபுருடர்களிருவரும் நல்ல வீரபிரதாபங்கொண்டவர்கள். கும்பமகாராணுவின் முப்பாட்டனார் இராணு க்ஷேத்திரஸிங் மீவாரதேசத்தை கி. பி. 1364-ம் ஆண்டிலிருந்து கி. பி. 1382-ம் ஆண்டுவரை ஆண்டுவந்தார். இராணு க்ஷேத்திரஸிங், இராணு அமீர் என்பவரின் புதல்வர். இராணு அமீர் மிக்க கீர்த்தி வாய்ந்தவர். இவர் மீவாரதேசத்தை விசாலப்படுத்தினார். இவர் ஆஜ்மீர், ஜஹாஸ்பூர முதலிய இடங்களைக் கைப்பற்றி மீவாருடன் சேர்த்தார். மாண்டல்கார், மந்த்ஸூர், சப்பன் முதலிய

இடங்களையும் மீவார இராஜ்யத்தில் சேர்த்தார். இவர் டில்லி மன்னனுடன் போர்புரிந்து, அவனை பக்ரோல் என்னுமிடத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றார். க்ஷேத்திரஸிங் குஜராஷ்டர மன்னனைத் தோற்கடித்து அவனைச்சிறைப்படுத்தினார். பாடன் அரசைச்சேர்ந்த ஜாவன்கான் என்பவனையும் க்ஷேத்திரஸிங் சிறைப்படுத்தித் தன்னூருக்கு அழைத்துவந்தார்.

தவிர, அமீஷா என்பவனை யுத்தத்தில் கொன்று மாளவ தேசத்து மன்னன் நடுங்கும்படியாக அவனை பயமுறுத்தியும் க்ஷேத்திரஸிங் வந்தார். இராணா க்ஷேத்திரஸிங்குக்குப் பிறகு அவருடைய குமாரர் இராணா லக்ஷ்ஸிங் அரசாண்டார். இவரை லாகா என்று கூறுவர். இவர் கி. பி 1382-ம் ஆண்டிலிருந்து கி. பி 1397-ம் ஆண்டுவரை செங்கோலோச்சிவந்தார். இவர், மீவார தேசத்தை விர்த்தி செய்தார். மேர்வார தேசத்தைக் கைப்பற்றி மீவார இராஜ்யத்துடன் சேர்த்தார். அலாவுதின் படையெழுச்சியால் நாசமடைந்த பல பட்டணங்களையும், கோயில்களையும், அரண்மனைகளையும் மேர்வார தேசத்திற் கிடைத்த வெள்ளிச் சுரங்கங்களைக்கொண்டு இவர் எடுப்பித்தார். தவிர, பல ஏரிகளையும் நீர்நிலைகளையும், பல கோட்டைகளையும் இவர் கட்டினார். நாகர்கால் பிராஞ்சியத்தைச் சேர்ந்த சாங்கல வமிசத்து இராஜ புத்திரர்களையும் யுத்தத்தில் ஜெயித்தார். பத்னோர் என்னுமிடத்தில் டில்லியையாண்ட சுல்தானை யுத்தத்தில் தோற்கடித்தார். இங்ஙனம், இவர் ஆண்டு வருங் நாளில் ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. லக்ஷ்ஸிங் வயது முதிர்ந்த பிராயத்தினராய் மீவார தேசத்தைத் தன் மூத்தபிள்ளைக்கு

முடிசூட்ட வெண்ணி அவனுக்கு விவாகஞ் செய்ய இஷ்டப்பட்டார். மந்தவார தேசாதிபதியின் குமாரத்தியை மீவார தேசாதிபதியின் மகன் சோண்டாவுக்குக் கொடுப்பதாக மணமகளின் சகோதரன் இரான்மால், புரோகிதர் முதலானோரை அழைத்துக்கொண்டு நிச்சியதாம்பூலங் கொடுக்க மீவாருக்கு வந்தான். நிச்சயதாம்பூலத்தை மணமகனே யேற்றிக் கொள்வது இரஜபுத்திரர்களின் வழக்கம். நிச்சயதாம்பூலத்தை உத்தேசித்த மணமகன் அன்றி, வேறெவரேனும் வாங்கிக் கொண்டால், தாம்பூலம் வாங்கிக் கொண்டவரே பெண்ணுக்குப் பதியாக ஆவார். நிச்சயதாம்பூலத்தைத் தாங்கி வந்த இரான்மால், சோண்டா இல்லாமையை யறிந்து காத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது லக்ஷஸிங் வேடிக்கையாக 'கிழவனுன எனக்கு நிச்சய தாம்பூலம் கொடுக்கமாட்டீர்களல்லவா' யென்று சிரித்துச் சொன்னார். அவர்களும், லக்ஷஸிங்குடன் கூடிச் சிரித்தனர். பிறகு, சோண்டா வந்ததும் அவர்கள் ஒருவரோடொருவர் சிரிப்பதைக்கேட்டு விஷயத்தைத்தெரிந்து கொண்டு, என் தகப்பனர் வேடிக்கையாகக் கூறின போதிலும், இன்னும் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் இருப்பதாகத் தெரிவதால், அந் நிச்சயதாம்பூலத்தை அவரே ஏற்றுக்கொள்ள வெண்டுமென்று கூறினன். சோண்டாவுக்காகக் கொண்டு வந்த நிச்சயதாம்பூலத்தைக் கிழவயதுள்ள லக்ஷஸிங்குக்குக் கொடுக்க அவர்கள் மனந்துணியவில்லை. கடைசியாக, இரான்மால், சோண்டாவை விளித்து, 'சகோதர! என் தங்கையை லக்ஷஸிங்குக்குக் கொடுக்க வேண்டுமென்பதாக நீ இஷ்டப் படுவாயேயானல், என்

தங்கை வயிற்றிற் பிறக்கும் குழந்தைக்கே மீவார இராஜ்யாதிபத்யம் உண்டாகவேண்டும்; நீ இந்த ராஜ்யத்தை இச்சிக்க மாட்டேன்' என்று எனக்கு வாக்குறுதி கொடுப்பாயே யானல் நான் நிச்சயதாம்பூலத்தை அவருக்கே கொடுக்கிறேன்' என்று கூறினன். உடனே, சோண்டா சந்தோஷத்துடன், 'அப்படியே வாக்குறுதி கொடுக்கிறேன்; என் தகப்பனரைச் சந்தோஷப்படுத்துவதைக் காட்டிலும் மேலான கடமை எனக்கு வேறென்றுமில்லை' என்று கூறினன். விவாகம் நடந்தது. அவ்விவாகத்தினல் லக்ஷஸிங்குக்கு மோகல் பிறந்தான். மோகல் ஐயாண்டு பிராயத்தினனயிருக்கையில் லக்ஷஸிங் இந்துக்களின் சநாதன தர்மத்தைக் காக்க தண்ட யாத்திரை புறப்பட்டான். இஸ்லாம் மதத்தைத் தழுவின தார்தார சாதியினர் பலர் இந்துக்களின் மகா புண்ணிய ஸ்தலமாகிய கயா க்ஷேத்திரத்தைக் கைப்பற்றி இந்துக்களைப் பல விதமாகத் துன்புறுத்தி வந்தனர். அங்ஙனம், துன்புறுத்தி வந்தவர்களை முறியடித்து கயா க்ஷேத்திரத்தை மீட்டு, ஆங்கு வைதிகச் சடங்குகளைச் செய்யவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு லக்ஷஸிங் புறப்படுகையில், சோண்டாவை யழைத்து 'அப்பா! மகனே, மோகலுக்குத் திருப்தியாகச் செய்யக் கூடியதென்ன' என்று கேட்கவும், உடனே, சோண்டா, 'தந்தையே மீவார இராஜ்யாதிபத்யம் ஒன்றே அவனுக்குத் திருப்தியைக் கொடுக்கக் கூடியதென பதிலளித்து, மீண்டும், அவன், தன் மீது தந்தைக்கு ஒருக்கால் சந்தேகம் தோற்றினும் தோற்றக் கூடுமென்று எண்ணி, உடனே லக்ஷஸிங் தண்டயாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னரே, மோகலுக்குப்

பட்டாபிஷேகஞ் செய்ய ஆயத்தஞ் செய்தான். மோக லுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து சோண்டாவே முதல் முதல் மோகலை அரசனைக் கொண்டு அரசனுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்து முடித்தான். லக்க்ஷஸிங் தண்டயாத்திரை சென்று ஆப்கானியர் தார்தாரியர்களுடன் கொடிய போர் நடத்தி கயா க்ஷேத்திரத்தைக் கைப்பற்றினர். அக்கொடிய போர் வெற்றியடைந்தும், கடைசியாக லக்க்ஷஸிங் யுத்தத் தில் மாண்டார். லக்க்ஷஸிங் மாண்ட செய்தி மேவார தேசத்திற்கு எட்டினதும், இராணியார் உடனே அக் கினி வளர்த்திப் பிராணத்தியாகஞ் செய்து கொள்ளத் தயாராயிருந்தாள். இராணியார், அக்கினிப் பிரவேசம் செய்ய எத்தனிப்பதை யறிந்த சோண்டா, உடனே இராணியாரிடம் சென்று, 'சிற்றன்னையே! நீங்கள் இங்ஙனம் அக்கினிப் பிரவேசஞ் செயவீர்களானல், இளம் பிராயத்தினனயிருக்கும் மோகலை ஆதரிப்பார் யார்? மோகனுடையபோகக்ஷேமங்களுக்குநீங்களன்றோ காரணம். மோகனுடைய நன்மையை யுத்தேசித்து நீங் கள் செய்ய எத்தனித்த காரியத்தை விடுங்கள்' என்று கூறினன். சோண்டாவின் மேலான குணத்தை யறிந்த இராணியார், சோண்டாவை வாழ்த்தி அவன் வார்த் தைக்குக் கட்டுப்பட்டு பிராணஹத்தி செய்து கொள ளாமலிருந்தாள். மேவார இராஜ்யத்தின் மந்தணசபை யில் முக்கியஸ்தானம் சாசுவிதமாக சோண்டாவும் சோண்டாவின் சந்ததியார்களுமே உரிமைபாத்தியதை யாக அனுபவிக்க வேண்டுமென்று இராணியார் ஒரு சாஸனம் செய்து கொடுத்தாள். அருந்தியாகத்தால் சோண்டா பெற்ற இந்த சாஸனமே பின்னர், மேவார

தேசத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக யிருந்தது. சோண்டாவுக்குப் பிறகு வந்தவர்கள் ஆழ்ந்த தேசாபிமானமும் முதிர்ந்த தியாக புத்தியுமின்றி யிருந்ததால், மேவார இராஜ்யத்தின் அழிவுக்குக் காரணமாகயிருந்தனர். நிற்க மோகல் கி. பி. 1397-ம் ஆண்டில் சிம்மாதனமெய்தினன். மோகல், சிம்மாதனமெய்தி சின்னுள் கழிந்ததும், தண்டயாத்திரை புறப்பட்டு டில்லியையாண்ட முகமத் தோக்ளாக் என்பவனை இராய்பூர் என்னுமிடத்தில் தோற்கடித்தான். மோகல் இராணு ஆஜ்மீர் மீதுபடையெடுத்து, டில்லி நவர்புக்குச் சொந்தமான சாம்பார் என்னுமிடத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டான். ஜாபாலிபூர் மன்னர்கள் மோகலினிடத்தில் கொண்ட பயத்திற்கு அளவேயில்லை. இவனை நினைக்குந்தோறும் அவர்களுக்குச் சிம்ம சொர்ப்பனம் போலிருந்தது. நாகர்புரியின் சுல்தானுன பிரோஸ்கானையும், முகமத்காஜினி கானையும், மண்டுவைச் சேர்ந்த கோரி சுல்தானையும் யுத்தத்தில் முறியடித்து, அவர்களுடைய படைகளை யழித்து, அவர்கள் ஏறிவந்த யானைகளையும் கொன்றுன். சித்தூர் துர்க்கத்திற்குச் சமீபத்தில் சமாதீஸ்வரர் கோயில் ஒன்றை எடுப்பித்து மிகவும் அழகான ஓர் புஷ்கரணி (குளம்) யையுங் கட்டினுன். அக்குளத்திற்குப் பாபமோசனதீர்த்தம் என்று பெயர். தவிர, பார்வதியம்மனுக்கு ஓர் கோயிலையும், விஷ்ணு கோயிலொன்றையும் எடுப்பித்தான். விஷ்ணு கோயிலில் சொர்ணத்தால் செய்த விஷ்ணு விக்கிரகம் ஒன்றையும், தங்கத்தால் செய்த கருடாழ்வான் விக்கிரகமொன்றையும் செய்துவித்தான். நிடதேசத்தவர்களை வென்று மோகல் வெற்றிமாலை சூடினுன். நிற்க, இராணு சேத்

திரஸிங் தச்சசாதியைச் சேர்ந்த மத்னிமால் என்பவனுடைய புத்திரியைமணந்து, அம்மணத்தால் சாசா, மைரா என்னும் இருபுத்திரர்களைப் பெற்றான். அத்தச்ச சாதியைச் சேர்ந்த ஸ்திரீகள் நல்ல அழகு வாய்ந்தவர்கள். அழகை யுத்தேசித்து க்ஷேத்திரஸிங் அத்தச்ச சாதிப் பெண்ணை மணந்து கொண்டான். மோகல் ராஜு இராஜ்யபாரஞ் செய்கையில், சாசாவும், மைராவும் இராணுவத்தில் நல்ல உயர்ந்த உத்தியோக பதவியைப் பெற்றிருந்தனர். தாழ்ந்த சாதியினர்கள் அவ்வளவு அந்தஸ்தை வகிப்பதைக்கண்டு சகியாத வேறு உத்தியோகஸ்தர்கள், சமயம் வாய்ந்த காலங் களிலெல்லாம் அவர்களை அவமானப் படுத்தக்கருதி, மோகல் ராஜுவிடம்வேடிக்கையாகஅவ்விருவர்களைப்பற்றிப்புகழ்ந்து வந்தார்கள். அன்னவர்களுடைய வேடிக்கையே மோகல் ராஜுவுக்கு ஆபத்தாக முடிந்தது. மோகல் ராஜு ஒரு நாள் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். வேட்டையாடி முடிந்து, கூடாரத்தின் வாய்ப்புறத்தில் மோகல் ராஜு உட்கார்ந்து கொண்டு சாசா மைரா முதலானோருடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கையில், திடீரென்று, கூடாரத்திற்கு எதிரே பருத்த விருட்ச மொன்றைக்காட்டி, 'சிற்றப்பன்மார்களே! அஃதென்ன விருட்சம் இவ்வளவு அழகாக வானளாவிருக்கின்றதே' என்று கேட்டான். மனதில் யாதொரு கல்மஷமின்றி மோகல் கேட்டதை அவ்விருவர்களும் ஆகா! நம் அன்னை தச்ச சாதிப் பெண்ணென்றும், நாம் தச்சசாதியைச்சேர்ந்த இழிகுலத்தவர் களென்றும் நினைத்துத் தங்களை அவமானப்படுத்தவே மோகல் அக் கேள்வி கேட்டானென்று நினைத்தவர்களாய், உடனே,

மோகலிடம் குரோதங் கொண்டு தங்களையும் தங்கள் குலத்தையும அவமானப்படுத்தின மோகலைப் பழிக்குப் பழிவாங்குவதே சரியென்று தீர்மானித்து, அத்தருணம் சரியல்லவென்று மௌனஞ் சாதித்திருந்தனர். சாசாவும், மைராவும் மோகல் இராணுவை எப்படியாகிலும் கொல்லவேண்டுமென்றிருக்கிற செய்தி மோகலின் தாய் மாமனை இரான்மாலுக்குத் தெரிந்தது. அரண்மனைக் காப்போன் **மல்லேசி தோட்டி** யாவைத் தங்ளுடைய காரியத்திற்கு உதவி செய்ய அவ்விருவர்களும் முயற்சித்தும் பயன்படாமற்போயிற்று. இரான்மால் இச்செய்தியையும் உடனே அறிந்து மோகல் ராணுவைத் தக்க பந்தோபஸ்துடன் இருந்து வரும்படி எச்சரித்தான். சிற்றப்பன் மார்கள் தன்னைக் கொல்ல மாட்டார் களென்று ஒருவித பயமுமின்றி, நிஷ்கபடமாகவேவழக்கப்படி இராணு மோகல் இருந்துவந்தான். மோகலைக்கொல்ல அவ்விருவர் களுக்குத்தக்க சமயம் வாய்த்தது. மோகலுக்கு ஏழுபிள்ளைகளும் ஒரு பெண்ணுமுண்டு. அப்பெண் நல்ல ரூபசௌந்தரியாயிருந்தாள், அவளுக்கு **லால் பாய்** என்று பெயரிட்டனர். அப்பெண்ணை ககரூன் சமஸ்தானத்தைச் சேர்ந்த கீசி வமிசத்தலைவனை **அச்சல்ஸிங்** குக்கு மோகல் விவாகஞ்செய்து கொடுத்தான். அச்சல்ஸிங், தன்னுடைய சமஸ்தானத்தின்மீது அன்னியர் எவராகிலும் படையெடுத்துவந்தால் அக்காலத்தில் தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று மோகல் இராணுவைக் கேட்டு, அங்ஙனமே அவனுடைய வாக்குறுதியையும் பெற்றிருந்தான். அச்சல்ஸிங் சமஸ்தானத்தின்மீது மாளவ தேசாதிபதி ஹோஷங் படையெடுத்தான்

படையெடுப்பை யறிந்த அச்சல்ஸிங் தன் மகன் தீராஜ் ஸிங்கை மோகல் இராணுவிடம் அனுப்பி பூர்வம் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறை வேற்றும்படி வேண்டினன். உடனே, மோகல், தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் கூறி சித்தூர் கோட்டையை விட்டு பெரியசேனையுடன் மோகல் புறப் பட்டான். வழியில், மோகலுடைய மித்திரனும் சிற் றரசருமான இடார் சமஸ்தானதிபதி சான்வல் தாஸும் ஒரு சிறியபடையுடன் மோகல் இராணுவுடன் வந்து சேர்ந்தான். மோகலுடன் சாசாவும் மைராவும் புறப் பட்டனர். தங்கள் சூழ்ச்சிக்குச் சாதகமாக இரண் டொரு சிற்றரசர்களையும் மோகல் இராணுவின் சைன் னியத்துடனேயே யழைத்துக் கொண்டு சென்றனர். மாபாபன்வாரும் இன்னும் இரண்டொரு சிற்றசர்களும் அச்சூழ்ச்சிக்குச் சாதகமாகவே யிருந்தனர். சாசா வுக்கும் சான்வல்தாஸுக்கும் நல்ல சிநேகமுண்டு. அந்தசிநேகத்தால் இராணுமோகலை, சாசா கொல்ல எத்தனித்திருப்பதை யறிந்து, சான்வல்தாஸ், மோகல் இராணுவுக்குத் தெரிவித்து எச்சரிக்கை செய்தான். இங்ஙனம் எச்சரிக்கை செய்தும் இராணு மோகல் நம்பா மல, சிரித்தான். பாகர் என்னுமிடத்தில் கூடார மடித்து இராணுமோகல் தங்கி யிருக்கையில், ஒரு நாளிரவில் சாசாவும் மைராவும் தங்கள் காரியத்திற்கு உதவிசெய்ய வந்த சிலரை யழைத்துக் கொண்டு மோகலை எதிர்த்தான். உடனே. இராணுமோகல் சிற்றப்பன்மார்களின் சூழ்ச்சியை யறிந்து, தற்காப்புக் காக ஆயுதபாணியாய் நின்றான். இராணுமோகல் அவனுடைய அரண்மனைக்காப்போன் மல்லேசி தோட்

டியா, இராணுமோகலுடைய பட்ட மகிஷிகளிலொருத்தியான ஹாதிஜீ ஆகிய இம்மூவரும் தயாராக நின்றனர். இராணுமோகலே ஒன்பது பேர்களும், மல்லேசியை ஐவரும், இராணியை ஐவருமாகத் தாக்கினர்கள். வெகுநாழிகைவரை அம்மூவர்களும் போராடி சூழ்ச்சிக்காரர்களில் பத்தொன்பது பேரைக்கொன்று, சாசாவையும் மாபாபன்வாரையும் காயப்படுத்திக் கடைசியாக மாண்டனர். இராணுமோகலுக்குச் சகாயஞ்செய்த சான்வல்தாஸனும் மாண்டான். இங்ஙனம் சூழ்ச்சிக்காரர்கள் இராணுமோகலே எதிர்த்துச் சண்டை செய்துவருவதை யறிந்த மோகல் புத்திரனை கும்பன், ஒருவருமறியா வண்ணம் கூடாரத்தினின்றும் நீங்கி, அவ்வூர் கிராமாதிகாரியிடம் அதிவேகமாய்ச் செல்லக்கூடிய குதிரையின் மீது ஏறி தப்பித்துக்கொண்டு சென்றான். கும்பனைக் கொல்ல சாசா தேடியும் அவன் அகப்படாமையைக்கண்டு, திரும்பி, உடனே மீவார தேசத்திற்குச் சென்று, மீவாரதேசாதிபதியாக சிம்மாதனமெய்தினன். மாபா பன்வார் திவானுக ஆயினன். சாசா தன் சூழ்ச்சியால் மோகல் இராணுவைக் கொன்று மீவார இராஜ்யாதிபதியானன். மோகல் இராணுவின் அநியாய வதையை யறிந்த தாய்மாமன் இரான்மால் உடனே, உக்கிரமான கோபங் கொண்டு 'மோகலேக் கொலேசெய்த பாபியைப் பழிக்குப் பழிவாங்குவேன்; சாசாவைக் கொல்லும்வரை நான் என்தலேயில் பாகை யொன்றையும் வையேன்' என்று சபதஞ்செய்து புறப்பட்டான். இராஜபுத்திரர் களுக்குள்ளே துக்க சம்பவம் ஏற்படுமானல், அவர்கள் அக்காலத்தில் தலேப்பாகையைக் களேந்துவிட்டு ஒரு சிறிய துண்டைத் தலேக்குச்

சுற்றுவது வழக்கம். இது துக்கக்குறியைக் காட்டும் அடையாளமாம். இரான்மால் நாகர் நகரை விட்டு சித்தூர்வந்து சாசாவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் முறியடித்து கும்ப ராணாவை சிம்மாதானத்திலேற்றினன். சாசாவும் அவனுடையபந்துமித்திரர்களும் இரான்மாலால் முறியடிக்கப்பட்டு, பாய்கோத்ர பர்வதத்திற்கோடிச் சென்றனர். ஆங்கு, அவர்கள் அப்பர்வதத்தின் மீதுள்ள பழையகோட்டையைச் செப்பனிட்டு அதில் வசித்து வந்தனர். அம்மலையை நன்கு பலப்படுத்தியும் வந்தனர். சாசாவும் அவனுடைய வர்க்கத்தார்களும் பாய் பர்வதத்திலிருப்பதை யறிந்த இரான்மால், உடனே அவ்விடம் வந்து சேர்ந்தான். பர்வதம் வெகு செங்குத்தாயிருந்தது. இரண்டொருதடவை அம்மலையின் மீது ஏறப்பிரயத்தனஞ்செய்தும் இரான்மாலுக்கு முடியவில்லை. கடைசியாக பீல்சாதியார்களின் உதவியின்றி அம்மலையின் உச்சிக்குப்போக முடியாதென அவன் நினைத்தான். பீல் சாதியார்களுக்கு இவனிடம் பகையுண்டு. பாய்பர்வதத்தின் அடிவாரத்திலிருக்கும் கிராமங்களில் ஒன்றிற்குச் சொந்தக்காரனை பீல் தலைவனொருவனை ஒருசமயம் இரான்மால் கொன்றான். அங்ஙனம், கொன்றதற்காக, பீல் தலைவனுடைய புத்திரர்கள் இரான்மாலைக் கொல்லவழி தேடியிருந்தனர். இங்ஙனம், இந்நிலைமையில் இரான்மால், தன் மனதைத்திடப்படுத்திக்கொண்டு சந்தடி செய்யாமல், பீல்தலைவனுடைய புத்திரர்களில்லாத சமயத்தில் அவ்வீட்டிற்குச் சென்று, இறந்தவனுடைய மனைவியைக் கண்டு நமஸ்கரித்து, அக்காள் ! என்று அழைத்து உட்கார்ந்தான். அவளும் இரான்மாலையறிந்து, ' தம்பீ!

எங்களுக்கு மகத்தான தீமையைச் செய்திருக்கிறாய், என்றாலும் நீ எங்கள் வீடு தேடிவந்ததால், உன்னை நாங்கள் ஒன்றும் செய்யோம்' என்று கூறி யோக க்ஷேமங்களை விசாரித்தாள். உடனே, அவள், தன் மைந்தர்கள் வருஞ் சப்தத்தையறிந்து, இரான்மாலை வீட்டிலுள்ள ஓர் அறையில் ஒளித்து வைத்து. அவன் ஏறி வந்த குதிரையைப் புறக்கடையில் ஓர் பக்கத்திற் கட்டி வைத்துவிட்டுத் தன் மைந்தர்களை உபசரித்து அன்னமிட உட்கார்ந்தாள். அன்னமிட்டுப் பரிமாறி வருந் தருணத்தில், மைந்தர்களைப்பார்த்து, அப்பா மக்களே! உங்கள் தகப்பனாரைக் கொன்ற இரான்மால் நமது வீட்டுக்கு வந்தால், நீங்கள் அவனை என்ன செய்வீர்கள் என்று அவள் கேட்டாள். அம்மக்களில் கடையோன் “அவன் வந்தால், உடனே நான் கொல்வேன் என்றான்; மூத்தமகன் ‘ தாயே! என் தகப்பனாரைக் கொன்று நமக்குப் பரம அபராதஞ் செய்திருந்தாலும், அவன் நம் வீடு தேடி வருவானாகில், அவனை உபசரித்து விருந்தளிப்பேன்! என்றான். மூத்தமகன் பெருந்தன்மையைப் புகழ்ந்து, உடனே புன்சிரிப்புடன், இரான்மாலைக் கூவியழைத்தாள். இரான்மால், உடனே அவ்வறையைத் திறந்து வெளிவந்து நின்றான். அம்மைந்தர்கள், ‘ஐயா! இரான்மால் நீ கொல்லப்படும் இடத்தை நாடி வந்த காரணமென்ன?’ என்று கேட்டனர். இரான்மால், ‘என் மைத்துனர்களே! சாசாவையும் மைராவையும் கொன்று பழிக்குப் பழிதீர்க்காத வரையில் நான் புசிப்பதில்லையென்று விரதஞ் செய்துகொண்டேன்; உங்களுடைய உதவியால் நான் அக்காரியம் நிறைவேறவேண்டும்.’ என்றான். அம்மைந்தர்கள்,

இனி தாங்கள் சாசாவுக்கும் மைராவுக்கும் யாதொரு உதவி செய்வதில்லையென்றும், இரான்மாலுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி செய்தனர். இரான்மால் தன் கூடாரத்துக்கு வந்து, மறுநாள் ஆயிரம் வீரர்களுக்கு மேற்பட்ட படையொன்றைத் திரட்டி, உடனே பாய் பர்வதத்தின்மீது ஏற ஆயத்தமானன்: மலை உச்சிக்குப் போகும் ஒரு குறுக்கு வழியில் உள்ள ஒரு பெரிய கற்பாரையின் இடையே ஒரு பெண் சிங்கம் குட்டி போட்டிருப்பதால், சிலதினங்கள் கழிந்த பிறகு உச்சிக்குச் செல்லலாம் என்று பீல் மைந்தர்கள் கூறினர். இரான்மால், ஒரே பிடிவாதமாய், இன்றே புறப்படவேண்டும், வழியில் சிங்கம் குட்டி போட்டிருப்பதால் பாதகமில்லையென்று பதிலளித்துத் தன் வீரர்களை விளித்து அவர்களை அம்மலையிலுள்ள இரண்டொரு குறுக்கு வழிகளிலும் பந்தோபஸ்துடன் காவல் காக்க வைத்துவிட்டுச் சில வீரர்களுடனும், மைந்தனுடனும் மலையேறிச் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும், பீல் மைந்தர்கள் கூறினபடியே பெண் சிங்கமொன்று அக்கினிக் கொழுந்து விட்டு எறிவது போன்ற கண்களைத் திறந்து கொண்டு கர்ச்சித்தது. அப்பெண்சிங்கம் அவ்வீரர்களின் மீது பாய வருகையில் இரான்மாலின் மைந்தன் அர்த்தகமால் தன் நீண்ட பட்டாக் கத்தியை அச்சிங்கத்தின் வயிற்றிற் குத்தினன். அச்சிங்கம் மேக கர்ச்சனைக்கும் பெரிதாய்க் கர்ச்சனை செய்து மாண்டது. இரான்மால் வெகுசந்தோஷங் கொண்டு தங்கள் காரியம் கட்டாயம் சித்தியாகும் என்று கொண்டு வெகு செங்குத்தாயுள்ள அப்பர்வதத்தின்மீது ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஏறிச்சென்றனர். அவ்வீரர்கள்

மெள்ள மெள்ள ஏறிச் சென்று கடைசியாக அப்பர்வ தத்தின் உச்சியிலுள்ள கோட்டையின் மதில் சுவற்ற ண்டை வந்து சேர்ந்தனர். ஒருவர் பின்னொருவராகச் சந்தடி செய்யாமல், அக்கோட்டையின்மதில்சுவற்றைத் தாண்டி கோட்டைக்குள் நுழைந்தனர். அங்ஙனம் அவ் வீரர்கள் மதில் சுவற்றைத்தாண்டின காலத்தில்ஆயுதங் கள் ஒன்றோடொன்றுஉராய்ந்த சப்தத்தால் சாசாவின் குமார்த்தி திடீரென்று கண்விழித்தெழுந்து,' அப்பா! நம் கோட்டையில் சத்துருக்கள் யாரோ வருவது போல்எனக்குக்கேட்கிறது; என்றுமில்லாத சப்தத்தை இன்றுகேட்டேன்' என்றுகூறினாள். சாசா, பெண்ணே! நீ எதற்கும் பயப்படாதே, நம் சத்துருக்கள் இந்தபர் வதத்தின் உச்சிக்கு வரமுடியாது; இது மழைகாலமா தலால், மேகத்தின் கர்ச்சனை உனக்குக் கேட்டிருக்கும். வீணாகபயப்படாமல் நித்திரை போ' என்று கூறினான். சாசா கூறிமுடிந்த சிலநிமிஷங்களுக்கெல்லாம் இரான் மால் வீரர்கள் கோட்டையின் வாசலில் நின்று, சாசா வையும், அவனுடைய தம்பி மைராவையும் எதிர்த்தனர். சௌஹான் ஸூஜா சாசாவையும், ராத்தோர் வீரனை இரான்மால் மைந்தன் மைராவையும் கொன்று கூற்று வனுக்கு இரையாக்கினர். மோகல் இராணுவின் மரணத்திற்கு சாசாவுக்கு உடந்தையாயிருந்த மாபா பன்வாரையும் கொல்ல அவன் இருப்பிடம் நோக்கிச் சென்றனர். மாதர்கள் மத்தியில் இருப்பவர்களையும், மனைவியுடன் இருக்கும் புருடர்களையும் கொல்வதில்லை என்னும் விரதத்தைக் கொண்டவனாக இரான்மால் இருப்பதை யுணர்ந்த மாபா பன்வார், பெண் உடை தரித்துக்கொண்டு வெளிச்சென்று தப்பியோடினன்.

வெகுநாழிகை வரை இரான்மால் கூவியழைத்தும் வராமையைக் கண்டு, கதவையிடிக்கவே, ஓர் ஸ்திரீ, 'ஐயா! என் ஆடையைத்தரித்துக்கொண்டு அவர் அப்பொழுதே வெளிச் சென்று விட்டார்; நான் ஆடையின்றி நிர்வாண மாயிருப்பதால், வெளிவர முடியாமலிருக்கிறேன்' என்றாள். இரான்மால், மாபா பன்வாரின் தந்திரத்தைக்கண்டு கோபங் கொண்டு அவனைத்தேட வீரர்களை ஏவினன். மாபாபன்வாரும் சாசாவின் மைந்தனும் தப்பித்துக் கொண்டு மண்டூ சமஸ்தானத்தில் அடைக்கலம் புகுந்தனர். சாசாவின் குமாரத்தியைஇரான்மால் மனைவியாக்கிக் கொண்டான். ஸிஸோதியா சாதியைச் சேர்ந்த 500 கன்னிகைகளை யும் மணமுடித்துத் தன் ராத்தோர் வீரர்களுக்குக் கொடுப்பதாக யிருப்பதை சோண்டாவின்சகோதரனை **இராகவதேவன்** அறிந்து, அக்கன்னிகைகளை இரான்மா லிடமிருந்து மீட்டுக்கொண்டு அவரவர் இஷ்டப்படி அனுப்பினன். இரான்மாலுக்கும் இராகவதேவனுக்கும் ஏற்கனவேயிருந்த பகைமை இச்சம்பவத்தால் முன்னி னும் அதிகமாக பலமடைந்தது. இரான்மால் சாசாவை யும் மைராவையும் தான்செய்த சபதப்படி நிறைவேற்றி விட்டுமீவாரதேசத்திற்கு வந்தான். மார்வார் தேசத்தை க்காட்டினும் மீவாரதேசம் மிகவும் வளமை பொருந்தி யதால், இரான்மாலும் அவனுடைய ராத்தோர் வீரர் களும் கும்பமகாராணா விடமேயிருக்கத் தீர்மானங் கொண்டனர். மீவார.தேசநிர்வாகம் யாவும் அநேகமாக வரவர ராத்தோர் வீரர்களாலேயே நடத்தப்பட்டு வரலாயின. கும்பமஹாராணா சிறுபிராயத்தினனாயிருந் ததால், அவனைத் தக்கபடி பாதுகாக்க, சோண்டாவின்

தம்பியான இராகவதேவர் செய்த பிரயத்தனங்கள் யாவும் பிரயோசனமின்றிப் போயிற்று. கும்பமஹாராணுவின் தாயார்ராத்தோர் வமிசத்தைச் சேர்ந்தவளாதலால், அவன் தன் சகோதரர்களையும் வமிசத்தாரையும் மகிழ வைப்பதையே பெரிய கடமையாகக் கொண்டிருந்தாள். இராகவதேவர் மீவாரசாம்ராஜ்யத்தில் ராத்தோர் வீரர்களின் ஆதிக்கத்தைக் கண்டு சகிக்கவில்லை. இரான்மாலின் அதிக்கிரமித்த அதிகாரங்களையும், ராத்தோர் வீரர்களின் அடாதகாரியங்களையும் இராகவதேவர் வெறுத்தார். தானேதாகிலும் தடைசெய்தால் கும்பமஹாராணுவின் தாய்க்கு மனவருத்தம் நேரிடுமோவென்று மனங்கசிந்து ராத்தோர் வீரர்களின் செயல்களைச் சற்றுங் கண்டிக்காமல் இஷ்டம்போல் விட்டார். இரான்மால், மீவார் இராஜ்யாதிபதியாக வேண்டுமென்னும் எண்ணம் வெகுநாளாக யிருந்ததால், இராகவதேவர் இருக்கும் வரை தன்னெண்ணம் பலிக்காதெனக் கண்டு, இராகவதேவரைத் தந்திரமாகக்கொல்ல சூழ்ச்சி செய்து வந்தான். இராகவதேவருக்கு இரான்மால், ஓரங்கள் சுருக்கு வைத்துத் தைத்து ஒரு அங்கியை கௌரவ சம்பாவனையாக அனுப்பினன். அச்சுருக்கு வைத்துத் தைத்த அங்கியை இராகவதேவர் போட்டுக் கொள்ளத் தலையில் மாட்டிக்கொண்டதும், கழுத்திலும் கைகளிலும் அந்த அங்கி அப்படியப்படியே சுருக்கு மாட்டிக் கொண்டது. அதைக்கழற்ற முடியாமல் தத்தளித்திருக்கையில், இரான்மாலின் ஏற்பாட்டின்படி, அந்தரங்க ராத்தோர் வீரர்களிருவர் இராகவதேவரைக் கத்திகளினல் குத்தினர். இராகவதேவர் நிராயுதபாணியாய்ச்சுருக்கிட்ட அங்கியால் முகந்தெரியாமலிருந்த

நிலைமையில் கொல்லப்பட்டார். இராகவதேவர் மாண்டதையறிந்த சனங்கள் மிகவும் வருத்தப்பட்டு ராத்தோர் வீரர்களையும் இராணியையும் வாயோயாமல் தூற்றினர். இராகவதேவர், மகா உத்தமர். நல்லபுத்திசாலி. சனங்களிடத்தில், மிகவும் கருணைகொண்டவர். இராஜதந்திரத்திலும் போர்த்திறமையிலும், தேசாபிமானத்திலும் இணையற்றவர். சோண்டாவைவிட மிகவும் தியாக புத்தியுள்ளவர். ஜனங்கள் இவரைத் தங்கள் பிதாவென மதித்திருந்தனர். அத்தகைய குணத்தைப் பெற்ற இராகவதேவர் கொல்லப்பட்டார் என்ற செய்தியை யறிந்த மகா சனங்கள் வெகு உக்கிரமாக யிருந்தனர்.

2. மார்வார் சுவாதீனம்

தைமூர் இந்தியாவின் மீது படையெடுத்து, டில்லிமா நகரை யாண்டு வந்த முகம்மத் தோக்ளாக் சுல்தானை முறியடித்து, டில்லிப்பட்டணத்தை சூறையாடினதிலிருந்து தோக்ளாக் வம்சம் தலையெடுக்க முடியாமற் போயிற்று. தைமூர் இந்தியாவைக் கொள்ளையடித்துத் துருக்கிஸ்தானத்திற்குத் திரும்பிச் சென்றதும், முகம்மத் தோக்ளாக் டில்லிக்குத் திரும்பி வந்தான். ஆனால், முகம்மத் தோக்ளாக் அதிகாரப் பெருமையையும் கௌரவத்தையுமிழந்து பெயருக்கு மாத்திரம் சுல்தானாக யிருந்தான். 15.ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாளவம், குஜராஷ்டரம், கான் முதலிய சமஸ்தானங்கள் முகம்மத் தோக்ளாக்கின் அதிகாரத்திற்குட்படாமல் சுதந்தர சமஸ்தானங்களாயின. டில்லி சிம்மாசனத்திற்கு அச்சமஸ்தானாதிபதிகள் இராஜ விசுவாசப் பிரமாணங்கள் கூறாமல் பூர்ணசுதந்தரத்துடனிருந்தனர். 15-ம் நூற்றாண்டின் இடைகாலத்திலே அச்சமஸ்தானங்களோடு கும்பமஹாராணா போர் புரிந்தான். கூர்ச்சரம் கி.பி. 1297-ம் வருடம் வரை சாளுக்கிய வம்சத்தைச சேர்ந்த பகேல மரபினர்களின் சுவாதீனத்திலிருந்தது. பிறகு அலாவுதீன் உலுகுகானையனுப்பி கூர்ச்சரத்தைச் சுவாதீனப்படுத்திக் கொண்

டான். கூர்ச்சரத்தைப் பூர்வம், சித்த ராஜர், ஜயஸிங்கர் குமாரபாலர் முதலிய மன்னர்கள் அன்ஹுல் வார பட்டணம் என்னும் தலை நகரில் அரசாண்டு வந்தனர். அவர்கள் அரசாண்ட காலத்தில் கூர்ச்சரம் மிகவும் பெருமை வாய்ந்திருந்தது. கூர்ச்சர மன்னர்கள், மாளவ தேசத்தையும் மீவார தேசத்தையும், ஆஜ்மீரையும் சுவாதீனப்படுத்தியிருந்தனர். அலாவுதீன் கூர்ச்சரத்தை சுவாதீனப்படுத்தி வந்த நாள் முதல் கி.பி. 1407-ம் வருடம் வரை கூர்ச்சர தேசாதிபதிகள் டில்லி சிங்காதனத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தனர். கூர்ச்சரத்தில் இந்து மன்னர்களுடைய ஆதிக்கம் ஒழிந்தது. முகம்மதிய ஆதிக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. கூர்ச்சரத்திற்கு வைஸிராயாக (இராஜப்பிரதிநிதி) யிருந்த ஜாபர்கான் டில்லி சிம்மாதனத்திற்குக் கீழ்படாமல், சுதந்தர முள்ளவனாக அக்கூர்ச்சர நாட்டிற்கு முஸபர்ஷா என்னும் பெயரால் சமஸ்தானாதிபதியானான். ஜாபர்கான் பூர்வம் இந்துவாகயிருந்தவன். அப்பொழுது அவனுக்கு சதாரன் என்று பெயர். தாழ்ந்த க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவன். அவன் இஸ்லாம் மதத்தைத் தழுவினதும், டில்லி நகரை யாண்டு வந்த சுல்தான் **பீரோஸ்ஷா தோக்ளாக்கின்** சமையற்சாலைக்கு அதிபதியாக யிருந்தான். சின்னாள் பிறகு, பீரோஸ்ஷா ஜாபர்கானைக் கூர்ச்சர தேசத்திற்குப் பிரதிநிதியாக நியமித்து அனுப்பினான். ஜாபர்கான் கூர்ச்சர சமஸ்தானாதிபதியாக முஸபர்ஷா என்னும் பெயரைக் கொண்டு விளங்கினதும், தன் தம்பி ஷம்ஸ்கானை நாகர் சமஸ்தானத்திற்குத் தன் பிரதிநிதியாக நியமித்தான். ஷம்ஸ்கானும் அவனுடைய சந்ததியார்களும் வெகு காலமளவு நாகர் சமஸ்தான

த்தை யாண்டு வந்தனர். ஷம்ஸ்கானுக்குப் பிறகு அவன் மகன் பிரோஸ்கான் சமஸ்தானாதிபதியானான். இவன் நல்ல போர்த்திறமை வாய்ந்தவன். மோகல் ராணு வோடு கத்திச் சண்டை செய்தவன். மோகல் இராணு வோடு இவன் எதிர்த்துச் சண்டை செய்து பந்தன் வாராஎன்னுமிடத்திற்கருகாமையில் வெற்றிபெற்றான். அவ்வெற்றியால் கர்வமடைந்து மீவார தேசத்தின்மீது பிரோஸ்கான் படையெடுத்து வந்தான். ஆனால், மீவார இராஜ புத்திரவீரர்கள் தேசாபிமான வெறிகொண்டு எதிரியை ஜாவர் என்னுமிடத்தில் முறியடித்தார்கள். பிரோஸ்கான் தோல்வியடைந்து தன்னூருக்குத் திரு பிச் சென்றான். கி.பி.1455-ம் ஆண்டில் கும்பமஹா ராணு, நாகர் சமஸ்தானாதிபதியை முறியடித்து அச் சமஸ்தானத்தை மீவார சாம்ராஜ்யத்துடன் சுவாதீனப் படுத்திக்கொண்டான். கூர்ச்சரத்தை யாண்ட சுல்தா னுடனும் கும்பமஹாராணு போர்செய்து அந்நாட்டை யும் சுவாதீனப்படுத்திக் கொண்டார். வடஇந்தியாவில் அக்காலத்தில் மிக்க பலத்துடனிருந்த இவ்விரண்டு முகம்மதிய சமஸ்தானாதிபதிகளையும் முறியடித்து அவர்களைத் தன் கீழ்ப்படுத்தினார். நிற்க, மாளவதேசம் கி.பி. 1310-ம் ஆண்டுவரை இந்து மன்னர்களுடைய ஆதீனத்திலிருந்து வந்தது. 1310-ம் ஆண்டின் முடி வில் டில்லியை யாண்டுவந்த சுல்தான் கியாஸுதீன்பால் பன் ஒரு பெரிய படையை யனுப்பி மாளவதேசத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டான். பிரோஸ் தோக்ளாக் கின் பிள்ளையான இரண்டாவது சுல்தான்மகம்மத் அர சாட்சி காலம் வரை மாளவதேசம் டில்லி சுல்தான்களு க்குட்பட்டிருந்து வந்தது. பிரோஸ்தோக்ளாக் காலத்

தில் இவன் மாளவதேசத்திற்குத்தன் பிரதிநிதியாக **திலாவர்கான்கோரி** என்பவனை நியமித்தான். இவன் உண்மைப்பெயர் ஹாஸன்.கி. பி. 1398-ம் ஆண்டில் அமீர் தைமூர் டில்லிப்பட்டணத்தைப்பிடித்துச்சூறை யாடினகாலத்தில், பிரோஸ்தோக்ளாக்கின் பிள்ளை சுல்தான் மகம்மத் தோக்ளாக் பயந்து குஜராஷ்டிரத்தை நோக்கி யோடினன். குஜராஷ்டிரத்தின் வழியில் மீவார தேசத்தைச்சேர்ந்தமஹாராணுஅவனைப்போகவிடாமல் வழிமறிக்கவே சுல்தான் மகம்மத்தோக்ளாக் மாளவதேசத்தையடைந்தான். திலாவர்கான் சுல்தானை அரசனுக்குரிய மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்துத் தன்னிடம் வைத்துக்கொண்டான். தைமூர் சூறையாடித் தன்னூர் திரும்பினதும் மகம்மத்தோக்ளாக் டில்லிக்குப் போய்ச்சேர்ந்தான். கி. பி. 1401-ம் வருடத்தில் திலாவர்கான் சுதந்தர சமஸ்தானாதிபதியாகப் பறைசாற்றி, தாராநகரைத்தலைநகராக்கிக் கொண்டான். மாளவதேசம் தனி சமஸ்தானமாக கி. பி. 1571-ம் ஆண்டுவரையிருந்தது. அக்பர்சக்கரவர்த்தி தன் சாம்ராஜ்யத்துடன் மாளவதேசத்தைச் சேர்த்துக்கொண்டார். திலாவர்கான் கோரி அரசாண்டுவருங்காலில், அவனுடைய மகன் சுல்தான் **ஹோஷங் கோரி**, இராஜ்ய ஆசைமேலிட்டுத் தன் தகப்பனைக் கொன்று மாளவ சமஸ்தானாதிபதியானன். சுல்தான் ஹோஷங் கோரியின்பிள்ளை, மகம்மத்கான் என்பவனால்கொல்லப்பட்டான்.ஹோஷங் கோரியின்பிள்ளை மாண்டதும் மகம்மத்கான், **சுல்தான் மகம்மத் கில்ஜி** என்னும் பெயரைவகித்து சிம்மாதனமெய்தினன். இவனுடைய அரசாட்சியில் மாளவதேசம் மிக்க பெருமையுடன் கீர்த்திபெற்றிருந்தது.

இவனுடனேயே கும்பமஹாராணு போர் செய்து இராஜபுத்திர வீரர்களின் தீரச் செயல்களைக் காண்பித்தார். சுல்தான் மகம்மத் கில்ஜியினிடமே சாசாவின் மகன் எக்காவும், மோகல்ராணுவின் கொலைக்கு உடந்தையாயிருந்த மாபாபன்வாரும் அடைக்கலமாக யிருந்தனர். மோகல் இராணுவைக் கொன்றதற்காக மாபாபன்வாரைத் தன்னிடம் கொடுத்துவிடும்படி மீவார சமஸ்தானதிபதி கும்பமஹாராணு சுல்தானைக் கேட்டும், சுல்தான் இணங்கவில்லை. இருவர்களுக்கும் சண்டையுண்டாயிற்று. நிற்க, மீவார சமஸ்தானத்தை மோகல் இராணுவுக்காகத் தியாகஞ்செய்த சோண்டா, பலகாரணங்களை யுத்தேசித்து மீவாரை விட்டுவிட்டு மாளவதேசம் வந்தான். மாளவதேசாதிபதி சுல்தான் மகம்மத் கில்ஜி, சோண்டாவுக்கு மரியாதைசெய்து அவனுடைய சம்ரட்சணைக்காக ஹலார் என்னும் ஒரு பெரிய கிராமத்தை ஜாகீராகக் கொடுத்து உதவிசெய்தான். கும்பமஹாராணு சுல்தான் மீது படையெடுத்து வரவே, சோண்டாவை யழைத்து, 'அன்பனே,' உம்முடைய தம்பி இராகவதேவரைக் கொன்ற இரான்மாலைக் கொல்ல அவன்மீது படையெடுத்து நீங்கள் ஏன் செல்லக் கூடாதென' சுல்தான் கேட்டான்.' சுல்தானவர்களே! இரான்மால்மீதும் ராத்தோர்படை மீதும் படையெடுத்துப் போர் செய்ய எனக்கு இஷ்டமாயினும், இப்பொழுது கும்பமஹாராணுவின்படை மீது போர் செய்ய நான் இசையவில்லை' என்று சோண்டா பதிலளித்தான். சோண்டா, மண்டோகரத்தைவிட்டுத் தன் கிராமமாகிய ஹலார் ஜாகீருக்குப் போய்ச் சேர்ந்தான். கி. பி. 1440-ம் ஆண்டில் கும்ப

மஹாராணாவின் படையும் சுல்தான்படையும் சித்தாருக்கும் மந்தஸோருக்கும் மத்தியிலுள்ள இடத்தில் போர் செய்தது. ஒருவருக்கொருவர் சற்றேனும் இளைக்காமல் சிலநாள்வரை சண்டைசெய்தனர். பிறகு, சுல்தான் படை வர வர பலஹீனமடைந்தது. மஹாராணாவின் வீரர்கள் வெகுஉற்சாகத்துடன் போர்செய்து வெற்றி பெற்றனர். சுல்தான் படை கடைசியாகச் சின்னு பின்னப்பட்டு தோல்வியடைந்தது. மண்டேவை மஹாராணா முற்றுகை யிட்டு வளைத்துக் கொண்டார். சுல்தான், மாபாபன்வாரையழைத்து, 'இனி நான் உன்னைக் காப்பாற்ற முடியாது; என் நிலைமை மிகவும் நெருக்கடியாக யிருக்கிறது' என்று கூறினான். மாபா பன்வார், உடனே சாசாவின் மைந்தனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு கோட்டையைத்தாண்டி குஜ்ராஷ்டிரத்திற்குச் சென்றனன். கோட்டை தகர்க்கப்பட்டது. சுல்தான் சிறைபட்டான். கும்பமஹாராணா சுல்தானைச் சிறைப்படுத்தியழைத்துக் கொண்டு சித்தூர்வந்து சேர்ந்தான். மாளவ தேசாதிபதியான சுல்தான், மகம்மத் கில்ஜியுடன் போர்செய்து வெற்றியடைந்த காரணத்தால், கும்பமஹாராணா சித்தூர் கோட்டையில் ஜயஸ்தம்பமொன்றை எடுப்பித்தார். இது இன்னும் இருந்து வருகிறது. சுல்தான் மகம்மத் கில்ஜி ஆறுமாத காலம் சித்தூரில் சிறைபட்டிருந்தான். பிறகு, கும்பமஹாராணா அவனை விடுவித்து சிலவீரர்களையும் பொருள்களையும் கொடுத்து அனுப்பினார். கும்பமஹாராணாவின் பெருந்தன்மை மிகவும் மெச்சத்தக்கது. ஆனால், சுல்தான் அந்நன்றியை மறந்து தன் ஜீவிய காலம் வரை கும்பமஹாராணாவைக் கொல்லப்

பல சூழ்ச்சிகள் செய்துவந்ததுடன், கும்பமஹாராணு வுக்கு விரோதமான சமஸ்தானதிபதிகளுடன் சேர்ந்து எதிர்த்தும் வந்தான். கடைசியாக, சுல்தான் தன் எண்ணம் ஈடேருமல் மாண்டான். கும்பமஹாராணு மீவார தேசத்தில் உள்ள பல குன்றுகளைச் செப்பனிட்டுப் பலமான கோட்டைகளை யெடுப்பித்து வந்தார். கோட்டைகள் எடுப்பிப்பதில் இராஜபுத்திரமன்னர்களுள் இவர் போன்றதிறமைவாய்ந்தவர்எவருமில்லை. கோட்டையின் அரண்வலியை இவர் உணர்ந்ததுபோல இராஜபுத்திரமன்னர்கள் எவரும் உணரவில்லை. நிற்க, மாபாபன்வாரும், சாசாவின் மைந்தன் எக்காவும் குஜராஷ்டிரத்தில் அடைக்கலமாகப் போயும் பயனில்லாமையைக்கண்டு, சாட்சிகாரன் காலில் வீழ்வதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் வீழ்வது நலமெனக் கொண்டு, உடனே மீவார தேசம் நோக்கிப் புறப்பட்டு கும்பமஹாராணுவிடம் சரணுகதியடைந்தனர். கும்பமஹாராணு, அவ்விருவர்கள் செய்த பழிகாரியங்களைச் சற்றும் நினைக்காமல், அவர்களை மன்னித்துத் தன்னிடமே யிருக்கும்படி கூறினர். நிற்க, கும்பமஹாராணு சிறுபிராயத்தினனுயிருக்கையிலே அவனுடைய தாய்மாமன் இரான்மால், கும்பமஹாராணுவுக்குரிய மீவார சாம்ராஜ்யத்தை விசாலப்படுத்தினன். மோகல் இராணுவைக் கொன்றவர்களை நாசப்படுத்திப் பழிக்குப் பழிதீர்த்து மீவார சமஸ்தானத்தில் இரான்மால் நடுநாயகமாய் விளங்கினன். ராத்தோர் வீரர்கள் வரவர மீவார சமஸ்தானத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவர்களானர்கள். அரசாங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு இலாகாவிலும் ராத்தோர் வீரர்களே தலைமை வகித்து

வந்தார்கள். உத்தியோகங்களின் நியமனமும், உத்தியோகங்களின் நீக்கமும், அரசிறைவசூலிப்பும், இராணுவ அமைப்பும், நீதிமன்றங்களின் பரிபாலனமும் ஆகியயாவும் ராத்தோர் வீரர்களின் அதிகாரத்திலேயே யிருந்துவந்தன. ஸிஸோதியவம்சத்தாருக்கு இயற்கையாக யேற்பட்ட உரிமையும் அந்தஸ்தும் செல்வாக்கும் குறைந்தன. மீவார சமஸ்தானத்தில் தலைமுறை தலைமுறையாக உத்தியோகங்களை வகித்து வந்த வீரர்களுக்குள்ளே மன ஆயாசமுண்டாயிற்று. அன்னிய வமிசத்தினர் மீவார சமஸ்தானத்திற்குள் சகல உத்தியோக அதிகாரங்களை வகித்து வருவதைக்காண அவர்களுக்குச் சகிக்கவில்லை. இதையறிந்த மாபாபன்வார் கும்பமஹாராணா தனியேயிருக்கையில் ஒருநாள் அவரிடம், ராத்தோர் வீரர்கள் மீவார சமஸ்தானத்தைக் கைப்பற்ற யிருக்கிறார்களென்று கூறினான். கும்பமஹாராணா; இரான்மாலிடம் மாபாபன்வாருக்கு ஏற்பட்ட பழைய பகைமையினால் கூறுகிறானென்றெண்ணி வெகு அலட்சியமாக யிருந்துவிட்டார். பின்னொருநாள், சாசாவின் மைந்தன், எக்கா, கும்பமஹாராணாவுக்கு உடம்பு பிடித்துக் கொண்டிருக்கையிலேயே, மஹாராணா நித்திரை போனார்; நித்திரை செய்யும் இராணுவுக்குப் பக்கலில் உட்கார்ந்திருக்கும் எக்கா, ராத்தோர் வீரர்களின் சூழ்ச்சியை நினைத்துக் கண்ணீர் விட்டான். அக்கண்ணீர் மஹாராணாவின் கால்களில் சுடச்சுட விழவே, கும்பன் திடீரென்று கண்விழித்து எக்காவை என்னவென்று கேட்டார். எக்கா, உடனே மனதைத்திடப்படுத்திக்கொண்டு, 'ராத்தோர் வீரர்கள் மீவார சமஸ்தானத்தைக் கைப்பற்ற யிருப்பதையும், மீவார சமஸ்

தானம் அநியாயமாக நம் வம்சத்தார் வசமிருந்து போகப் போவதையும் பற்றி நினைத்துத் துக்கித்தேன்' என்றான். மாபாபன்வார், எக்காமுதலானோர் கூறினதை கும்பமஹாராணா ஆலோசித்து இரான்மால் மீது சற்று சந்தேகங்கொண்டார். இரான்மாலின் நடவடிக்கைகளை வெகுகவனமாய்க் கவனித்து வந்தார்; அங்ஙனமே கவனித்துவரும்படி தன்னுடைய அந்தரங்க விசுவாசிகளிருவர்க்குக் கட்டளையு மிட்டார். இரான்மாலின் நடவடிக்கையும் வரவர மாறுபட்டுவந்தது. அதை அவனுடைய சகோதரி, கும்பமஹாராணாவின் தாயார் கவனித்து வந்தாள். ஒருநாள், கும்பமஹாராணாவின் தாயார் தன் சகோதரன் இரான்மாலைக் கூப்பிட்டு, அவன் நடவடிக்கைகளின் மாறாட்டத்தைக் கூறி கண்டித்தாள். இரான்மால், சற்றேனும் லட்சியஞ் செய்யாமல், அவளுக்கு வெகு துணிகரமாகப்பதில் கூறினான். அங்ஙனம் அவன் பதில் கூறினதையும் சோண்டாவின் இளையவனான இராகவதேவரைக்கொன்றதையும் நினைத்து அவள் ராத்தோர் வீரர்களின் சூழ்ச்சியை யறிந்து விசனப்பட்டாள். தவிர, கும்பமஹாராணாவின் தாயாருக்கு ஓர் அழகிய தாதி இருந்தாள். அவள்பெயர் வாடாமல்லி. அவள் நல்ல யௌவனமும் ரூபமுங் கொண்டவளாக யிருந்தது பற்றி, இரான்மால் அவள் மீது மோகங்கொண்டான். இரான்மால் அவளைத் தன்னிடம் வரவழைத்து வெகு நாழிகை வரை மகாராணியிடம் அனுப்பாமல் பேசிக்கொண்டிருந்தான். இங்ஙனம் சிலநாள் வரை நடந்து கொண்டிருந்தது. மகாராணியார் ஒருநாள் தாதியைத் தன்னிடமே வெகு நாழிகை வரை யிருக்கவைத்தாள்.

வழக்கம்போல் அத்தாதி இரான்மாலிடம் குறித்த மணிக்குப்போகாமல் காலங் கழித்துப்போகவே, இரான் மால், அவளை விரைத்து, 'பெண்ணே! ஏன் இத்தனை தாமதம்; என்ன விசேஷம்' என்று கேட்டான். அவள் ஐயா நான் சுதந்தரமுள்ளவளல்ல; நான் ஒருவருக்கு அடிமைப்பட்டிருப்பதால், அவர்கள் அனுப்பினபிறகு தானே வரமுடியும்: நான் என் செய்வேன் என்றாள். இரான்மால் நன்றாகக் குடித்திருந்தமையால் அத்தாதி யை நோக்கி, இனி நீ கவலைப்படாதே; சித்தூரில் வாழவேண்டுமென்று விருப்பமுள்ளவர்கள் இனி உனக்கு வேலைக்காரர்களாக யிருப்பார்கள்; நீ சிறந்த இராணியாவாய்' என்று கூறிக்கொண்டே, மீவார் சமஸ் தானத்தைக் கைப்பற்ற விருக்கும் தன் எண்ணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக அவளிடம் கூறினன். அத்தாதி நல்ல விவேகமும் நன்றியுள்ளவளுமாதலால் அவள் உடனே நடந்த விஷயங்களொவ்வொன்றையும் மகா ராணியிடம் கூறி, இரான்மால் மீவார் சமஸ்தானத்தை சுவாதீனப்படுத்த விருப்பதையும் தெரிவித்தாள். மகா ராணி உடனே தன் மைந்தன் கும்பமஹாராணுவுக்குத் தெரிவித்தாள். தாயும்பிள்ளையும் வெகுநாழிகை வரை யோசித்துக் கடைசியாக, சோண்டாவின் உதவியின்றி மீவார் சமஸ்தானத்தை ராத்தோர் வீரர்களினின்றும் காப்பாற்ற முடியாதென்று எண்ணி, நடந்த விஷயங் கள் யாவையும் சோண்டாவுக்கு வெகு இரகஸியமாகக் கூறியனுப்பி, அவனை உதவி செய்யவும் வேண்டினார் கள். சோண்டா மீவார் சமஸ்தானத்தை விட்டு நீங் கின போதிலும், மீவார சமஸ்தானத்தில் நடக்கும் ஒவ் வொன்றையும் வெகு இரகசியமாக அறிந்து வந்தான்.

ராத்தோர் வீரர்களின் எண்ணத்தையும் இரான்மால் மீவாரில் செய்யுங் காரியங்களையும், இராகவதேவர் கொல்லப்பட்டதையும் சோண்டா அறிந்து வந்தான். கும்பமஹாராணுவிடமிருந்து அந்தரங்க தூதனொரு வன் வந்து கூறினதும், உடனே சோண்டா உதவிசெய் வதாகப்பதிலளித்தனுப்பினுன். சோண்டா, தன்னிட மிருந்த வனவாஸிகளில் இருநூறு வீரர்களைச் சித்தூ ரிலுள்ள அவர்கள் பெண்டு பிள்ளைகளைப் போய்ப் பார் த்து வரவும், சித்தூர் கோட்டையைக் காவல் காத்து வருபவர்களிடம் சிநேகஞ்செய்துக் கொண்டிருக்கவும் அவ்வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வன வீரர் கள் சித்தூருக்கு வந்து சோண்டாவின் ஆக்ஞைப்படி நடந்து வந்தனர். தவிர, கும்பமஹாராணு சித்தூர் கோட்டையினின்றும் தினம் கீழிறங்கி, மலையின் அடி வாரத்திலுள்ள கிராமத்தார்களுக்கு நன்கு விருந்தளி த்து வரும்படியும், கூறவே தன் பரிவாரங்களுடன் வரவேண்டுமென்றும், கோஸுந்தா என்னும் கிராமத் தில் தீபாவளிதினத்தன்று விருந்து வைத்துக் கொள் ளும்படியும் சோண்டா சொல்லியனுப்பினுன். அப்ப டியே, கும்பமஹாராணு சோண்டாவின் கட்டளைப்படி தினம் சித்தூர் துர்க்கத்தை விட்டுக் கீழிறங்கி அடி வாரத்திலுள்ள கிராமங்களுக்கு விருந்து செய்து வந் தான். தீபாவளிதினம் வந்தது. சோண்டாவின் கட் டளைப்படி கோஸுந்தா கிராமத்தில் வெகு சிறப்பாக விருந்து நடந்தது. இரவும் வந்தது. ஆனால்சோண் டாவைக் காணவில்லை. மிகுந்த துக்கத்துடன் கும்ப மஹாராணுவும், புரோகிதரும் அரண்மனை நோக்கிச் சென்றனர். கும்பன் முதலானோர் சித்தூர் துர்க்கத்

தின் முதற் கோட்டை வாயிலுக்குச் சமீபமாக வந்து கொண்டிருக்கையில், நாற்பது குதிரை வீரர்கள் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தனர். அவர்களின் மத்தியில் மகாவீரனுன சோண்டா மறைவேடந்தரித்து மஹாராணுவுக்குக் குறிப்பாக மரியாதை செய்து சித்தூர் கோட்டையின் வாயிற் புறத்திற்குச் சென்றனன். மற்ெருரு கோட்டை வாயிற் புறத்திற்குள் நுழைந்ததும் வாயில் காப்போர் அவர்களைத் தடுத்தனர். 'ஐயா! நாங்கள் மலையடிவாரத்தின் கீழுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள்; மஹாராணுவினிடம் மரியாதை செலுத்த அவர்களைத் தீபாவளி தினத்தன்று அரண்மனை வரை பந்தோபஸ்துடன் கொண்டுசேர்ப்பது வழக்கம்; அவ்வழக்கத்தைப்பின்பற்றி நாங்கள் முன்னுடி வந்தோம். எங்களுக்குப் பின்னுல் மற்ற வீரர்களும் வருகின்றனர்' என்றுசோண்டாகூறினுன். வாயிற்காப்போர்அவர்கள்மீது சந்தேகங்கொண்டனர். வாயிற்காப்போர் சந்தேகங் கொண்டதைக் குறிப்பாலறிந்த சோண்டா, உடனே தன் பட்டாக்கத்தியை யுருகி, தன் வனவீரர்களைக் கூவியழைத்துப் போருக்குத் தொடங்கினுன். பிரதான வாயிற் காப்போன் சோண்டாவின் கத்திக்கு இரையானுன். அவனுடன் இருந்த மற்ற வாயிற் காப்போரும் அவன் போனவழியே சென்றனர். சோண்டா சித்தூருக்குள் வீரர்களுடன் நுழைந்தானென்ற சங்கதியையும், அவன் எண்ணத்தையுமறிந்த இரான்மால் உடனே **ஜோதா, காந்தல்** முதலிய மற்ற குமாரர்களைக் காப்பாற்றவெண்ணி அம்மைந்தர்களைச் சித்தூருக்குள் யார் அழைத்த போதிலும் வாராமலிருக்க வேண்டுமென்று உறுதியாக எச்சரிக்கை செய்து அனுப்பினுன்.

சோண்டாவின் வார்த்தைக்கிணங்கி கும்பமஹாராஜு, ஜோடா முதலானோர்களைச் சித்தூர் கோட்டைக்குள்ளேவந்து வசிக்கும்படி செய்ய இரான்மாலைக் கேட்டும், இரான்மால் சாக்கு போக்குக் கூறியே வந்தான். இப்படியிருக்க, வாடாமல்லியின் மோகத்தால் இரான்மால் மனம் மிக்க மாறுபாடடைந்தவனானான். ஒரு நாள், நன்றாகக் குடித்துவிட்டு அத்தாதிப்பெண் வீட்டுக்குப் போய்க காமவெறி கொண்டிருந்தான். அவள், இரான்மாலின் நிலைமையை யறிந்து, இன்னும் அதிகமாகக் குடிப்பித்தாள். அவள்மீது கொண்ட மயக்கத்தால் தலை தெரியாமல் அதிகமாகக் குடித்துப் பிரக்ஞையற்று கட்டிலின்மீது சாய்ந்தான். அத்தாதி, உடனே, இரான்மாலின் தலையில் கட்டியிருந்த பாகையை யவிழ்த்து அவன் கைகால்களைச் சேர்த்து நன்றாகக் கட்டிலோடு கட்டிலாய்க் கட்டிவிட்டாள். பிரக்ஞை தெளிந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கண்விழித்துப் பார்க்கையில், தான் கட்டிலோடு கட்டிலாய்க்கட்டப்பட்டிருப்பதையும், தனக்கு ஆபத்து நெருங்கிவிட்ட தென்பதையு முணர்ந்து, தன்பலங்கொண்டு அக்கட்டிலோடு இழுத்தான். அங்ஙனம், இரான்மால் கட்டுகளினின்றும் விடுபட்டு வெளியேறு வதற்குள்ளாக மாபாபன்வார், சாசாவின் மைந்தன், எக்கா முதலானோர் வந்து அவனைத்தாக்கினார்கள். இரான்மால், தன் கைக்கட்டுகளைத் தறித்துக்கொண்டு பக்கத்திலிருந்த ஒரு வெண்கல லோடாவால் தன்னை எதிர்த்த 17 பேர்களில் 3 பேர்களைக்கொன்றான். இரான்மால் தன்னாலியன்ற வரை கால்கட்டுக்களைத்தறித்துக் கொள்ள பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. எதிரிகள் பலமாக தாக்கவே, தனியாக நிராயுதபாணியாய்

சண்டை செய்து கடைசியாய் மாண்டான். இங்ஙனம், இரான்மால் பெண்வலையில் சிக்கியும் குடிமயக்கங் கொண்டும் இருந்த காரணத்தால் கூற்றுவனுக்கு இரையானான். பெண்வலையில் சிக்கி மாண்டவர்கள் பூர்வம் எண்ணிறந்தோர். மகா பராக்கிரமசாலியாயும் திடகாத்திரனாயும், அஞ்சாநெஞ்சம் படைத்த வஜ்ஜிர சரீரியாயுமிருந்த இரான்மால் கடைசியாக வெகு இழிவான மரணத்தை யடைந்தான். மீவார தேசத்தை கும்பமகாராணாவுக்கு விசாலப் படுத்தியும், மோகல் இராணாவுக்குப் பல சமயங்களில் உதவி செய்தும், இராணுவபலத்தை நன்று அமைத்தும், மற்றும் பல கொடிய போர்கள் செய்து மீவார இராஜ்யத்திற்குக் கீர்த்தி ஸ்தம்பத்தை நாட்டி எண்டிசையும் விளங்கின இரான்மால், அநியாய மரணத்தை யடைந்ததின் காரணம் கொடிய பெண்மோகமும் குடிமயக்கமுமேயாம். பெண்மோகமும், குடிமயக்கமும் மீவார சமஸ்தானத்தைக்கவரவேண்டிய எண்ணமுமில்லாமல் நல்லதர்ம வழியாகவும் பெருந்தன்மையுடனும் இரான்மால் இருந்திருப்பானேயானால், மீவார தேசத்திற்கும் மார்வாரதேசத்திற்கும் ஒருநாளும் அழிவு ஏற்பட்டிராது, தவிர, ராத்தோர் இராஜவமிசத்திற்கும் சிதைவு உண்டாயிராது, நிற்க, இரான்மால் வாடாமல்லி தாதியின் கிரகத்தில் அநியாய மரணத்தையடைந்த சமயத்தில், சித்தூரில் பல ராத்தோர் வீரர்கள் சோண்டாவின் வீரர்களால் எதிர்க்கப்பட்டு இறந்தனர். இரான்மாலின் தம்பியான இரணதீரன், சத்யபட்டி, இரணதீரசூராவத முதலானோர் மாண்டனர். இரான்மாலைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டதையும், இரான்மால் மாண்டதை

யும் அறிந்த ராத்தோர் வேலைக்காரனொருவன், கோட்டையின்மீதேறி உரத்தசப்தத்துடன், 'உம்முடைய இரான்மால் கொல்லப்பட்டார், ஜோதா! உன்னால் முடியுமானால் உடனே தப்பித்துக்கொண்டு ஓடிப்போ' என்று கூறினான். ஜோதா ஆயுதந்தரித்து அசுவாரோகணஞ்செய்து தன்னுடன் எழுநூறு ராத்தோர் வீரர்களை யழைத்துக்கொண்டு மார்வார தேசத்தை நோக்கிப் புறப்பட்டான். ஜோதாவும் ராத்தோர் வீரர்களும் போன சற்றுநேரத்திற்குப்பிறகு, சோண்டா தன் தம்பி இராகவதேவனுடைய மரணத்தைநினைத்துக்கொண்டு வெகு மனக்கொதிப்புடன், பதினாயிரம் கிரகிலோதர்களைக் கூட்டிக்கொண்டு, ஜோதாவையும் அவன் வீரர்களையும் துரத்திச்சென்றான். ராத்தோர் வீரர்களுக்கும் ஸிஸோதியர் வீரர்களுக்கும் இடையில் பலமான சண்டையுண்டாயிற்று. ஜோதாவின் வீரர்களில் இருநூறுபேர் மாண்டனர். சோண்டாவின் வீரர்கள் நானூறுபேர் மாண்டனர். சண்டை நடந்துகொண்டிருக்கையிலேயே ஜோதா ஒருவருக்குந் தெரியாதபடி தப்பித்துக்கொண்டு ஓடிச்சென்றான். பாரஜங்பீமாவத், சாரதா, சந்த்ராவ், அர்த்தகமால் பிள்ளைகள், இராணபிதாஇராஜாவத், சிவராஜ், பூர்ணபட்டி, பரிஸால் முதலான பல வீரர்கள் ஜோதாவின் பக்கலில் மாண்டார்கள். தப்பியோடின ஜோதா, தன் தம்பியான காந்தலை, மாந்தல் என்னுமிடத்தில் சந்தித்தான். அவ்விருவரும் ஒன்றுசேர்ந்து மார்வார தேசத்தை நோக்கியே மீண்டும் புறப்பட்டனர். மீவார தேசத்தையும் மார்வார தேசத்தையும் பிரிப்பது ஓர்மலை. அம்மலையின் கணவாய் வழியாகப்போக வேண்டும். அக்கணவாய்க்கு

சோமேஸ்வர கணவாய் என்று பெயர். அக்கணவாயின்வழியாக மார்வார தேசத்திற்குப்போக ஜோதாவும் காந்தலும் நூறு வீரர்களுடன் வந்துகொண்டிருக்கையில், சோண்டா மறுபடியும் வழிமறித்து அவர்கள் மார்வார் தேசத்திற்குப் போகவிடாமற்படி தடுத்துப் போர்செய்தான். கணவாயில் குதிரை மீதிருந்தபடி போர்செய்ய முடியாமலிருந்ததால், இருதிறத்தாரும் ஒருவரோடொருவர் கைகலந்து போர்செய்தனர். அங்ஙனம், வீரர்கள் போர்செய்து கொண்டிருக்கையில் ஜோதா ஒருவருமறியாதபடி மறுபடியும் குதிரையின் மீது ஆரோகணித்து அக்கணவாயை விட்டுக் குன்றின் மேலேறி மாவார தேசத்தின் எல்லைக்குட் சென்றான். ஜோதாவுடன் கடைசியாக நின்றவர்கள் எழுவரே. எழுநூறு பேர்களில் கடைசியாக மிஞ்சினவர்கள் ஏழு பேர்களே. இவ்வேழுபேர்களுடன் ஜோதா மார்வார எல்லைக்குட் பிரவேசித்தான். ஜோதா மறுமுறையும் தப்பித்துக்கொண்டு மார்வார எல்லைக்குட் சென்றதை யறிந்த சோண்டா உடனே, ஜோதாவைத்துரத்தினான். ஜோதா மண்டூருக்குள் பிரவேசித்தும் சோண்டாவும் வெகு சமீபத்தில் நெருங்குவதை யறிந்து, உடனே அவனுடன் போர்புரிய முடியாதென்று நினைத்து, ஜோதா பாடி சாதியார்களுடைய கிராமத்திற் புகுந்து வெகு இரகஸியமாக ஓர் குடியானவனுடைய வீட்டில் அடைக்கலமானான். பிகானீர் சமஸ்தானத்திற்குப் பத்துமைல் தூரத்திலுள்ளகாஹூணி என்னும் கிராமத்திலேயே ஜோதா ஒளிந்திருந்தான். பாடி குலத்தார்கள் தன்னைக் காண்பித்துக் கொடுக்கமாட்டார்களென்ற நம்பிக்கையைக் கொண்டு அக்கிராமத்திலேயே யிருக்

தான். சோண்டா தேடியும் ஜோதா அகப்படாமற் போகவே, மார்வார் சமஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மார்வார் சமஸ்தானமெங்கும் தன்வீரர் களைக் கொண்டு பாதுகாப்புக் கூடங்களையேற்படுத்தி வெகு பந்தோபஸ்து செய்து வைத்தான். **அகோஸிஸோ தியா**வை மண்டூர் தலைவனாக சோண்டா நியமித்தான். மண்டூர் துர்க்கத்தைப்பாது காக்க அஹாதோஹிங்கலா வையும் மேடாராயன் காரையும்சோண்டா நியமித்தான். நாகர்சமஸ்தானத்தைச் சேர்ந்த பிரோஸ்கான் மகனையும் மற்ற ஸிஸோதிய வீரர்களையும் மாரவார தேசத்தில் பற்பலஉத்தியோக பதவிகளில்இருத்தினான்.இரான்மாலின் தம்பியான சத்தாவின்மைந்தன் **நர்பத்** இராணா மோகலி னிடம் வெகு விசுவாஸ மாயிருந்து வந்ததால், மோகல், வருடமொன்றுக்கு ஓர் இலட்சம் ரூபாய் வரும்படி யைக் கொண்ட கிராமங்களைஅவனுக்கு ஜாகீர் கொடுத் தான். அவன் முன் மாதிரியே கும்பமகாராணா விட மும் விசுவாசமாகவேயிருந்து மீவார் சமஸ்தானத்தி ற்கு விரோதமாக வொன்றையுஞ் செய்யாமலிருந்து வந்ததால், கும்பமகாராணா, அவனிடம் பிரீதி கொண்டு மீண்டும் சிலகிராமங்களை ஜாகீராகத்தந்தார். நர்பத், பஸி கிராமத்திலேயே வசித்து வந்தான். இங்ஙனம், சோண்டாவின் உதவியால், மீவார சமஸ்தானத்தில் ஆதிக்கஞ் செலுத்தி வந்த ராத்தோர் வீரர்கள் சித்தூர் சமஸ்தானத்தை விட்டு துரத்தப்பட்டனர். மாரவார சமஸ்தானமும் மீவார சமஸ்தானத்திற்குட்பட்டு கும்ப மகாராணாவுக்கு சுவாதீனமாயிற்று.

3. ஜோதாவின் எழுச்சி

ஜோதா சோண்டாவுக்குப் பயந்து ஒருவருடகாலம் காஹூனி கிராமத்திலேயே வசித்துவந்தான். அவ்வொரு வருட காலத்தில் அக்கிராமத்திலுள்ள வாலிபர்களையும் அக்கிராமத்தைச் சுற்றியுள்ள வேறு கிராமங்களிலுள்ள வாலிபர்களையும் தனக்குத் துணையாகக் கொண்டு அடிக்கடி மாண்டூரின் மீது படையெடுத்துச் சென்றான். பலதடவை மாண்டூரின் மீது படையெடுத்தும் ஜோதாவுக்கு வெற்றிகிடைக்கவில்லை. ஒவ்வொரு தடவையிலும் கணக்கில்லாத வீரர்களையும் குதிரைகளையும் இவன் இழப்பான். இங்ஙனம், தன் பிரயத்தனங்களெல்லாம் வீணாகப் போனமை பற்றி மிக்கவருந்தி, ராக்கன் ஜாட் வமிசத்தார் வசிக்கும் கிராமத்திலுள்ள ஓர் வீட்டில் வந்து தங்கினான். அவ்வீட்டுக்காரி ஜோதாவை யுபசரித்து அன்னமளிக்க ஓர் தட்டில் சுடச்சுட கோதுமை அன்னத்தைப் பறிமாறினாள். ஜோதா, சற்றும் நிதானமின்றி அவசரமாக, அவ்வன்னத்தின் நடுவில் விரலை விட்டு ஒருகவளம் எடுத்தான். அன்னம் மிகவும் சூடாகயிருந்ததால், கைப் பொறுக்க முடியாமல் எடுத்த அக்கவளத்தைத் தட்டிலேயே யெறிந்து விட்டுக் கையையூதிக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த அம்மாது, இவனை இன்று

னெல்றதியாயலே சிரித்து, 'என்ன ஐயா! ஜோதா எவ்வளவு புத்தி யில்லாமலிருக்கிருனோ அப்படியே நீங்களும் புத்தி யில்லாமலிருக்கிறீர்களே'! என்ருள். அவள் வார்த்தையைக் கேட்டு ஆச்சரியங் கொண்ட ஜோதா 'தாயே அஃதென்ன? ஜோதாவுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்; ஜோதா ஏன் புத்தியில்லாதவன்' என்று கேட்டான். அதற்கு அம்மாது 'ஐயா! ஜோதா புத்தியில்லாமையினுலேயே தன்படை வீரர்களைக் கொண்டு கோரக நகரத்தின் மீது படையெடுக்கச் செல்கிருன்; அங்ககரைக் கைப்பற்ற முதன் முதல் அதன் மீது செல்லாமல், எல்லைப்புறங்களைத் தாக்கித் தன் பலத்தை நன்கு சேகரித்த பிறகு நகரிடைச்செல்வாஞல் ஜெயம் நிச்சயம். அதுபோல, நீ சுடச்சுட தட்டிலிருக்கும் அன்னத்தின் நடுவில் கையிடாமல் ஓரங்களில் கையிட்டுக் கவளம் கவளமாக உட்கொண்டிருந்தால், அன்னம் வரவர சூடு தணிந்து நடுவிலுள்ள அன்னத்தையும் உட்கொள்ள உனக்கு இலகுவாயிருக்கும். ஆதலாற்ருன், உன் காரியத்திற்கும் ஜோதாவின் காரியத்திற்கும் ஒற்றுமை படுத்தி நான் கூறினேன்' என்ருள். ஜோதா மிகவும் சந்தோஷமடைந்து அம்மாதிடம்விடை பெற்றுச் சென்ருன். ஜோதா மாண்டூர் நகர்மீது படையெடுப்பதைத்தவிர்த்து அம்மாது கூறின புத்திமதியின்படியே எல்லைப் புறங்களிற் சென்று கிராமங்களைத்தாக்கிவந்தான். வரவர வீரர்கள் இவனுக்குத் துணைவந்தனர். கிராமங்களைத் தாக்கிவந்ததினுல் திரவியம்வந்தது. அப்பணத்தைக் கொண்டு யுத்ததளவாடங்களையும் குதிரைகளையும் வாங்கித்தன்வீரர்களுக்குக் கொடுத்தான். தினம் ஒவ்வொரு கிராமமாக ஜோதா

வுக்கு சுவாதீனமாயிற்று. படைபெரிதாயிற்று. ஜோதாவின் சகோதரர்களும் இவனுக்கு உதவிபுரிய படைவீரர்களை யனுப்பிவந்தனர். கல்ஹரான் நகரைச்சேர்ந்த பாடி வமிசத்துத் தலைவரின் குமாரத்தியை ஜோதா விவாகஞ் செய்திருந்ததால், அவர்கள் ஜோதாவுக்கு உதவி செய்ய முன்வந்தனர். ஜோதாவுக்கு ஆள் வலிமை வரவர அதிகரித்தது. ஆனால் அவ்வீரர்களுக்குக் குதிரைகளும் யுத்த ஆயுதங்களுமில்லை. கிராமங்களில் மழையில்லாமல் சனங்கள் மிகவும் வருந்தினர். இந்நிலைமையில் ஜோதா தங்கயிடமின்றிப் பாரிபோல் திரிந்து வந்தான். ஜோதா இங்ஙனம் வீடு வாசலின்றி, நல்லுணவின்றி மகாகஷ்டத்துடன் ஊரூராய்க் காட்டிலும் மேட்டிலும் திரிந்து வருவதை கும்பமகாராணாவின் தாய் கேள்வியுற்று, மிக்க வருத்தங்கொண்டு, தன்மகனிடம் சென்று! 'மகனே! உன் தகப்பனரைக் கொன்ற சாசாவையும் மைராவையுங் கொன்று, சித்தூர் சமஸ்தானத்தைக் காப்பாற்றி, முகம்மதியர்களுடைய படையெழுச்சியினின்றும் மீவார இராஜ்யத்தைக் காப்பாற்றி உனக்குப் பலவிதத்திலும் உதவி புரிந்து இவ்விடமே கொலையுண்ட இரான்மாலின் மைந்தன் ஜோதா நாடு நகரமின்றியும் வீடுவாசலின்றியும் அலைந்து திரிந்து கஷ்டப்படுவதால், அவனுக்கு மாண்டூர் நகரைத் திருப்பிக்கொடுத்து விட்டால் நலமாகும்' என்று கூறினள். கும்பமஹாராணா தன் தாயை நோக்கி 'அம்மா! நீர் சொல்வது யாவும் உண்மையே. இரான்மால் மீவார் சமஸ்தானத்திற்கு அரிய பெரிய காரியங்களைச் செய்துள்ளார். எனக்கும் என் தந்தைக்கும் பல உதவிகள் புரிந்துள்ளார்; எனக்குற்ற துணைவராகவுமிருந்தார். ஆனால்

அவர் சோண்டாவின் இளையவர் இராகவதேவரைக் கொன்ற தீச்செயலினுலும், மீவார சமஸ்தானத்தை வஞ்சகமாகக் கைப்பற்ற எண்ணினதினுலும், ராத்தோர் வீரர்களினின்றும் விடுவித்துக்கொள்ள நாம் சோண்டாவை உதவிசெய்ய அழைத்தோம். தவிர, இராகவதேவரின் அநியாயமரணத்தைப் பற்றி சோண்டா சதா உள்ளங் கொதித்த வண்ணமிருக்கிருர்; ஜோதாவுக்கு நான் உதவி செய்தால் சோண்டாவின் மனதைப் புண்படுத்தினவனுவேன். அவர் ஏற்கனவே மீவார் சமஸ்தானுதிபத்ய உரிமையைத் தியாகஞ் செய்தும், உம்முடைய சந்தோஷத்திற்காக சித்தூரை விட்டு மண்டேர்சமஸ்தானத்தில் ஒரு சிறிய ஜாகீர் கிராமத்தில் வசித்தும் வந்தார். நம்முடைய ஆபத்து சமயத்தில் அவர் வந்து நமக்குப் பேருதவி செய்து மீவார் சமஸ்தானத்தை ராத்தோர் வீரர்களினின்றும் காப்பாற்றினுர். ஜோதாவுக்கு மீண்டும் மாண்டூர் சமஸ்தானத்தைத் திருப்பிக்கொடுத்தால், ஆபத்து நீங்கினதும் கும்பராணு தன்னை நினைக்காமல் மறுபடியும் ராத்தோர்களுக்கே உதவி செய்தானென்று சோண்டா நினைத்து மனங்கசிந்து வருந்துவார். ஆனல், ஜோதா மீண்டும் மாண்டோரைக் கைப்பற்றினுல், அவன்மீது நான் படையெடுத்துச்செல்வேன். இஃதொன்றே நான் செய்யக் கூடியது.' என்று கூறினுன். கும்பமஹாராணு கூறின வார்த்தைகளை நன்கு ஆலோசித்து, அவன் ஜோதா விஷயமாகக் கூறின வாக்குறுதியை நினைத்துச் சந்தோஷங்கொண்டு ஜோதாவுக்கு கும்பமஹாராணுவின் மனதையும், அவன் வாக்குறுதியையும் சொல்லியனுப்ப, நல்ல நம்பிக்கையுள்ள தூலா என்னும் பெயரினை

புடைய சாரணனொருவனை அவள் இரவோடிரவாய் ஒருவருமறியாதபடி அனுப்பினாள். அஸீயாதூலா என்னும் சாரணர் இரவோடிரவாய் வழி நடந்து பொழுது புலர்ந்ததும் ஓரிடத்திற்றங்கி காலைக் கடனை முடித்து, மீண்டும் கடுகியே சென்று, பாதங் என்னும் கிராமத்தைச் சேர்ந்த வனத்தில் ஐம்பது குதிரை வீரர்களுடனும் சில காலாட் படைவீரர்களுடனும் ஜோதா இருப்பதைக்கண்டான். ஜோதாவும் அவன் வீரர்களும் நல்லுணவின்றி சாமை தானியத்தைக் கொண்டு மாவாக்கிப் பசியைத்தணித்து வருவதைக் கண்ட சாரணர் மிகவும் விசனப்பட்டார். சாரணர் ஜோதாவைக்கண்டு நமஸ்கரித்து, மகாராணியார் கூறின விஷயத்தையும் கும்பமஹாராணாவின் வாக்குறுதியையுஞ் சொல்லி, மாண்டோரைக் கைப்பற்றப் பிரயத்தனஞ் செய்யும்படி கூறினார். சாரணர் கூறினதைக்கேட்ட ஜோதா, பஞ்சத்திலடிபட்டவனுக்குப் பாயசம் கிடைத்ததுபோல மனங்களித்து உடனே மாண்டோரைக் கைப்பற்றும் வழியை யோசிக்கலானான். மகாராணியார், தன்மீது எப்பொழுதும் பட்சங்காட்டி வந்ததுபோலவே, நாடு நகரமிழந்த காலத்திலும் அன்புமிகுந்து தனக்குதவி செய்ததை ஜோதா அறிந்து பரவசமானான். ஜோதா சின்னஞ் சிறுவயதினனாயிருக்கையிலேயே மகாராணியார் அவன்மீது எப்பொழுதும் அன்பு காட்டியே வந்தார். சித்தூரில்சிலகாலம் ஜோதா வசித்து வந்த காலத்தில் மகாராணியார் இவனைத்தன் மைந்தனைப்போலவே எண்ணிவந்தார். நிற்க, ஜோதா மகாராணியார் சொல்லியனுப்பிய வார்த்தைபடி மார்வார தேசத்தை மீண்டும் சுவாதீனப்படுத்திக் கொள்ள வழிதேடினான்.

உடனே, அவனுக்கு ஒரு யோசனையுண்டாயிற்று. சத்ராவா என்னும் ஊருக்குச்சென்று அவ்வூர் தலைவரான **ராவத் லங்கரன்** என்பவரிடம் தனக்குதவி செய்ய வேண்டினான். அவர் ஜோதாவின் வேண்டுகோளை முதன்முதல் இன்னதென அறியவில்லை. ராவத்லங்கரிடம் நல்ல திடமான ஐந்நூறு குதிரைகள் இருந்தன. அக்குதிரைகளில்இருநூறு குதிரைகளைக் கொடுத்துத் தனக்குதவி செய்யும்படி ஜோதா அவரை வேண்டினான். ஆபத்துசமயத்தில் உதவிசெய்வதே எல்லா புண்ணியத்தைக்காட்டிலும்மேலானதென்றும், பந்துக்களில் தாழ்ந்த ஸ்திதிக்கு ஒருவன் வந்துவிட்டால், அவனைக் கைதூக்கிவிடுவது சுற்றத்தின் கடமையென்றும், ராத்தோர் வமிசத்தார் மீண்டும் மாரவார் சமஸ்தானத்தை அடைவது அவ்வமிசத்திலுதித்த அனைவருக்கும் ஒரு பெருமையென்றும், ஜன்மதேசம் சுதந்த்ர நிலைமைய யடைவதற்குச் சகலவிதத்திலும் உதவி செய்யவேண்டுமென்றும் பற்பலவிதமாக ஜோதா, ராவத்லங்கரனுக்கு வெகுநேரம்வரை கூறினான். என்ன பேசியும் அவர் மனம் சற்றேனும் இரங்கவில்லை. ஜோதா மேன்மேலும் தேசாபிமானத்தையும் கடமையையும் பற்றிப் பன்னிப்பன்னிக் கூறியும் அவன், மகாராணாவின் உப்பைத்தின்றுவருவதால்அவருக்கு இரண்டகமாக யாதொரு காரியத்தையுஞ்செய்யேன் என்று கூறிவிட்டார். ஜோதாவுக்கு உதவி செய்தால், தன்னுடைய ஜாகீர் போய்விடும் என்னும் பயத்தாலேயே சத்ராவா தலைவன் ஒரே பிடிவாதமாக உதவி செய்ய மறுத்தார். ஜோதாவுக்கு அடக்கமுடியாத துக்கமுண்டாயிற்று. உடனே, அத்தலைவருடைய சம்ஸாரத்தி

னிடம் சென்றான். அம்மாது ஜோதாவின் தாயுடன் பிறந்தவள். ஜோதாவின் சிற்றன்னை. அவளிடம் ஜோதா சென்று வணங்கினான். அவள், ஜோதாவை ஆசிர்வதித்து அவன் முகத்திற்றோன்றிய மாறுபாட்டைக் கண்டு, 'ஜோதா! உன் துக்கத்திற்குக் காரணமென்ன' வென்று கேட்டாள். ஜோதா நடந்த வரலாறுகளைக் கூறினான். அம்மாது உடனே ஜோதாவுக்கு உதவி செய்ய யோசித்தாள். தன் கணவனுரைத் தந்திரமாகக் கூப்பிட்டு, கஜானு அறையில் விலையுயர்ந்த நகைகளை அங்ஙனமே திறந்து விட்டுவைத்து விட்டேன், சற்று அதைப் பூட்டிக்கொண்டு வாருங்கள் என்று கூறி, அவன் போனதும் பின்னால் அவனறியாமலே மெள்ளமெள்ளச்சென்று, கஜானுவிருக்கும் அறைக்குக் கணவன் சென்றதும் வெளிக்கதவைச் சாற்றிப் பூட்டி விட்டாள். கதவைப்பூட்டி விட்டுத் தன் தாதிமார்களில் ஒருத்தியைக் கூப்பிட்டு, 'சகீ! உடனே குதிரை லாயத்திற்குச் சென்று காம்தாரிடம் (குதிரைக்காவலன்) ஜோதாவையழைத்துக் கொண்டு,இவருக்கு இஷ்டமான நல்ல குதிரைகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளும்படி தாகூர் உத்திரவு செய்தாரென்று கூறிவிட்டு வா' வென்று ஆக்ஞாபித்து ஜோதாவுக்கு விடை கொடுத்தனுப்பினாள். ஜோதா தன் சிற்றன்னையின் தேசாபிமானத்தையும் ஆபத்து காலத்தில் கணவன் வார்த்தையையுமீறி, தர்மமே சிறந்ததென்று நினைத்துச் செய்த உதவியையும் எண்ணி எண்ணி ஆனந்தங்கொண்டான். ஒரு ஸ்திரிக்கு இருக்கும் தயாளகுணம் புருடனிடத்தில் இல்லை யென்றுணர்ந்தான். ஆபத்துகாலங்களில் மாதர்கள் உதவிசெய்வது போலப் புருடர்கள்

உதவி செய்வதில்லை. தவிர, மாதர்களின் மனது ஆபத்து காலங்களில் விசாலப்படுகின்றது. அதிசூட்சுமமான யோசனைகள் அவர்களுக்குத்தான் ஆபத்து காலங்களில் தோன்றுகின்றன. பொதுவாக புருடர்களைக் காட்டிலும் மாதர்களுக்குப் புத்தி சூட்சுமம் குறைவு என்று பலர் அபிப்பிராயப் பட்டபோதிலும், ஆபத்து காலங்களில் மாதர்களுக்குத் தோன்றும் புத்தி சூட்சுமம் புருடர்களுக்குத் தோன்றுவதில்லை. இராஜபுத்திர ஸ்திரீகள் அதிலும் மிக்க சூக்ஷுமபுத்தியுள்ளவர்கள். நல்ல தேசாபிமான முள்ளவர்கள். ஆபத்திற்குதவும் நல்ல அருந்தனத்தை யொத்தவர்கள். ஜோதாவுக்கு உற்சாக முண்டாகும்படி தாகூர் ராணி குதிரைகளைக் கொடுத்து உதவினாள். ஜோதா அசுவசாலைக்குட்புகுந்து, நல்லவேகமுள்ளதும் பலமுள்ளதுமான நூற்று நாற்பது குதிரைகளைப் பொறுக்கித் தன் வீரர்களிடம் கொடுத்தான். அவ்வீரர்கள் அக்குதிரைகளின் மீது ஆரோகணித்து வெகு சந்தோஷத்துடன் ஜோதாவுக்கு ஆசி கூறியே வழிநடந்தனர். ஜோதாவும் அவன் வீரர்களும் சத்ராவர ஊரை விட்டுத் தாண்டினதும், தாகூர்ராணி கஜானா அறையைத்திறந்து தன் கணவனை வெளியே வரும்படி கூறினாள். தாகூர், தன்மனைவியின் அடாத செயலைக் கண்டு பல விதமாகத் தூற்றினான். தன்னுடைய குதிரைக் காரர்களை நெய்யப்புடைத்தான். நடந்து போன காரியத்தைப்பற்றி என் செய்வது? மனைவியைத் தூற்றினானேயன்றி அவளை அடிக்கவில்லை. இராஜபுத்திரர்கள் ஸ்திரீகளிடத்தில் மிக்க மரியாதை காண்பிப்பது இயற்கை. புருடர்கள் வீணாகப் பரிகசிப்பதையும் இராஜபுத்திர மாதர்

கள் சகிக்கமாட்டார்கள். வெகு ரோஷ முள்ளவர்கள். புருடர்கள் ஸ்திரீகளைக் கைநீண்டி யடிக்கமாட்டார்கள். நிற்க, ஜோதாவும் அவன் வீரர்களும் குதிரையேறி **ஹர்பா சாங்கலர்** என்பவரிடம் சென்றனர். இவர், அக்காலத்தில் கீர்த்தி பெற்ற குதிரைப்படைவீரர். இவருக்கு இணையுள்ளவர் அந்நாளில் குதிரைச்சண்டையில் இல்லை. இவர் நல்ல தர்மவான். இவர் சிறு வயதிலிருந்தே பிரம்மசர்யத்தை யனுஷ்டித்து நல்ல யோகாப்பியாசம் பெற்றவராதலால், இவரை 'பால பிரம்மச்சாரி' என்று அழைப்பதுண்டு. உருக்கி வார்த்த தங்கத்தைப் போன்ற பளபளப்பான மேனியும், வைரம் போன்ற வலுவுள்ள சரீரமுங் கொண்டவர். சதா ஏழைகளுக்கு அன்னமிடுவதும், விருந்தாளிகளை உபசரிப்பதும், அதிதிபூசை செய்வதும், ஆபத்தி லிருப்பவர்களுக்கு உதவிசெய்து அவர்களுடைய துன்பத்தை நீக்குவதும் இவருடைய ஸ்வதர்மமாகும். வலியார் மெலியாரை வருத்தினால், மெலியார் பக்கத் துணையாக இவர் நின்று, வலியாரின் வலிவு ஒடுங்கும்படி செய்வர். எச்சமயத்திலும் பிறருக்கு உதவி புரிதலையே மேலான தர்மமென்று நினைத்து வந்தார். தினம் இவர் நூற்றுக்கணக்கான ஏழை சனங்களுக்கு சதாவிருத்தி கொடுத்த பிறகே உண்பது வழக்கம். இராஜ்யமிழந்து வருந்தும் மன்னர்களுக்குப் பக்கத் துணையாக நின்று அவர்கள் தங்கள் இராஜ்யத்தை மீண்டும் பெறும்படி செய்வார். இவர் நல்ல போர் வீரர். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். யுத்தபூமியில் பிரளய கால ருத்திர மூர்த்திபோல் சத்துருக்களை சங்கரிப்பார். தர்மயுத்தமே இவர் செய்வார். நிராயுதபாணி

களையும், பயந்தவர்களையும், அடைக்கலம் புகுந்தவர்களையும் இவர் கொல்லார். சத்துருக்களை வஞ்சனையாற் கொல்வது முதலிய இரகஸிய யுத்தநடவடிக்கைகளை இவர் மேற்கொள்வதில்லை. இவர் வீரர்களுக்கெல்லாம் வீரராகவும், யோகிகளுக் கெல்லாம் யோகியாகவும் விளங்கினுர். இம்மகா புருஷனையே ஜோதா அடுத்தான். ஜோதாவின் நற்காலத்திற்கே அவன் இம்மகா புருஷனை அடுத்தது. ஜோதாவும் அவன் வீரர்களும் ஹர்பா சாங்கலர் கிரகத்திற்குச் சென்று சதாவிருத்தி கேட்டனர். அம்மகான் சற்று நேரத்திற்கு முன்னரே சதாவிருத்தி வழங்கி தன் உணவை முடித்துக் கொண்டார். ஜோதாவும் அவன் வீரர்களும் சற்று தாமதமாக வந்ததால் வழக்கம்போல் செய்யும் சதாவிருத்தி காலம் நீங்கிற்று. என்றாலும், அவர் உடனே கோதுமைமா, சர்க்கரை, மூஜித் என்னும் ஓர்வகை பச்சிலை முதலானவைகளைச் சேர்த்து நல்ல பக்குவமாகக் களிசெய்து படைத்தார். ஜோதாவும் அவன் வீரர்களும் வெகு ருசிகரமாக அவ்வுணவை உட்கொண்டு நித்திரை செய்தனர். பொழுது புலர்ந்ததும் அவ்வீரர்களின் மீசை தாடியெல்லாம் சிவப்பாக யிருப்பதைக்கண்டு அவர்கள் ஒருவரோடொருவர் பேசி ஆச்சரியப்பட்டார்கள். ஹர்பா சாங்கலர், உடனே, அவர்களைப்பார்த்து, 'நேற்றிரவு உணவினுல் இந்நிறம் உண்டானது. என்றாலும் இது உங்கள் நற்காலத்திற்கே அறிகுறியாகும். சீக்கிரத்திலேயே ஜோதா தானிழந்த நாடுநகரங்களை மீண்டும் சுவாதீனப்படுத்திக் கொள்வார்' என்று கூறினுர். இவ்வாறு ஒருவரோடொருவர் வெகு வேடிக்கையாகப்

பேசிக்கொண்டபிறகு கடைசியாக மாண்டோரைக் கைப்பற்ற வேண்டிய விஷயமாக யோசனை செய்தனர். ஹர்பாசாங்கலர் ஜோதாவுக்கு மிக்க உற்சாகத்தைக் கொடுத்துத் தன் பிதுரார்ஜிதத்தைக் கைக்கொள்ள தன்னாலியன்றவரை உதவி செய்ய ஒத்துக்கொண்டார். ஜோதா. மறுதினமே தன் வீரர்களுடன் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டான். சௌகிரி கிருமத்தை முதன்முதல் தாக்கினான், அக்கிருமத்தைப்பாதுகாக்க சோண்டாவால் நியமனம் பெற்ற **இராகதேவன்** ஜோதாவின் முன் நிற்க மாட்டாமல் புறங்காட்டியோடினான். இராகவதேவன் ராத்தோர் வமிசத்தைச் சேர்ந்தவன். பிறகு, ஜோதாவை **பாடிரணவீரன், விஸல்தேவன், ராவல்இந்து** முதலானோர் தாக்கினர். ஜோதாவின் வீரர்கள் வெகு உற்சாகத்துடன் போர்செய்தனர். ஜோதாவின் வீரர்களுக்கு முன் அவர் நிற்க முடியாமல் தயங்கினர். ஜோதாவின் வீரர்கள் அவர்களை மாய்த்து அக்கிராமத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள வேறு சில குக்கிராமங்களையும் சுவாதீனப்படுத்திக்கொண்டனர். பிறகு, கோஸானு என்னும் ஊரைத் தகர்த்தனர். அதுவும் அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களும் ஜோதாவுக்கு சுவாதீனமாயின. ஜோதா கோசக மாண்டோருக்குச் சென்றான். மாண்டோரை சோண்டாவின் இருமைந்தர்கள் பாதுகாத்து வந்தனர். இராணுவபலத்தைத் தயறியாமலும், ஜோதாவுக்கு ஹர்பாசங்கலர் உதவி செய்ய அப்படையிலுள்ளார் என்றறியாமலும், மாற்றான் பலத்தை யறியாதபடி கோட்டையை விட்டு வெளிவந்து யுத்தம் புரிந்தனர். ஜோதாவின் வீரர்களுக்கு முன் நிற்க முடியாமற்படி திகைத்து வரவே, ஜோதாவின் வீரனொரு

வனால் சோண்டாவின் மைத்துனருவனான காந்தால் கொல்லப்பட்டான். மூத்தவன் கொல்லப்பட்டவுடனே இளையவனான மூஞ்சன் யுத்தரங்கத்தை விட்டு ஓடிச் சென்றான். என்றாலும் ஜோதாவின் வீரர்கள் அவனை விடாமல் துரத்திக்கொண்டேபோய் வழியில் அவனைக் கொன்றனர். அஹாதோ ஹிங்கலர், ஸிஸோதியா எகோ முதலான வீரர்களும் மாண்டனர். அஹாதோ ஹிங்கலர் மிகவும் துணிகரமுள்ளவர். நல்ல யுத்த சாகஸ மறிந்தவர். ஹர்பாசாங்கலரைப் போலவே குதிரைச் சண்டைசெய்யும் அசகாய சூரர். ஜோதாவின் வீரர்களிற் பலரைக்கொன்றுவிட்டு இவர் இறந்தார். சோஹன் ஜஸ்ஸா, ஹர்பரம்சிந்தால், விசலதேவபரமார், பிரோஸ்கான் மைந்தன் ஆகிய இவர்கள் ஜோதாவின் வீரர்களுக்கு முன் போர் செய்யமுடியாமல் ஓடிப்போயினர். மாண்டல்நகர் ஜோதாவுக்கு சுவாதீனமாயிற்று. லோளுங் முதலிய நகரங்களும் ஒன்றன் பின்னொன்றாக ஜோதாவுக்கு ஸ்வாதீனமாயின. சோண்டாவின் மைந்தரிருவர் மாண்டதற்காக சோண்டா மறுபடியும் ஸிஸோதிய வீரர்களை யழைத்துக் கொண்டு ஜோதாவையும் அவன் வீரர்களையும் தாக்கியிருப்பான். மஹாராணா கும்பன் மாரவார தேசத்தின் விஷயமாகவும் ஜோதாவின் விஷயமாகவும் அலக்ஷ்யமாக யிருப்பதைக் கும்பாலறிந்து, படையெழுச்சியைக் கொள்ளாமல் மீவாரதேசத்தை விட்டுத்தன் ஊர்க்குப் போயினன். மீவார சாம்ராஜ்யத்தின் இராணுவபலத்தையும் கும்பமஹாராணாவின் வலிமையையுமறிந்து, கும்பமஹாராணாவுடன் சமாதானஞ் செய்து கொண்டான். காத்வார் என்னும் வளமைபொருந்திய பிராஞ்சியத்தை ஜோதா மீவார

சமஸ்தானத்திற்குக் கொடுத்து, இராணாவுடன் சமாதானஞ் செய்து கொண்டான். கும்பமஹாராணா மார்வார தேசத்தை ஏழுவருடகாலம் சுவாதீனப் படுத்திக் கொண்டு பின்னர் ஜோதாவுக்கு விடும்படியாயிற்று. ஜோதா தன்வாள் வலிமையால் நாடுநகரங்களை மீட்டு, மார்வார சமஸ்தானாதிபதியாகி விளங்கினான்.

4. குஜராஷ்டிர மாளவதேச சுல்தான்கள்

கும்ப மஹாராணு மீவார சமஸ்தானத்தின் மீது அன்னியப் படையெழுச்சி யுண்டாகாமற்படி சுற்றிலுமுள்ள பல சமஸ்தானங்களை சுவாதீனப்படுத்திக் கொண்டு இராஜபுதனத்தில் நடுநாயகமாய் விளங்கினன். க்ஷத்திரிய தர்மமாகிய தண்டயாத்திரை செய்தலை மேற்கொள்ள எண்ணி கும்பமஹாராணு கி.பி. 1442-ம் ஆண்டில் ஹாராவதி என்னும் நகரைக்கைப்பற்ற சித்தூரை விட்டுத் தண்டயாத்திரை புறப்பட்டான். கும்ப மஹாராணு சித்தூர் துர்க்கத்தை விட்டு வெளிச்சென்றதும், அத்துர்க்கத்தைக் காப்பாற்றப் பலமுள்ள சைனியம் இல்லாமலிருக்கும் என்றெண்ணி மண்டூ சமஸ்தானதிபதி சுல்தான் முகம்மத் கில்ஜி, சித்தூரை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு கும்பமஹாராணுவிடம் தான் தோற்ற பழிச்சொல்லை மறைய வைக்கவேண்டுமென்று தீர்மானித்துப் பெரிய படையொன்றைத் திரட்டிக்கொண்டு மீவார சமஸ்தானத்தின் மீது வந்தான். சுல்தான் கும்பல்மீருக்கருகாமையில் வந்ததும் கெல்வாராவிலுள்ள பவானிதேவியின் கோயிலைத் தகர்க்க எண்ணினன். ஆனல், இராஜபுத்திர வீரரொருவர் தீப்ஸிங் தனக்குரிய வீரர்களைக்கொண்டு சுல்தானை எதிர்த்தான். ஏழுநாள்வரை இரவும் பகலும் சுல்தானை

அக்கோயிலண்டை வரவிடாமற்படி தீப்ஸிங் போராடி வந்தான். சுல்தானுடைய பெரிய படைக்குமுன் தீப்ஸிங் நிற்க முடியாமல் கடைசியாகத்தன் ஸ்வதர்மத்தைக் காப்பாற்றும் நிமித்தம் அக்கோயிலின் முன்னிலையில் மாண்டான். இந்து மததர்மத்தைக் காப்பாற்றவே சிறந்த தேசாபிமானியும் மதாபிமானியுமான தீப்ஸிங் கொடியபோர்புரிந்துவீரசொர்க்கமடைந்தான். தீப்ஸிங் மாண்டதும் அவனுடைய வீரர்கள் பலர் மாண்டனர். சுல்தான் அக்கோயிலைத் தரையோடு தரையாகத்தகர்த்தான். அக்கோயிலுள்ள விக்கிரங்களை யுடைத்தான். அவ்விக்கிரங்கள் கற்களால் கட்டப்பட்டதால், அவைகளை யுடைத்து அச்சுண்ணும்பைக்கொண்டு தாம்பூலந் தரித்துக்கொண்டான். விக்கிரங்களை யுடைத்த சுண்ணும்பை வெற்றிலையிற்றடவி சுல்தானும் சுல்தானைச் சேர்ந்த வீரர்களும் தாம்பூலம் தரித்துக்கொண்டு அக மகிழ்ந்தனர். கோயில் தகர்க்கப்பட்டு வெற்றியடைந்ததைக் கண்ட சுல்தான், சித்தூர் துர்க்கத்தின் மீது சென்றுன். சுல்தான், தன் தகப்பனர் ஆஜாம்ஹூமயூன் என்பவரிடம் ஒரு படையைக் கொடுத்து மந்தஸார் பிராந்தியத்தைக் கொள்ளையடிக்கும்படி கட்டளையிட்டான். இவ்வாறு சுல்தான் சித்தூர் துர்க்கத்தை சுவாதீனப்படுத்த ஒரு படையையும் ஊரைக்கொள்ளைபடிக்கமற்றொருபடையையும்இரண்டு திக்கிலும்அனுப்பினன். சித்தூர் கோட்டையைக் கைப்பற்ற சுல்தான் பெரியபடையுடன் சென்றுன் என்பதைக் கேள்வியுற்ற கும்பமஹாராணு ஹாராவதி நகரினின்றும் திரும்பி மண்டல்கார் என்னும் ஊருக்குச் சமீபத்தே சுல்தான் சைன்னியத்தைத் தாக்கினன். பலநாள்வரை சுல்தா

னும் ராணுவும் சண்டையிட்டனர். கடைசியாக, மகாராணு இரவுகாலங்களில் தன் படையைப் பலமாகத் திரட்டி சுல்தானைத் தாக்கினுர். மகாராணுவின் சைன்னியத்தாக்குதல்களுக்கு முன் நிற்க மாட்டாமல் சுல்தான் மண்டு சமஸ்தானத்தை நோக்கிச் சென்முன். சுல்தான் சைன்னியம் அழிக்கப்பட்டது. சுல்தான் வீரர்களிற் பலர் மாண்டனர். சுல்தான் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைத்து நாளுக்குநாள் கும்ப மஹாராணுவின்மீது அதிக பகைமை கொண்டான். எப்படியாகிலும் மஹாராணுவைத் தோற்கடிக்க வேண்டுமென்னும் எண்ணமே, சுல்தானுடைய மனதிற் குடிகொண்டது. சதா கனவிலும்நினைவிலும் மகாராணுவையும் சித்தூர் துர்க்கத்தையுமே நினைத்து வருவான். கடைசியாக கி.பி. 1446-ம்ஆண்டில் மீண்டும் ஒருமுறை சித்தூர் கோட்டையைப் பிடிக்கப் பலமான சேனையொன்றைக் கூட்டி சுல்தான் தண்டயாத்திரை புறப்பட்டான். மண்டல்கார் ஊரை நோக்கி சுல்தான் புறப்பட்டு பாணுற்றைக் கடந்து வருகையில், கும்ப மஹாராணு தன்படை வீரர்களுடன் சுல்தானை எதிர்த்து அவன் சைன்னியங்களை முறியடித்து மண்டு சமஸ்தானத்திற்குத் திரும்பிப்போகும்படி ஓட்டினுன். மறுமுறையும் சுல்தான் இராணுவினுல் அவமான மடைந்ததைக் கண்டு விசனித்து வந்தான். இந்த யுத்தத்திற்குப் பிறகு பத்து வருடகாலம்வரை சுல்தான் மகாராணுவுடன் போர்செய்ய வரவில்லை. சுல்தான் இராணுவுடன் போர்புரிந்து பலநாள்வரை ஜெயாபஜெயம் தெரியாமலிருந்து வந்ததென்றும், பிறகு நஸ்ராணு என்னும் நகரைமட்டும் கைப்பற்றிக்கொண்டு சுல்தான்

தன்னூர் திரும்பினனென்றும் மகம்மதீய சரித்திரக் காரரான பரிஷ்டா கூறியுள்ளார். ஆனால், **மகா மகோ பாத்யாயர் கவிராஜ சியாமலதாஸ்** தாம் எழுதிய வீர விநோதம் என்னும் நூலில் சுல்தான் தோல்வியடைந் தானென்றும், தோல்வியடைந்த காரணத்தாலேயே சித் தூர் துர்க்கத்தைக் கைப்பற்ற குஜராஷ்டிர சமஸ்தானா திபதியைத் தனக்குதவி செய்ய வேண்டினனென்றும் கூறியுள்ளார். தவிர, பரிஷ்டா கூறியபடி சுல்தான் ஜெயம் பெற்றிருந்தால், குஜராஷ்டிர சமஸ்தானாதிபதி யைத் தனக்கு உதவி செய்யக் கேட்டிருக்க வேண்டு வதில்லையென்றும் சியாமல்தாஸ் கூறியுள்ளார். மீவார சமஸ்தானத்தில் சுல்தான் தன் பெயரால் கில்ஜிபூர் என்று ஓர் ஊரை ஏற்படுத்த இச்சித்தானென்றாலும் மகாராணா, நஸ்ராணா என்னும் ஊரைக்கொடுத்ததால், அதையடைந்து சுல்தான் சென்றானென்றும் பரிஷ்டா கூறியுள்ளார். இது முற்றிலும் மிகையென்று இராஜ புத்திர சரித்திர ஆராய்ச்சியர் கூறியுள்ளார். சரித்தி ரக்காரர்களின் அபிப்பிராயம் எப்படி யிருப்பி னும், சித்தூர் துர்க்கத்தைக் கைப்பற்றவேண்டு மென்னும் எண்ணம் சுல்தானுக்குப் பத்து வரு டகாலம் வரையுண்டாகவில்லை. அல்லது, ஒருக் கால் துர்க்கத்தைக் கைப்பற்ற எண்ணமுண்டாயிருந்தி ருப்பினும், மகாராணா தன்னிலும் மிக்க பலமுள்ளவ ரென்றே சித்தூரைத்தகர்க்கவோ அல்லது கைப்பற்ற வோ பயந்து பத்துவருடகாலம் வரை சும்மாயிருந் தான். இது இப்படியிருக்க, கி. பி. 1445-ம் வருடத் தில் ஆஜ்மீர் சமஸ்தானத்தில் உள்நாட்டுக்குழப்பம் பலமாயிருந்தது. இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்

கும் தீராப்பகைமை யேற்பட்டது. ஆஜ்மீரை இந்து கவர்னர் ஒருவன் பரிபாலித்து வந்தான். அவன், இஸ்லாம் மதத்தினருக்குப் பெருந் தீங்கு விளைத்து வருகிறுனென்றும், முஸ்லீம்கள் தங்கள் மதசம்பந்த மான காரியங்களைச் செய்யக் கூடாதபடி தடுத்து வரு கிறுனென்றும், மததர்மத்தில் தலையிட்டு முஸ்லீம் களின் மனதைப்புண்படுத்திவருகிறுனென்றும் அறிந்த சுல்தான் **முகம்மத் கில்ஜி** தன் மதசகோதரர்களுக்கு உதவிசெய்ய எண்ணினுன். ஆஜ்மீர் நகர் மிகவும் பிரசித்தமானது. வடஇந்தியாவில் இது பூர்வம் சிறந்தஇராஜுவஸ்தலமாகக் கருதப்பட்டிருந்தது. இது இந்துக்களுக்கும் மகம்மதீயர்களுக்கும் புண்யஸ்தலம். **க்வாஜா முயினுதீன் சிஷ்டி**யின் கோரி யிருப்பதாலும் புஷ்கரம் சமீபத்தேயிருப்பதாலும் ஆஜ்மீர் இந்துக் களுக்கும் மகம்மதீயர்களுக்கும் புண்யஸ்தலமாகும். தவிர, நவீன இந்து மதாசார சம்பிரதாயமான ஆரிய சமாஜத்தை ஸ்தாபனஞ் செய்த **ஸ்வாமி தயாநந்தர்** சமாதி யடைந்ததும் ஆஜ்மீர் நகரினிடத்தே தான். இத்தகைய விசேஷங் கொண்ட ஆஜ்மீர் நகரைப் பூர் வம் மோகல் இராஜு சித்தூரில் அரசாண்டு வருங்கா ளில் இரான்மால் டில்லி சுல்தானிடமிருந்து கைப்பற்றி மீவார சமஸ்தானத்திற்குச் சேர்ப்பித்தான். மூல் தான் (மூலஸ்தானம்) அரசைப் பரிபாலித்து வந்த **ஸாலீம் ஷா**, நாகர் நகரில் இரான்மாவின் தகப்பனுர் **சுந்தா**வைக் கொன்று புண்ணிய க்ஷேத்திர யாத்திரை யாக ஆஜ்மீருக்குப் போயிருப்பதை **பஞ்சோலி கேம்ஸி** என்பவரால் இரான்மாலறிந்தான். ஸாலீம் ஷாவை எப்படியாகிலும் கொல்லவேண்டுமென்று பஞ்சோலிச்

குத் தெரிவிக்கவே, பஞ்சோலி, உடனே ஒரு யோசனை செய்தான். ஆஜ்மீர் இராஜப் பிரதிநிதிக்குத் தன் குமாரத்தியைக் கொடுக்கப் பல்லக்கில் ஏறிக்கொண்டு போவதாகக் கூறி, நல்ல ராத்தோர் வீரர்களைப் பல பல்லக்குகளில் ஸ்திரீ வேடம் புனைந்து ஏற்றி கோட்டைக்குட் பிரவேசித்தான். பஞ்சோலி உடனே, இரான்மால் அனுப்பின அந்தராத்தோர் வீரர்களைக் கொண்டு கோட்டையைப் பாதுகாத்துவந்த வீரர்களைக் கொன்று ஸாலீம் ஷாவையும் கொன்றான். இரான்மால், தன்கோரிக்கையை பஞ்சோலி நிறைவேற்றியதைக் கேள்வியுற்று உடனே கத்தூ என்னும் பட்டணத்தை அவனுக்கு இனமாகக் கொடுத்தான். பல்லக்கில் வீரர்களை யழைத்துச்சென்ற சம்பவம் புதிதல்ல. ஏற்கனவே, **அலாயுதீன்** காலத்தில் மீவார சமஸ்தானாதிபதியாயிருந்த **பீம்ஸிங்** தன் தர்ம பத்தினி **பத்மினியை** அலாயுதீன் அடைய வேண்டுமென்னுங் கொடிய எண்ணத்தால், பலதடவை சித்தூர் கோட்டையின் மீது படையெடுத்து பீம்ஸிங் கைச் சிறைப்படுத்தி, பத்மினி தன்னை யடைந்தால் பீம்ஸிங்கர் சிறையினின்றும் விடுவிக்கப் படுவாரென்று கூறின காலத்தில், பத்மினியின் உடன் பிறந்தவர்கள் பல இராஜபுத்திர வீரர்களைப் பல்லக்கில் ஏற்றி பத்மினியை யழைத்துவருவதாகத் தந்திரஞ்செய்து பீம்ஸிங்கரை விடுவித்தார்கள். ஆபத்துகாலத்தில் இத்தகைய தந்திரஞ் செய்வது சிறந்த க்ஷத்திரிய தர்மமென்று கூறப்படும். நிற்க, ஆஜ்மீரில இஸ்லாமியர்கள் கஷ்டப்படுவதை யறிந்த சுல்தான் முகம்மத் கில்ஜி ஆஜ்மீரைத் தாக்கித் தன் மதத்தினர்களைக் காப்பாற்ற எண்ணினான்.

ஆஜ்மீரிலுள்ள மகம் மதியர்களும் சுல்தானுக்கு உதவி செய்வதாகவும் செய்தி சொல்லியனுப்பினர். ஆஜ்மீர் நகரின் மீது தான்படையெடுத்தால், அதைத்தடுக்காத படி மஹாராணு யிருக்க, ஓர் படையைத்திரட்டி மந்தா ஸர் பிராந்தியம் பக்கமாக மஹாராணுவை எதிர்க்க அனுப்பிவிட்டுப் பலமான சேனையுடன் ஆஜ்மீர் நகரைத் தகர்க்க சுல்தான் புறப்பட்டான். ஆஜ்மீர் துர்க்க காவலனுன **கஜாதர்ஸிங்** நான்கு நாள் வரை வெகு பலமாகப் பகைவர்களின் சைன்னியம் கோட்டைக்குள் நுழையாதபடி தடுத்துப் போர்புரிந்து வந்தான். சுல்தான் சேனை மிக்க பெரிதாகையால் அதற்கு முன் போராட முடியாமல் கஜாதர்ஸிங் கோட்டையை விட்டு வெளியே வந்து போர் புரிந்தான். கடைசியாக சுல்தான் சேனைகள் கஜாதர்ஸிங் கரின் படையைச் சின்னு பின்னப்படுத்தின. கஜாதர் ஸிங்கரும் மாண்டார். சுல்தான் படைவெகு வேகமாக கோட்டைக்குள் நுழைந்து சுவாதீனப் படுத்திக் கொண்டது. ஆஜ்மீர் சுல்தானுக்குச் சொந்தமானதும், ஆஜ்மீர் நகருக்குப் பிரதிநிதியாக **க்வாஜா நைமத் உல்லா** என்பவரை ஸாயீப் கான் என்னும் பட்டங்கொடுத்து நியமித்தான். ஆஜ்மீரில் சுல்தான் வெற்றியடைந்ததும், உடனே மஹாராணுவோடு போர்புரிய ஏற்கனவே அனுப்பியிருந்த படைக்குத்துணையாக மண்டல்கார் திசைநோக்கிச் சென்றான். சுல்தான் பாணுற்றுக் கருகாமையில் வந்ததும் மஹாராணுவின்படைசித்தூர் கோட்டையினின்றும் வந்து சுல்தான் படையுடன் போர் செய்தது. மஹாராணுவின் வீரர்கள் வெகு உற்சாகத்துடன் சுல்தான் படையைத் தாக்கிப் பலதேசத்தை

புண்டாக்கினர். சுல்தான் படைவீரர்கள் இராணாவின் வீரர்களுக்கு முன்நிற்கமாட்டாமல் செத்தேன் பிழைத்தேன் என்று புறங்காட்டி யோடினர். சுல்தான்மீண்டும் இராணாவினிடம் தோல்வியடைந்தான். மஹாராணாவும் தன் படையை இருகூறாக்கி ஒன்றை **தாஜ்கான்** சேனாதிபத்யத்தின் கீழ் அணிவகுத்து நிற்கும் சுல்தான் படைமீதும், மற்றொன்றை **அலீகான்** சேனாதிபத்யத்தின் கீழ் அணிவகுத்து நிற்கும் சுல்தான் படைமீதும் தாக்க அனுப்பினார். மஹாராணாவின் போர்வீரர்களின் அரிய செயல்கள் கூறற்பாலனவல்ல. சுல்தானின் வீரர்கள் மஹாராணாவின் வீரர்களால் முறியடிக்கப்பட்டனர். நிற்க, கி. பி. 1455-ம் வருடத்தில் நாகர் சமஸ்தானாதிபதி **பிரோஸ்கான்** மாண்டான். அவன் குஜராஷ்டிரத்தை யாண்ட அரசவம்சத்தைச் சேர்ந்தவன். டில்லியை யாண்டுவந்த சுல்தான்களின் அரசாட்சியிலேயே நாகர்சமஸ்தானத்திற்குக் கவர்னராக பிரோஸ்கான் இருந்து வந்தான். ஆனால், டில்லி சாம்ராஜ்யத்தின் ஆதீனத்திலிருந்ததை உதறித்தள்ளி, பிரோஸ்கான் ஏற்கனவே சுதந்தர சமஸ்தானமாக நாகரை செய்து கொண்டான். பிரோஸ்கான் இறந்ததும் அவன் மகன் **ஷம்ஸ்கான்** பட்டத்திற்கு வந்தான். ஆனால், பிரோஸ்கானின் கடைசி மகன் **முஜாஹித்கான்** மூத்த சகோதரனை ஷம்ஸ்கானைப் பட்டத்தினின்றும் பலாத்காரமாக ஓட்டி அவனைக் கொல்லவும் பிரயத்தனித்தான். முஜாஹித்கானுக்குப் பயந்து ஷம்ஸ்கான் சித்தூர் துர்க்காதிபதி மஹாராணாவிடம் அடைக்கலம்புகுந்தான். நாகர் சமஸ்தானத்தின் மீது வெகு நாளாகக் கண்ணோட்டஞ் செலுத்தி வந்த கும்பமஹாராணா, ஷம்ஸ்கான் மூலமாக நல்ல தருணம்

வாய்ந்ததென நினைத்து, ஷம்ஸ்கானுக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். நாகர் சமஸ்தானாதிபதியாக ஷம்ஸ்கானை மீண்டும் இருக்கவைத்தால், மீவார சாம்ராஜ்யத்தின் கீழ்ப்பட்ட சமஸ்தானாதிபதியாக யிருக்க வேண்டுமென்றும், நாகர் கோட்டையின் மதில் சுவரின் ஒருபாகத்தை இடித்து வழிசெய்து கொடுக்கவேண்டுமென்றும் இவ்விரண்டு நிபந்தனைக்குட்பட்டால் நாகர் சமஸ்தானத்தின் மீது படையெடுத்துச் செல்வதாக மஹாராணா கூறினார். மஹாராணாவின் இரண்டு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அவ்வாறே ஷம்ஸ்கான் சம்மதித்தான். மஹாராணா பெரிய படையொன்றைத் திரட்டிக் கொண்டு நாகர் சமஸ்தானத்தைத் தாக்க தண்டயாத்திரை புறப்பட்டார். நாகர் சமஸ்தானாதிபதி முஜாஹித்கான் மஹாராணாவுக்கு முன் நிற்க மாட்டாதவனாய் சமஸ்தானத்தைவிட்டு குஜராஷ்டிரத்துக்கு ஓடிச்சென்றான். ஷம்ஸ்கான் சமஸ்தானாதிபதியானான். மஹாராணாவுக்கு ஏற்கனவே வாக்குத் தத்தஞ் செய்திருந்த நிபந்தனைப்படி கோட்டையின் மதில் சுவற்றை இடிக்க ஆரம்பஞ் செய்தான்.

வெகு நாளாக நாகர் சமஸ் தானத்தைக் காக்க நல்ல அரணாகயிருந்ததைக் கண்ணுற்றபல முஸ்லீம் இராணுவ உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது தகர்க்கப்படுவதை யறிந்து துக்கித்தனர். ஒரு கிழ வயதுடைய பட்டாணி உத்தியோகஸ்தர் வெகு தைரியமாக ஷம்ஸ்கானிடம் சென்று, 'ஐயா! நாகர் சமஸ்தானத்தை சுயாதீனமாக்கி அரசு செலுத்தி வந்த பிரோஸ்கானுக்குப் பிறந்தது பிள்ளையாக யில்லாமல் பெண்ணாகயிருந்திருக்குமானால், அப்பெண்ணும் 'நாகர்கோட்டையின் பல

மான அரண் சுவற்றையிடிக்க ஒருநாளும் சம்மதிக்கவே மாட்டாள்' என்று கூறினன். ஷம்ஸ்கான் தன் குடிகளுடையதுயாத்தையும் கோபத்தையுமறிந்து 'தற்சாந்தியாக கோட்டையை யிடிக்காமற்படி யிருக்க உத்திரவு கொடுங்கள் ; நீங்கள் நாகரை விட்டுப் போனதும் அவர்கள் கூடி என்னை ஒருக்கால் கொன்றாலும் கொல்லுவார்கள். இன்னும் சிலநாட்கள் கழிந்த பிறகு நிபந்தனைபடி கோட்டையை யிடித்து விடுகிறேன்' என்று மஹாராணாவிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். மஹாராணாவும் ஷம்ஸ்கானின் பயத்தை யறிந்து அவன் வேண்டுகோளின்படியே உத்திரவு செய்து விட்டு மீவார் வந்து சேர்ந்தார். நாகர் சமஸ்தானத்தைவிட்டு மீவார் போய்ச் சேர்ந்தாரெனக் கேட்டு, ஷம்ஸ்கான், மஹாராணாவுக்குத் தந்த வாக்குத் தத்தத்தைக் கடந்து கோட்டையின் சுவற்றை யிடிக்காமல், அக்கோட்டையைப் பலப்படுத்த ஆரம்பஞ்செய்தான். ஜீர்ணமாயிருந்து விடங்களைப் புதிப்பித்தும், அகழிகளைத் தோண்டியும், மதில் சுவறுகளில் பலக் குறைவான பாகங்களைச் செப்பனிட்டும் அவன் வந்தான். நாகர் சமஸ்தானதிபதி ஷம்ஸ்கான் தன் நிபந்தனைக்கு விரோதமாகக் கோட்டையை செப்பனிட்டுப் பலப்படுத்தி வருவதை மஹாராணா அறிந்து, உடனே படையொன்றைத் திரட்டி நாகர்சமஸ்தானத்தின்மீது போராடப்புறப்பட்டார். நாகர் சமஸ்தானத்தின் துர்க்கத்தை முற்றுகையிட்டுப் பின்னர் ஷம்ஸ்கானை முறியடித்து அதை சுவாதீனப் படுத்திக் கொண்டார். மஹாராணா நாகர் சமஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டதும், வெகுநாளாக நினைத்திருந்த காரியத்தைச் செய்து முடிக்க முதன்

முதல் அக்கோட்டையையிடித்துத்தரையோடுதரையாக்கினார். ஷம்ஸ்கானின் பொக்கிஷத்தைத் திறந்து நல்ல விலையுயர்ந்த இரத்தினங்களையும் நகைகளையும் மற்றும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் மஹாராணா எடுத்துக்கொண்டார். தவிர, நல்ல யானைகளையும் அசுவங்களையும் சுவாதீனப் படுத்திக் கொண்டார். கணக்கற்ற முஸ்லீம்களைத் தண்டித்தும், முஸ்லீம் ஸ்திரீகளைச் சிறைப்படுத்தியும் தன் வீரத்தைக் காண்பித்தார். மஹாராணாவை எதிர்க்க வந்த குஜராஷ்டிர மன்னனையும் இராணா முறியடித்தார். மஹாராணா நாகர் சமஸ்தானத்திலுள்ள பள்ளிவாயில்களைத் தீக்கிரையாக்கிப் பன்னிரண்டு இலட்சம் பசுக்களை விடுவித்து அப்பூமியைப் பசுக்கள் மேய்வதற்காக ஏற்படுத்தி கொஞ்சகாலம் வரை அந்த சமஸ்தானத்தைப் பிராம்மணர்களிடம் ஒப்புவித்தான். நாகர் சமஸ்தானத்தை முஸ்லீம்களினின்றும் விடுவித்துப் பசுக்களையும் பிராம்மணர்களையும் மஹாராணா இரட்சித்தான் என்றுகும்பமஹாராணா காலத்தில் உண்டான ஏகலிங்கமகான்மியம் கூறுகிறது. நாகர் கோட்டை வாயிற்படியையும் அச்சமஸ்தானத்திலிருந்த ஹனும விக்கிரத்தையும் மீவாருக்குக் கொண்டு போனான். அக்கோட்டை வாயிற் கதவு முதலியவைகளையும் ஹனும விக்கிரகத்தையும் மீவாரைச் சேர்ந்த கும்பல்கார் கோட்டையின் முக்கிய வழியில்வைத்து நாட்டி, அதற்கு ஹனுமான் கோட்டைவாயில் என்று பெயரிடப்பட்டது. நாகர் சமஸ்தானத்திலிருந்த திரண்ட திரவியத்தை மீவார் சமஸ்தானத்திற்குச் சேர்ப்பித்தான். மஹாராணாவிடம் தோல்வியடைந்த ஷம்ஸ்கான் ஆமதாபாத் சென்றான். தன்னோடு அழகிய தன்

மகளையும் அழைத்துச் சென்று, சுல்தான் குத்புடீனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். ஷம்ஸ்கானின் மகளைக் கலியாணஞ்செய்து கொண்டதும் குத்புடீன் தன் மாமனுருக்காக நாகர் சமஸ்தானத்தை மீட்டுவரும்படி தன் முக்கிய சேனுதிபதிகளை அனுப்பினன். நாகர் சமஸ்தானத்தைமஹாராணுவிடமிருந்து சுவாதீனப்படுத்திக் கொள்ள **இராய்ராம்சந்திர** சேனுதிபதியும், **மல்லிக்கத்தாய்** சேனுதிபதியும் பெரிய படை திரட்டிச் சென்றனர். நாகர் சமஸ்தானத்தின் எல்லைக்குச் சிறிது தூரத்தில் குஜராஷ்டர படை வந்ததும், மஹாராணு தன் படையுடன் எதிர்த்து சுல்தான் படைவீரர்களைச் சின்னுபின்னப்படுத்தித் துரத்தினுர். சுல்தானுடைய போர்வீரர்கள் அநேகர் மாண்டனர். தப்பிப்பிழைத்த சிலரே ஆமதாபாத் சென்று வீரர்களின் நாசத்தைப்பற்றி சுல்தானுக்குத் தெரிவித்தனர். அதைக் கேள்வியுற்ற சுல்தான் மிக்க கோபங்கொண்டு, நாகர் சமஸ்தானத்தை எப்படியாகிலும் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்மென்று சுல்தான் தானுகவே பெரிய சைன்னியமொன்றைத் திரட்டி வந்தான். சுல்தான் படையெடுத்து வருவதையறிந்த மஹாராணுவும் போர்க்கோலங்கொண்டு சுல்தான் படையைத்தாக்க முன்னேக்கிச் சென்றுர். மஹாராணுஆபூ பர்வதத்தினருகே வந்ததும், சுல்தான் படையும் அவ்விடம் வந்தது. மஹாராணுவின் தலைநகரைத் தாக்கவேண்டு மென்றெண்ணி, சுல்தான் தன் சேனுதிபதி **மாலிக் ஷாபான் இமாத்-உல்-மல்க்** என்பவனிடம் பெரிய படையொன்றைக் கொடுத்து மஹாராணுவை ஆபூ பர்வதத்தண்டை எதிர்க்கும்படிசெய்து, சுல்தான் மற்ருெரு படையைத்திரட்டி கும்பல்கார் துர்க்கத்

னைத்தாக்க அத்திசைநோக்கிச்சென்றான். இந்த யுத்த தந்திரத்தை யறிந்த கும்பமஹாராணா வெகு உற்சாகத்துடன் தன் வீரர்களைக்கொண்டு சுல்தான் சேனாதிபதி இமாத்-உல்-மலக் சைன்னியத்தை நன்கு முறியடித்து, அவனையும் துரத்திவிட்டு வெகு துரிதமாக, சுல்தான் கும்பல்கார் கோட்டைக்குவரு வதற்குள் மஹாராணா, கும்பல்கார் கோட்டையை வந்தடைந்தார். ஆபூ பர்வதத்தண்டை நடந்தசண்டையில் கும்பமஹாராணா வெற்றியடைந்து ஆபூவை சுவாதீனப்படுத்திக் கொண்டு சுல்தானைத் தாக்க மீவார் புறப்பட்டதும், சிரோஹி யைச் சேர்ந்த வமிசத்தார் கும்பமஹாராணா இல்லாத சமயமெனக்கண்டு, அதைக் கைப்பற்றிக்கொண்டனர். சிலர் கும்பமஹாராணாவே வெற்றியடைந்த பிறகு ஆபூவை சிரோஹி வமிசத்தினர்களுக்குக் கொடுத்தாரென்பர். மற்றுஞ் சிலர், சிரோஹி தலைவர் மஹாராணாவுக்கு உறவினராகையால் சுல்தானுடன் போர் புரிந்து தோல்வியடைந்தா ரென்றும் சுல்தான் கும்பல்கார் கோட்டையைக் கைப்பற்ற மஹாராணாவிடம் போர் புரியப்போகையில் சிரோஹி வமிசத்தார் மீண்டும் கைப்பற்றினரென்றுங் கூறுவர். முதல் அபிப்பிராயத்தைச் சில இந்து சரித்திரக்காரர்கள் தெரிவித்துள்ளார். இரண்டாவது அபிப்பிராயம் முஸ்லீம் சரித்திரக்காரர் பரிஷடாவுடையது. நிற்க, மஹாராணாவினால் தோல்வியடைந்த குஜராஷ்டா சேனாதிபதி மனங்கசிந்து சுல்தான் போனவழியே கும்பல்கார் கோட்டையை நாடிச்சென்றான். கும்பல்கார் பர்வதத்தின் அடிவாரத்தில் பெரும் படையோடு அணிவகுத்து நின்ற சுல்தானோடு சேனாதிபதி போய்ச்சேர்ந்தான். மஹா

ராணா சுல்தான் படையைத்தாக்கக் கோட்டையினின்
றும்வெளிவந்தார். இருதிறத்தாருக்கும் பலமானபோர்
நடந்தது. கடைசியாக இராஜபுத்திரவீரர்களின்பாணப்
பிரயோகங்களுக்கு முன்னிற்கமுடியாமல் பலர் மாண்டு
தோல்வியடைந்தனர். சுல்தான் மிக்க விசனத்துடன்
துர்க்கத்தை சுவாதீனப்படுத்திக் கொள்வது முடியா
தெனநினைத்துகுஜராஷ்டிரத்திற்குத்திரும்பினான். நிற்க
மாளவதேசத்தையாண்டு வரும் சுல்தானும் குஜராஷ்
டிர சுல்தானும் மஹாராணாவினால் முறியடிக்கப்பட்டுத்
தோல்வியடைந்த காரணத்தால், அவ்விரு சுல்தானும்
ஒன்று சேர்ந்து கும்பமஹாராணாவைத் தாக்கவேண்டு
மென்று ஒருவரோடொருவர் யோசித்து முடிவுசெய்
தனர். நாகர் சமஸ்தானத்தையழித்தும் அச்சமஸ்
தானாதிபதியை முறியடித்தும் முஸ்லீம் பள்ளிவாசல்
களைத் தீக்கிரையாக்கியும் பலமுஸ்லீம்களைத் தண்டித்
தும் பல ஸ்திரீகளைச் சிறைப்படுத்தியும்வந்த காரணங்
களுக்காக எல்லாமுஸ்லீம் சமஸ்தானாதிபதிகளும் ஒன்
றுசேர்ந்து மஹாராணாவை எதிர்க்கவேண்டுமென்று
மாளவ தேசாதிபதி தீர்மானித்துத் தண்டயாத்திரைப்
புறப்படத் தயாராகயிருக்கிறாரென்று மாளவதேசாதி
பதியால் அனுப்பின இராஜ தூதன் தாஜ் கான் குஜராஷ்
டிர தேசாதிபதி சுல்தான் குத்புடீனை வழியில் கண்டு
கூறினான். குத்புடீனும் சந்தோஷங் கொண்டு சம்மதித்
தான். மாளவதேசாதிபதிக்கும் குஜராஷ்டிர தேசாதி
பதிக்கும் ஓர் உடன்படிக்கை நடந்தது. அவ்வுடன்படிக்
கையைத்தயார்செய்வதற்கு மாளவதேசத்திற்காக ஷேக்
நைஜாம் உத்தீன்அவர்களும் மாலிக்-உல்-உலாமா அவர்க
ளும்; குஜராஷ்டிர தேசத்திற்காக காஜீ ஹிஸாம்-உத்தீன்
அவர்களும் பிரதிநிதிகளாக யிருந்தனர். மீவார் சமஸ்

தானுதிபதியோடு போர் புரிந்து வெற்றியடைந்தான், மீவார சமஸ்தானத்தின் தென்பாகமெல்லாம் குஜராஷ்டிரத்திற்கும், மீவார் பிரதான நகர், ஆஜ்மீர், அஹிர்வார முதலிய ஊர்கள் மாளவதேசத்திற்கும் சொந்தமாகுமென்று உடன் படிக்கை ஷரத்து தயார் செய்யப் பட்டது. அந்த உடன் படிக்கைப்படி இரண்டு சுல்தான்களும் பெரிய படைகளைத்திரட்டி, குத்புடீன் கும்பல்கார் கோட்டை பக்கமாகவும் மகம்மத் கில்ஜி சித்தூர் கோட்டை பக்கமாகவும் பிரயாணமானுர்கள். மகம்மத் கில்ஜி மந்தஸூர் நகர் வந்துசேர்ந்தான். மகம்மத் கில்ஜியுடன் போர்செய்து அவனை முடித்துவிட்டுப் பிறகு குத்புடீனுடன் சண்டைசெய்ய எண்ணியிருந்த மஹாராணு, குத்புடீன்சேனை கும்பல்கார் கோட்டைக்குச் சமீபமாகவே வந்து விட்டபடியால் கோரகபடையொன்றைத் திரட்டி குத்புடீனைத் தாக்கப் புறப்பட்டார். குத்புடீன்சேனைக்கும் இராஜபுத்திர வீரர்களுக்கும் கடும்போர் நடந்தது. குத்புடீன் நல்ல வசதியான இடத்தில் படையை யணிவகுத்து மஹாராணுவைத் தாக்கினுன். மஹாராணுவின் படைநல்ல வசதியான ரங்கத்தில்லாமையால்வீரர்கள் பின்வாங்கினுர். உடனேமஹாராணு அவ்விடத்தைவிட்டு வேருெரு இடம் மாறி அணிவகுத்து நின்ருர். குத்புடீன்சேனை வீரர்கள் மஹாராணுவின் வீரர்களுடைய பின்வாங்குதலைக்கண்டு உற்சாகங்கொண்டு பலமாகத் தாக்கினுர்கள். மஹாராணுவோ நல்ல இடத்தில் இருந்து வந்தமையால், தன் வீரர்களை உற்சாகப்படுத்தித் தாக்கினுர். இருதிறத்துப் படையும் பலமாக ஒன்ருெடொன்று இடைவிடாமல் இரண்டு நாள் தாக்கின. மஹாராணுவின் ஸைன்னியத்திற்குப்

பின்னால் குன்றுகள் பாதுகாப்பாக யிருந்தமையாலும் குத்புடீன் சைன்னியம் சமநிலத்தில் இருந்தமையாலும் கொடிய போரில் குத்புடீன் சைன்னியம் வெகு நாசமடைந்தது. வரவர குத்புடீன் வீரர்கள் மனச்சோர்வடைந்தனர். இராஜபுத்திர வீரர்கள் மேன்மேலும் பலமாகத்தாக்கினர். கடைசியாக குத்புடீன் சைன்னியம் மூலைக்கு மூலையழிக்கப்பட்டு யுத்த பூமியை விட்டு ஓடின. குத்புடீன் தன் எண்ணம் வீணாயிற்றெனக் கண்டு குஜராஷ்டிரம் நோக்கிச் சென்றான். குத்புடீன் நிலைமை இப்படியாயிற்று. மகம்மத் கில்ஜியைச் சற்று கவனிப்போம். மகம்மத் கில்ஜி பல தடவைகளில் மஹாராணா விடம் தோல்வி யடைந்துள்ளான். மகம்மத் கில்ஜியும் இராணாவைப் பலமாக எதிர்த்தான். மகம்மத் கில்ஜியின் மைந்தன் **கியாஸுதீன்** இளவரசன் பில்வாரா என்னுமிடத்தில் இராஜபுத்திர வீரர்களைத் தாக்கினான். இங்ஙனம் தகப்பனும் பிள்ளையும் மீவார சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றப் பல பிரயத்தனங்கள் செய்தும் ஒன்றும் பிரயோசனமில்லை. மகம்மத் கில்ஜி இத்தடவையிலும் தோல்வியடைந்தான். பிறகு, மகம்மத் கில்ஜி தான் மரண மடையும்வரை மஹாராணாவுடன் போர்செய்ய வேண்டுமென்னும் எண்ணமில்லாதவனாகவே ஆயினான். சுல்தான்குத்புடீன் மஹாராணாவால் தோல்வியடைந்து குஜராஷ்டிரம் சென்று சிலநாட்கள் கழிந்ததும் மாண்டான். கி. பி. 1459-ம் ஆண்டில் குஜராஷ்டிர தேசாதிபதியாக **தாவுத்ஷா** வந்தான். இச்சமயத்தில் சாந்தா, பாந்தாவும் ஹாராவமிசத்தவர்களும் சேர்ந்து அமர்கார் கோட்டையைத் தந்திரமாகக் கைப்பற்றினர். தவிர, மண்டல்கார் துர்க்கத்திலுள்ள இராஜபுத்திரர்

களுக்குத் தொந்தரவு கொடுத்தும் வந்தனர். ஹாரா வமிசத்தவர்கள் வனவாசிகள். அதையறிந்த கும்பமஹாராணு படையொன்றைத் திரட்டி அவர்களுடன் போர் செய்து அமர்கார்கோட்டையை மீண்டும்கைப்பற்றினார். ஹாரா வமிசத்தவர்கள் பலர் மாண்டனர். அவர்களுடைய தலைவன் **தோக்ஜீ** கொல்லப்பட்டான். பூந்தியின் மீது படையெடுத்துச் செல்லவே சாந்தாவும் பாந்தாவும் மஹாராணுவிடம் வந்து தாங்கள் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். மஹாராணு கும்பன் தன் இயற்கைப் பெருந் தன்மைக் குணத்தைக்கொண்டு அவர்களை மன்னித்தும், பிறகு சித்தூர் திரும்பிச் சென்றார். ஸிரோஹியைச் சேர்ந்தவர்கள் மஹாராணுவின் ஆதிக்கத்தை உதறித்தள்ளிவிட்டு ஆபூவில் சுயேச்சாதிபத்யம் ஸ்தாபித்தனர். அதையறிந்த மஹாராணு இராவ் ஷால்ஜியின் மைந்தன் **நரஸிங் தோட்டியா** வுடன் ஒரு சேனையையனுப்பி ஆபுவை சுவாதீனப் படுத்திக் கொள்ளும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறே, நரஸிங் தொட்டியா ரோஹிவமிசத்தவர்களைத் தோற்கடித்து, ஆபூவை சுவாதீனப்படுத்தி, ஆங்கு ஓர் அரண் மனையையும் ஒரு ஏரியையும் மஹாராணுவின் உத்திரவுபடி கட்டுவித்தான். அவ்வரண்மனை மிகவும் அழகுவாய்ந்தது. அவ்வேரியும் மிக்க வனப்புள்ளது. அவ்வேரியும் அவ்வரண்மனையும் இன்றும் காணலாம். அரண்மனை வெகு புராதனமான தால், ஆங்காங்கு பல பாகங்களில் சிதைவுண்டாகிப் பிறகு செப்பனிடப் பட்டது. மஹாராணு கும்பகர்ணன் மீவார சாம் ராஜ்பத்தைச சுற்றிலும் தனக்கு ஒருவித அபாய முண்டாகாமலிருக்

கப் பல துர்க்கங்களைக் கட்டுவித்தான். மாளவ தேசாதிபதி, குஜராஷ்டிர சுல்தான், நாகர் சமஸ்தானாதிபதி முதலானோர்களைப் பன்முறை மஹாராணா முறியடித்து அவர்களுடைய பயம் சிறிது மின்றி ஏகசக்ராதிபதியாய் அரசு நடாத்தி வந்தான். மஹாராணாவின் போர்த் திறங்கள் மிகவும் கொண்டாடத் தக்கவை. மஹாராணா நல்ல வீரர். கத்திச் சண்டையிலும் மல்லயுத்தத்திலும் இணையற்றவர். குதிரைச் சண்டையில் இவரையொத்தவர் அக்காலத்தில் வட இந்தியாவில் இல்லை. நல்ல யுத்த தந்திரமறிந்தவர். யுத்தபூமியில் சற்றேனும் இளைப்பின்றி இரவு பகலாய்ப் போர் புரியும் சாமர்த்தியத்தையுடையவர். பின் வாங்குஞ் சமயத்தில் பின் வாங்கவும் முன் சென்று எதிர்க்குஞ் சமயத்தில் சற்றேனுந் தயங்காது பலமாக எதிர்க்கவும், சேனைகளைச் சமயத்திற்கேற்றபடி அணி வகுத்து நிற்கவுமான யுத்த சாமர்த்தியத்தை இவர் கொண்டவர். மாதர்களையும் ஆயுதமிழந்தவர்களையும், அடைக்கலம் புகுந்தவர்களையும், தோல்வியடைந்தவர்களையும் வெகு காருண்யத்துடன் போற்றும் குணமுடையவர். தர்மயுத்தஞ் செய்யும் நேர்மையை யுடையவர். ஹிந்து தர்மத்தை யழிக்க எத்தனிப்பவர்களையும் மத விரோதங் கொண்டு துன்புறுத்துபவர்களையும் இவர் தயையின்றிக் கொல்வர். ஆரிய தர்மத்தைக் காப்பாற்றுவதில் மிக்க சிரத்தை கொண்டவர். பசுக்களைப் போஷிப்பதில் இவருக்கிருந்த சிரத்தையும் கவலையும் மிகவும் பாராட்டத் தக்கது. சாதுக்களையும் பெரியோர்களையும் சதா சந்தோஷிப்பதில் இவருக்கு அதிகப்பிரியம். இவர் வீரர் வரிசையில் முதன்மையாக மதிக்கப்படுபவர். இவர்

நடையில் சிங்கம்போலவும், முடுக்கான தோற்றத்தில் விடைபோலவும், சலியாத தன்மையில் அசலம்போலவும், காம்பீரியத்தில் கடல்போலவும் விளங்கி வந்தார். உத்தமதேசாபிமானி. தன்குலத்தையும் தேசத்தையும் பெருமைபடச் செய்வதில் மிக்க ஆர்வங் கொண்டவர். இராஜபுத்திர வீரர்களில் இவர் மிகவும் பெருமை வாய்ந்தவர். நல்லகோப முடையவர். இவர்கோபம் அதிகநாழி நீடித்திராது. நல்ல குணத்தையுடையவர். இவர் அக்காலத்தில் வட இந்தியாவில் இராஜபுத்திரர்களுக்குத் திலகம்போல் பொலிவுற்று வாழ்ந்து வந்தார்.

5. இராணி மீராபாய்

மஹாராணா தன் குணத்திற்கேற்ற கன்னிகையை மணந்தார். மாரவார் வம்சத்தைச் சேர்ந்த ராத்தோர் குலத்திலுதித்த **மீராபாய்** என்னும் ஓர் அழகிய அணங்கை மஹாராணா தன் மனைவியாகக் கொண்டார். மீராபாய் இயற்கையிலேயே நல்ல நற்குண நற்செய்கை வாய்ந்தவள். நல்ல ஸ்வாதந்திரிய உணர்ச்சி கொண்டவள். மஹாராணாவின் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாவதற்கு இவள் உற்ற துணையாக யிருந்தாள். பணிவிடை செய்வதில் நல்லவன்மை யுடையவள்; நன்மையைத் தேடுவதில் உசிதமானவள்; நல்ல விவேக முடையவள். ஆயுதப்பயிற்சி பெற்றவள். நல்ல வீரமாது. இவள் சிறந்த பண்டிதை. கவிசாதுர்யம் பெற்றவள். சிறந்த தெய்வ பக்திவாய்ந்தவள். இம்மாது கடவுள்பேரில் பல ஸ்தோத்திரங்களைக் கவியாகப்பாடி புகழ்பெற்றவள். இவளுடைய கவிதையைச் சிறந்த மேதாவிகளும் போற்றினர். வட இந்தியாவிலுள்ள பல புண்ணிய க்ஷேத்திரங்களைச் சேவிப்பதும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வதுமாக இவள் காலங் கழித்தாள். நல்ல நோன்புடையவள். ஏழைகளுக்கும், பிராம்மணர்களுக்கும் மற்ற பரதேசிகளுக்கும் சதா தான தர்மம் வழங்கி வந்தாள். சங்கீதத்திலும் மிக்க நுண்ணிய

அறிவைக் கொண்டவள். மஹாராணா இவளால் நல்ல பெருமை யடைந்தார். அம்மாதும் மஹாராணாவினால் நல்ல கீர்த்திபெற்றாள். இங்ஙனம், பரஸ்பரம் காதல னும் காதலியும் இன்புற்று இல்லறம் நடாத்திவந்தனர். மஹாராணாவுக்கு **கும்பலதேவி** என்றொரு மனைவியு மிருந்ததாகத் தெரியவருகிறது. இராஜபுத்திரர்களின் சரித்திரத்தை எழுதிய **கர்னல்டாட்** என்பவர் மஹா ராணாவுக்கு மீராபாய் என்னு மொரு மனைவியைப் பற் றியே கூறியுள்ளார். சித்தூர் சாஸனத்தில் கும்ப மஹாராணாவின் பட்ட மகிஷி கும்பலதேவி யென்றும் அவள் வயிற்றிற் பிறந்த மகன் **இராய்மால்** என்றும் கூறப்பட்டுள்ளது. மீராபாயிக்கே கும்பலதேவி என் றும் பெயருமுண்டு என்று கூறலாம். மஹாராணா ஏகபத்னியைக் கொண்டு இல்லறத்தை நடத்தினா ரென்று கூறப்படுவதால், மீராபாயிக்கே கும்பலதேவி என்றும், இப்பெயர் சித்தூர் துர்க்கத்திலுள்ள கும்ப ஸ்வாமியின் பிராட்டியின் பெயராக யிருப்பதால், சிறந்த தெய்வ பக்திவாய்ந்த இம்மாதுக்குப் பிராட்டியார் பெய ரையே வைத்திருக்க வேண்டுமென்றும் தெரியவரு கிறது. கும்பமஹாராணா நல்ல நீதிநெறி வாய்ந்தவர். யுத்தத்தில் எவ்வளவு சாதூரியத்தை இவர் கொண் டிருந்தாரோ, அவ்வளவு சாதூரியத்தைக் கவிசெய்வதி லும் கொண்டிருந்தார். மஹாராணா சிறந்த கவி. இவர் நல்ல சங்கீதஞானங்கொண்டவர். வெகுஅழகாகப்பாடும் இயல்பினைப் பெற்றிருந்தார். நல்ல இராகஞானமுண்டு. இவர் சங்கீத வித்வான் என உலகினர் கொண்டாடப் பட்டு வந்தார். அக்காலத்தில் சங்கீத வித்வான்களிற் பலர் மஹாராணாவின் அரண்மனையிலேயே சதா இருப்

பர். பெரிய பெரிய சங்கீத வித்வான்களெல்லாம் இவரைக் கண்டு அஞ்சுவர். சங்கீத ஞானத்தில மிக்க பாண்டித்தியம் பெற்றிருந்தமையால் இவருக்கு ' அபினவ பரதா சாரியர் ' என்று பட்டங் கொடுக்கப்பட்டது. பூர்வம், இந்தியாவில்பரதநாட்டிய சாஸ்திரத்திற்குக்கர்த்தாவாய் விளங்கின, பரதா சாரியரைப்போல மஹாராணு இருந்ததால், இவரை அபிநவ பரதா சாரியர் என்று அழைப்பாராயினர். மஹாராணு சங்கீத ராஜா, சங்கீத மீமாம்ஸை, இரஸிகப்பிரிய ஆகிய இம் மூன்று, சங்கீத நூல்களை எழுதியுள்ளார். தவிர, சங்கீத ரத்னகரம் என்னும் நாலுக்கு வியாக்கியானமொன்றும் இவர் செய்துள்ளார். ஜயதேவருடைய ' கீத கோவிந்தம் ' என்னும் நூலுக்கு வியாக்கியானமாக ' இரஸிகபிரிய; ' என்னும் ஒரு நூலை எழுதியுள்ளார். சிறந்த கிருஷ்ண பக்தி வாய்ந்த பரம பாகவதரான ஜயதேவஸ்வாமியால் திருவாய் மலர்ந்தருளின கீத கோவிந்தத்திற்கு மஹாராணு செய்த வியாக்கியானம் மிக ருசிகரமானதெனப் பண்டிதர் பலர் இப்பொழுதும் கொண்டாடி வருகின்றனர். மஹாராணு காலத்தில் பல பண்டிதர்கள் ' ஏகலிங்க மகான்மியம் ' என்னும் நூல் ஒன்றைச் செய்தனர். அந்நூலின் கடைசிபாகம் மஹாராணுவினால் ஸ்லோக ரூபமாக எழுதப்பட்டது. மஹாராணுவுக்கு சம்ஸ்கிருத பாஷையில் விசேஷ ஞானமுண்டு. ஸ்மிருதி, மீமாம்ஸை, நாட்டிய சாஸ்திரம், இராஜ நீதி, கணிதம், வியாகரணம், உபநிடதம், தர்க்கம் முதலியவைகளில் மஹாராணு நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் ''சந்திசதகம்' என்னும் நூலொன்றுக்கு வியாக்கியானமும் நான்கு நாடகங்களும் இயற்றி

யுள்ளார். இவருக்கு சமஸ்கிருதபாஷையில் நல்ல பாண்டித்திய மிருந்ததுபோலவே, கர்னாடக பாஷை, மகாராஷ்டர பாஷைகளிலும் நல்ல பரிச்சயமுண்டு. பூர்வம் போஜ மகா ராஜாவின் அரண்மனையில் பண்டிதர்கள் பொலிவுற்று விளங்கி வந்ததுபோல், மஹாராஜாவின் அரண்மனையில் பண்டிதர் பலர் பொலிவுற்று வந்தனர். சிறந்த வித்வான்களைக் காணுந்தோறும் இவருக்குண்டாகும் ஆனந்தத்திற்கு அளவில்லை. வித்வான்களுக்குத் தக்க பரிசுகொடுத்து ஆதரித்து வந்தார். கவிசிரேஷ்டர்களும், சங்கீத வித்வான்களும், பரதசாஸ்திர அறிஞர்களும் சித்திரக்காரர்களும், சிற்பசாரிகளும் சதா இவரைச் சுற்றியிருப்பர். நட்சத்திரங்களால் பிரகாசம் பெற்ற வானத்தின்கண் விளங்கும் சந்திரன்போலப் பல வித்வான்களின் நடுவே மஹாராஜா பிரகாசித்து வந்தார். உலகத்தில் மரியாதைக்குரிய வித்தை, வீரியம், நற்குணங்கள் எவ்வளவுண்டோ அவ்வளவும் இவரிடம் குடி கொண்டிருந்தன. இவர் சின்னஞ் சிறு பிராயத்திலேயே நல்ல வித்தைகளைப் பயின்று தேர்ச்சி பெற்றவர். நவராத்திரி காலத்தில் பண்டித சபையொன்று சித்தூரில் நடக்கும். ஆங்கு பலதேசத்து பண்டிதர்களும் வருவர். பண்டிதர்களின் பாண்டியத்துக்குக் கேற்றபடி மஹாராஜா சன்மானம் செய்வர். புதிய புதிய விஷயங்கள் அப்பொழுது ஆராய்ச்சி செய்யப் படும். மஹாராஜா தன் சாம்ராஜ்யத்தில் கல்விக் கழகங்கள் பல ஸ்தாபித்தார். கல்வி அபிவிருத்திக்காகப் பல பொருள்களும் நிலங்களும் கொடுக்கப்பட்டன. கல்விப்பெருக்கத்திற்கு மஹாராஜா மிகவும் பாடுபட்டு வந்தார். தவிர, மஹாராஜா சிற்ப சாஸ்திரமுமறிந்த

வராதலால், பல சிற்ப சாஸ்திர வல்லோர்களை வரவழைத்து மீவார் சமஸ்தானத்தில் பல அழகிய அரண்மனைகளையும், கோயில்களையும், கோபுரங்களையும், கோட்டைகளையும் கட்டுவித்தார். சித்தூர், ஆபு, கும்பல்கார், இரான்பூர் முதலிய பல இடங்களில் கட்டப்பட்ட கடடடங்களே தக்க சான்றும். இவருடைய உதவியைக் கொண்டு சிற்ப சாஸ்திரக்ஞர் சிலர், சிற்ப நூல் சிலவற்றை இயற்றினர். மஹாராணா கும்பகர்ணனின் சிற்ப சாஸ்திரி மந்தன் என்பவரால் எட்டு நூல்கள் இயற்றப்பட்டன. தேவதாமூர்த்திபிரகரணம், ரூபாவதாரம், ரூபமண்டலம், பிராஸாதமண்டலம், ராஜவல்லபா, வாஸ்து மண்டலம் முதலிய நூல்கள் மந்தனால் எழுதப்பட்டன. மந்தனுடைய மைந்தன் கோவிந்தனும், மைந்தனுடைய சகோதரன் நாதனும் முறையே சில நூல்கள் இயற்றினர். மஹாராணா சித்தூரில் எடுப்பித்த கீர்த்தி ஸ்தம்பத்தைப் பற்றி அவருடைய ஆதீனத்திலிருந்த சிற்ப சாஸ்திரியொருவர் மஹாராணாவின் உத்திரவு பெற்று ஓர் அகன்ற கற்பாறையில் சிற்பசாஸ்திரத்தை யனுசரித்து எழுதியுள்ளார். அதை உதயபூர் கண்காட்சி சாலையில் இப்பொழுதும் காணலாம். மஹாராணா கட்டுவித்த கோயில்கள் பல உண்டு. சித்தூரில் உள்ள கும்பஸ்வாமி கோயில் பிரதானமான தென்றாலும், ரான்பூரில் எடுப்பித்த கோயில் மிக்க விசேஷமானது. ரான்பூர் கோயில் மீவாரின் பிடபூமிக்குக் கீழுள்ள சாத்திரி கணவாயிலுள்ளது. இது ரிஷபநாதர் கோயில். ரிஷபநாதர் அல்லது ரிஷபதேவர், ஜைனரிய தீர்த்தங்கரர்களில் முதல்வர். மஹாராணாவின் சிற்பி தாறுக் என்பவனால் கட்டப்பட்டது. மஹாராணா அக்கோயில்

எடுப்பித்ததற்கு 10லட்சம் ரூபாய் செலவழித்தார். 'கும்பல்கார் துர்க்கத்திலும், அசவல்லிமலையின் பல இடங்களிலும் மஹாராணா தன் ஆட்சிமுறை செய்த காலத்தில் எவ்வளவு கட்டடங்கள் கட்டிமுடிக்கலாமோ அவ்வளவு கட்டடங்களையும் வெகு அழகாகக் கட்டி முடித்தார்.' என்று எலிபன்ஸ்டன் கூறியுள்ளார். மீவாரிலுள்ள பேர்போன ஏகலிங்கஸ்வாமியின் கோயிலைப் பழுதுபார்த்து நன்கு புதுப்பித்தார். ஸ்வாமியின் கர்ப்ப கிருகத்திற்கு முன் அகன்ற ஓர் மண்டபத்தை எடுப்பித்தார். இதற்கு 'கும்பமண்டபம்' என்று பெயர். அக்கோயிலைச் சுற்றிப் பிராகாரங்களெடுத்துப் பெரிய மதில் சுவர்களையும் நான்கு பக்கங்களிலும் கட்டுவித்தார். சொர்ணத்தால் துவஜஸ்தம்ப மொன்றும் பெரிய பொற்கலச மொன்றும் மஹாராணா செய்துவித்தார். நகதா, கதடவான், அமல்காரா, புவனம் ஆகிய நான்கு கிராமங்களையும் மஹாராணா அக்கோயிலுக்கு மானியமாகக் கொடுத்தார். இக்கோயிலின் பெயரால் ஓர் நகரம் உண்டாயிற்று. இதற்கு ஏகலிங்கப் பட்டணம் என்று பெயர். இது உதயபூருக்குப் பதினைந்துமைல் தூரத்திலுள்ளது. மஹாராணா காலத்தில் விசேஷமாக அர்ச்சனைகளும் பூசைகளும் நடந்து வந்ததால், கணக்கற்ற ஜனங்கள் அக்கோயிலுக்குப் போவதைப்பற்றி மஹாராணா நல்லபாதை யொன்றை வெட்டிவைத்தார். பிறகு அப்பாதை சீர்திருத்தப்படாமல் கேவலமாக யிருந்தது. சமீபகாலத்தில் மீண்டும் அவ்வழி சீர்திருத்தப்பட்டது. அக்கோயிலுக்குப்போகும் வழியில் சுமார் ஒன்பது அல்லது 10 மைல்தூரம் வரை மலைமீது ஏறுவதும் இறங்குவதும் கணவாய் வழி

செல்லுவதுமாக யிருக்கிறது. அக்கோயிலைச் சுற்றிப் பல தடாகங்களிருக்கின்றன. பார்வைக்கு வெகு அழகாயிருக்கும். இக்கோயிலில் சதுர் முகங்கொண்ட ஈஸ்வர விக்கிரகமொன்று கி. பி. 1488-ம் வருடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்கு முன் வெகுகாலமாக அக்கோயிலில் மகாதேவருடைய பெரிய விக்கிரகமொன்று கர்ப்பக்கிருகத்தில் சிலாரூபமாக யிருந்து வந்தது. சன்னதிக்கு முன் மண்டபத்தில் ஓர் பெரிய நந்தியுண்டு. இது பித்தளையாற் செய்யப்பட்டது. கோயில் மண்டபங்கள் நல்ல சலவைக் கற்களால் எடுக்கப்பட்டு வெகு அழகாயிருக்கின்றன. தூண்கள் நல்ல கறுமையான கற்களால் செய்யப்பட்டவை. கி.பி. எட்டாவது நூற்றாண்டில் ஹாரிதஸ்வாமி மீவாரையாண்ட பாபாராவல் என்பவரிடம் ஏகலிங்க ஸ்வாமியின் கோயிலை ஒப்புவித்துவிட்டுப் போனதிலிருந்து இன்றுவரை மீவார சமஸ்தானத்தைச் சேர்ந்த மஹாராஜாக்களே அக்கோயிலுக்குச் சர்வாதிகாரம் பெற்றுவருவதுடன் பிரதான ஸ்தானிகர்களாகவுமிருந்துவருகின்றனர். மஹாராஜாக்கள் கோயிலுக்கு வரும்பொழுது, சுவாமிக்குச்செய்யவேண்டிய சகல கைங்கரியங்களையும் இவர்களே செய்பவுஞ் செய்வர். 15-வது நூற்றாண்டின் முதலில் ஏகலிங்க ஸ்வாமியின் கோயிலை மகம்மதியர்கள் இடித்தனர் மஹாராஜா மோகல் அக்கோயிலைப் புதுப்பித்தான். மஹாராஜா கும்பன் மோகல் விட்டதிலிருந்து பூர்த்தி செய்து அழகுறச் செய்தார். நகரா என்னும் ஊருக்கும் ஏகலிங்கப் பட்டணத்திற்கும் இடையே ஒரு பெரிய ஏரியுண்டு. இந்தஏரி வெகு அழகாயிருக்கும். அவ்வேரிக்கு போகாதித்யர் கரை கட்டுவித்தார். பாபா

அரசாட்சிக்கு ஐந்து தலைமுறைக்கு முன்னுலேயே அவ்வேரிக்குக்கரை கட்டப்பட்டது. பிறகு மோகலும் கும்ப மஹாராணுவும் அவ்வேரிக்கு அடிக்கடி பழுது பார்த்தும் சீர்திருத்தியும் வந்தனர். நவராத்திரி பூசை இராஜபுத்திரர்களுக்கும் மிகவும் விசேஷம். நவராத்திரி முதல் நாளில் கட்கபூசை நடக்கும். ஒரு பெரிய கட்கத்தை சிங்காரஞ்செய்து யானையின் மீது ஏற்றி ஊர் கோலமாகக் கொண்டுவந்த பிறகு மண்டபத்தில் இறக்குவார்கள். அக்கட்கத்திற்குப் பூசை நடக்கும். மஹாராணு தன் பரிவாரத்துடன் வந்து அக்கட்கத்தை வணங்கி பிரசாதம் பெற்றுப் போவர். பிறகு இராஜபுத்திர வீரர்கள் பிரசாதங்கள் பெறுவர். கடைசி நாள் வெகு ஆடம்பரமாக அக்கட்கத்தை அரண்மனைக்குக் கொண்டு வருவர். அன்று பாணவேடிக்கைகளும் ஆட்டங்களும் பாட்டுக் கச்சேரிகளும், பஜனைகளும், வீரர்களின் கத்திவிளையாட்டு முதலியவைகளும் நடக்கும். மஹாராணு வீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் விசேஷ மரியாதை செய்வர். நவராத்திரி ஒன்பது நாளும் வீரர்களும் மற்றவர்களும் அரண்மனையிலேயே விருந்துண்பர். கணக்கற்ற ஜனங்கள் காலையிலிருந்து மாலை வரை உண்ணும் வண்ணமாகவே யிருப்பர்.

6. துர்க்கங்கள்

மீவார சாம்ராச்சியம் நல்ல அரண் வலி பெற்றதாக யிருந்தது. மீவார சமஸ்தானத்தின் கண்ணிருந்த எண்பத்திநான்கு கோட்டைகளில் கும்பமஹாராணு முப்பத்திரண்டு கோட்டைகளை யெடுப்பித்தார். ஆங்காங்கு துர்க்கங்களைக் கட்டி அத்துர்க்கங்கள் தோறும் அழகிய ஓர் கோயிலையும் எடுப்பித்தார். மீவார சமஸ்தானத்தின் மேற்கு எல்லைப்புறத்திற்கும் ஆபூவுக்கும் இடையேயுள்ள கணவாயைப் பலமாகக்காக்க ஓர் கோட்டையைக் கட்டினுர். இக்கோட்டைக்கு 'வசந்தி' என்று பெயர். இக்கணவாய் மிகவும் பிரதானமானது. மீவார் சமஸ்தானத்தின் மேற்கு திக்கைக் காக்க இக் கோட்டைமிகவும் உபயோகமாகயிருந்தது. அதுடன் வசந்தாபூர் என்னும் ஊரை உண்டாக்கி அதன் சமீபத்திலுள்ள சிரோஹி மாகாணத்தைச் சேர்ந்த வஸிஷ்டா ஜில்லாவிலுள்ள அனல் குண்ட் என்னும் கிராமத்தைச் சுற்றிலும் ஏழு பெரிய ஏரிகளையும் மஹாராணு வெட்டினுர். அரவல்லி பர்வதத்திலுள்ள வனவாசிகளினின்றும் ஷோராநாலா, தேவகோட்டை முதலியவைகளைக் காக்க 'மசசன்' ஒரு கோட்டையையும் மஹாராணு கட்டினுர். அம்பா பவானி கோயிலுக்குச் சமீபமாக 'கோல்லணு' கோட்டையொன்றும், பத்நோருக்குச

சமீபத்தே 'வைராத்' கோட்டையொன்றும் கட்டப்பட்டது. மீவார் சமஸ்தானத்தின் உள்ளேயே மஹாராணுவின் மூதாதை **காம்ஸிங்கரால்** கட்டப்பட்ட ஆஹோர் கோட்டையை கும்பமஹாராணு நன்கு செப்பனிட்டுப் புதிப்பித்து, அதற்கு 'கைலாசமேரு' என்னும் பெயரையுங் கொடுத்தார். ஜோரா பர்வதத்தைச் சேர்ந்த பூமியாபீல் சாதியார்கள் படையெழுச்சி யெடுக்காமலும், பனோராவைச் சேர்ந்த மலைவாசிகள் எதிர்க்காமலிருக்கவும் அநேக கோட்டைகளை மஹாராணு கட்டுவித்தார், மீவார சமஸ்தானததிற்கும் மாரவார சமஸ்தானத்திற்கும் இராஜ்ய எல்லையை இவர் முதன் முதல் ஏற்படுத்தினர். ஆபூபர்வதத்தின் சிகரத்தில் மஹாராணு கி.பி. 1452-ம் வருடத்தில் ஓர் பெரிய அரண்மனையைக் கட்டினர். அவ்வரண்மனைக்கு 'அச்சல்கார்' என்று பெயர். ஆபூபர்வதத்தின் சிகரத்தில் ஏற்கனவே பாரமார் வமிசத்தவர்களால் கட்டப்பட்ட ஓர் சிறிய கோட்டை யிருந்தது. அது நல்ல காப்புக்கு ஏற்றதாக யில்லாதததைக் கண்ட மஹாராணு, பெரிய பலமான கோட்டையை யெடுப்பித்தார். அக்கோட்டையின் முதல் வாயிலுக்கு 'ஹனுமான் வாயில்' என்று பெயர். இந்த ஹனுமான்கோட்டைவாயிலுக்கு இரண்டு நிலையுள்ள இரண்டு கோபுரங்கள் இருந்தன. இடையே கட்டப்பட்ட காவற்கூட்டத்தால் இவ்விரு கோபுரங்களுக்கும் வழியேற்பட்டிருந்தது. கோபுரங்கள் அழகிய கருங்கற்களால் கட்டப்பட்டவை. இரண்டாவது கோட்டை வாயிலுக்கு 'சம்பக வாயில்' என்று பெயர். இக்கோட்டை வாயிலுக்குப்பக்கத்தே பழைய சம்பக விருட்சம் இருந்த காரணம் பற்றி அதற்குச் சம்பக வாயில்

என்று பெயருண்டாயிற்று. இக்கோட்டை வாயிலைத் தாண்டினதும் சமணர் கோயிலொன்றுண்டு. பாஸ்வ நாதஸ்வாமிக்கு அக்கோயில் கட்டப்பட்டது. இதற்கு மேல் இருக்கும் கோட்டைவாயில்கள் கும்பமஹா ராணாவால புதிதாகக் கட்டப்பட்டவை. நல்ல கோடை காலத்திலும் வற்றாத ஒரு சிறிய தடாகம் இங்கு உண்டு. அதற்கு 'சிராவண பாத்ரி' என்று பெயர். இக்கோட்டையின்மத்தியில் ஓர்உயர்ந்த கோபுரமுண்டு. அக்கோபுரத்தின் மீது சதா வீரர்கள் காவல் புரிந்து கொண்டும் இருப்பர். அந்த கோபுரத்திலிருந்து மலை யைச் சுற்றிலும் மலையடிவாரத்திலும் வருபவர்கள் போகிறவர்களின் நடமாட்டங்கள் யாவும் நன்கு தெரி யும். கோட்டையின் மீது பகைவர்கள் படையெடுத்து வருவதைத் தூரத்திலிருந்தே இக்கோபுரத்தினின்றும் அறிவர். அச்சல்கார் மாளிகையிலிருந்து தில்வாரா கோட்டைவாயிலுக்குப் போகும் வழியில் மஹாராணா கும்பகர்ணனின் சிலையும் வேறுஇரு மஹாராணாக்களின் சிலைகளும், குலகுருவின் சிலையொன்றுமாக நான்கு உருவச்சிலைகள் இன்றும் நாம் காணலாம். கும்பஸ்வாமி கோயிலுக்கு முன்ஒருபேரிய தடாகமொன்றை வெட்டி அதற்கு 'இராம குண்டம்' என்று பெயரையும் மஹா ராணா வைத்தார். இத்தடாகம் தவிர, வேறு நான்கு தடாகங்களையும் இவர் வெட்டுவித்தார். கும்பமஹா ராணா எடுப்பித்த கோட்டைகளில் 'கும்பல்மீர்' (கும்பல் கார்)கோட்டையே மிகவும் பிரதானமானது. இது நல்ல பலமுள்ள கோட்டை; பகைவரால் தகர்க்க முடியாத அவ்வளவு வலிவுள்ளது. உதயபூர் கோட்டையும் சித் தூர் துர்க்கமும் பந்தோபஸ்துக்குத் தகுதியானதல்ல

வென்று நினைக்குங்காலங்களில் மஹாராணுக்கள் தங்கள் மனைவிமக்களுடனும் பரிவாரங்களுடனும் கும்பல்மீர் கோட்டைக்கு வருவது வழக்கம். உதயஸிங்கர் முதல் இராஜஸிங் வரை ஆண்டுவந்த ஒவ்வொரு மஹாராணுக்களும் பந்தோபஸ்திற்காக இக்கோட்டைக்கு வருவது வழக்கம். மொகலாய அரசாட்சி பலப்பட்டு அக்பர் முதலான வீரர்கள் டில்லியை யாண்டு வருகையில் கும்பல்மீர் கோட்டையின்மீது அவர்களுக்குக் கண்ணேட்டமிருந்து வந்தது. முதல் முதல் அக்பர் சக்கரவர்த்தி வடஇந்தியாவிலுள்ள கோட்டைகளிலெல்லாம் கும்பல்மீர் கோட்டை மிகவும் பலமானதெனக்கண்டு அக்கோட்டையைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்டார். அக்பர் சக்கரவர்த்திக்குத் துணையாக இராஜபுத்திர சேனதிபதி இராஜாமான்ஸிங் பெரிய படையுடன் முற்றுகை யிடப் புறப்பட்டார். அவருக்குத் துணையாக மாரவார சமஸ்தானத்தைச் சேர்ந்த ராத்தோர் வீரர்கள், ஸிரோஹியைச் சேர்ந்த சோகன் வமிசத்தவர்கள், ஜயபூரைச் சேர்ந்த குசவாஹவீரர்கள் ஆகிய இராஜபுத்திர வமிசத்தாரனைவரும் மீவார சமஸ்தானத்தை யாண்டு அழியாப் பெயர் பெற்ற அசகாய சூரர் பிரதாபஸிங்கரின் இராஜ்யத்தை யழிக்க கும்பல்மீர் கோட்டையைத் தகர்க்க அக்பர் சக்கரவர்த்திக்குத் துணையாக நின்றனர். மீவார சமஸ்தானத்தின் மீதும் பிரதாபசிங்கரின் மீதும் மற்ற இராஜபுத்திர வீரர்களுக்கிருந்த பொருமையினலேயே அன்னியர் வசம் ஒப்புவிக்கும்படி அவ்வீரர்கள் செய்தனர். இராஜபுத்திரர்களுக்குள்ளே பகைமையும் பொருமையும் ஏற்படாமல் ஒற்றுமையும் ஆதரிப்பும் இருந்திருந்தால், பாரத நாடு மொகலாய அரசாட்சிக்கும்

பிறகு பிரிட்டிஷ் கம்பெனி அரசாட்சிக்கும், தற்பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற்கும் ஆதினப்பட்டிராது. மீவார சமஸ்தானத்தைச்சேர்ந்த ஸீஸொதிய வமிசத்தவர்களுக்கும் மாரவார சமஸ்தானத்தைச் சேர்ந்த ராத்தோர் வமிசத்தவர்களுக்கும், சோகன், சோலாங்கி, சோளரா, ஜாட், முதலான இராஜபுத்திர வமிசத்தவர்களுக்கும் இடைவிடாமல் போர்நடந்து வந்த காரணத்தாலேயே பாரதநாட்டின் கண் அன்னிய பிரபுத்துவம் உண்டாயிற்று. மீவார சமஸ்தானத்தின் உயர்வைக்கண்டு மாரவார் சமஸ்தானதிபதிகளும் மற்றவர்களும் பொறுமை கொள்வதும், மாரவார் சமஸ்தானதிபதியின் உயர்வைக்கண்டு மற்ற இராஜ புத்திர சமஸ்தானங்கள் பொறுமை கொள்வதுமாக யிருந்து வந்ததினலேயே, இராஜபுத்திர வீரர்களுக்குள்ளே ஒற்றுமை நீங்கி தேசம் அன்னியர்வசம் போய் விட்டது. இராஜபுத்திர வீரர்களொவ்வொருவரும் மகா தீரர்கள். நல்லயுத்த சாகஸ மறிந்தவர்கள். இரண சூரர்கள். அஞ்சாநெஞ்சம் படைத்த தறுகணாளர்கள். உயர்ந்த தேசாபிமானமும் மதாபிமானமுங் கொண்டவர்கள். பூர்வம் இராஜபுத்திர வீரர்கள் தாங்கள் அப்போதைக்கப்போது அன்னியப் படையெழுச்சியால் இழுக்கும் தங்கள் தேசங்களைப் பிரயத்தனங்கள் செய்து மீண்டும் எப்படியாகிலும் மீட்பர். அலாவுதீன் காலத்திலும், பேபர் காலத்திலும் பிறகு அக்பர், ஷாஜிஹான், ஔரங்கசீப் முதலானோர் காலங்களிலும் இராஜபுத்திரவீரர்கள் தாங்கள் இழந்த சமஸ்தானங்களை மறுபடியும் அன்னிய பிரபுத்துவத்தினின்றும் கைப்பற்றிக்கொண்டனர். தேசத்தையிழக்கும் இராஜ

புத்திரவீரர்கள் ஜன்மதேசத்தை விட்டுவிட்டு மலைகளிலும் காடுகளிலும் மறைந்து வசித்துப்பிறகு சமயம் வாய்க்கும் காலங்களில் வீரர்களைச் சேர்த்துக் கொண்டு பலகவர்களை எதிர்ப்பர். இராஜபுத்திர வீரன் உயிரையும் உயிருக்குயிராயிருந்தும் சகல பொருளையும் தேசத்தின் விடுதலைக்காக அரிய தியாகஞ் செய்வர். மீவாரைச்சேர்ந்தவர்களாயினும், மாரவாரத்தைச் சேர்ந்தவர்களாயினும், இராஜபுதனத்தைச் சேர்ந்த மற்ற சமஸ்தானங்களைச் சேர்ந்தவர்களாயினும் எல்லா இராஜபுத்திரவீரர்களும் ஒருவருக்கொருவர் இணையற்ற தேசாபிமானிகள். யுத்தத்தில் முதுகு காட்டி யோடுபவர்களல்ல. இராஜபுத்திரவீரர்கள் ஒருக்கால் யுத்தத்தில் புறங்காட்டியோடினும் அவர்களுடைய வீரபத்னிமார்கள் அவர்களை அங்கீகரிக்கமாட்டார்கள். புருஷர்களுடைய முதுகில் காயமிருப்பதை நம்மவர்கள் கண்டால், உடனே அவர்களைத்திரஸ்கரிப்பார்கள். யுத்தத்தில் புருடர்கள் கொடும்போர் புரிந்துமாண்டால், மாதர்கள் வெகு சந்தோஷத்துடன் அக்கினி மூட்டித் தீக்குதித்து வீரசொர்க்கமடைவர். இராஜபுதனத்தைச் சேர்ந்த வீரமாதர்கள் அநேகந் தடவைகளில் தங்கள் கணவன்மார்களைக் காப்பாற்ற ஆண்வேடந்தரித்துக் கொடியபோர் செய்திருக்கின்றனர். இராஜபுதனத்தைச் சேர்ந்த ஏழு சமஸ்தானதிபதிகளும் ஐக்கியத்துடன் இருந்திருந்தால், அவர்களைவெல்ல எந்த படைகளாலும் முடியாது. அவ்வேழு சமஸ்தானதிபதிகளும் ஐக்கியத்துடன் இராஜ்ய நிர்வாகஞ் செய்திருப்பார்களானால், பாரதநாடும், ஆசியாக்கண்டத்தின் பல தேசங்களும் அவர்களுக்குச் சுவாதீனப்பட்டிருக்கும்.

பாரதநாட்டின் துர்ப்பாக்கியமே அவர்களுக்கு ஐக்கிய மில்லாமற் செய்தது. அலாவுதீன் சித்தூர் துர்க்கத் தின்மீது போர் தொடுத்து பத்மினியைக்கைக்கொள்ள வந்த காலத்தில் இராஜபுத்திரவீரர்களனைவரும் ஒன்று சேராதகாரணத்தினாலேயே சித்தூர் துர்க்கமும் மற்ற சில இராஜபுத்திரர்களின் சமஸ்தானங்களும் அவனுக் குச் சொந்தமாயின. பேபர்காலத்திலும் அப்படியே. அக்பர் பாதுஷாவுடன் இராஜாமான்சிங் முதலிய இராஜ புத்திரவீரர்கள் சேர்ந்து பிரதாபஸிங்கருக்கு விரோத மாகப் போராடாமற்படி யிருந்திருப்பார்களானால், மொகலாய ஆட்சி அன்றே அழிந்திருக்கும். இங்ஙனம் பல சமயங்களில் இராஜபுத்திர வீரர்களிற் சிலர் ஒற்று மையைக்கருதாமல் போர் செய்துவந்ததின் பயனாக அவர்கள் நாடுநகரங்களை யிழந்தனர். நிற்க, கும்பல்மீர் துர்க்கம் அக்பர் சக்கரவர்த்திக்கு சுவாதீனமான சின் னட் பிறகு, மீண்டும் மகாராணு வமிசத்தார் கைப்பற் றினர். ஜிஹாங்கிர், ஔரங்கசீப் பாதுஷாக்கள் தங்க ளாலியன்றவரை அத்துர்க்கத்தைக்கைப்பற்றப் பிரயத் தனப்பட்டும் முடியாமற்போய்விட்டது. ஜீஹாங்கீர் பிரதாப்ஸிங்கரின் குமாரர் அமர்ஸிங்கருடன் போர்புரிந் தும் கும்பல்மீர் துர்க்கத்தைக் கைப்பற்ற வில்லை. ஔரங்கசீப் பாதுஷா இராணு இராஜஸிங்கருடன் கடும் போர் புரிந்து அவரைத் தொற்கடித்தபின்னரும் அத் துர்க்கத்தைக் கைப்பற்ற முடியவில்லை. மொகலாய சாம்ராஜ்யம் பாரதநாட்டில் இருந்தகாலத்தில் அக்பர் சக்கரவர்த்தி யொருவராலேயே இராஜபுத்திரவீரர்க ளைக்கொண்டு இத்துர்க்கம் அன்னியர் வசம் சுவாதீனப் பட்டதேயன்றி, மற்றகாலங்களில் எப்பொழுதுமில்லை.

இத்தகைய பலமான துர்க்கத்தை கும்பமகாராணு கட்டுவித்துப் பெரும் புகழ் பெற்றூர். இத்துர்க்கம் முதல் முதல் கி. பி. இரண்டாவது நூற்றுண்டில் சமண அரசர் சம்பிரதியால் கட்டுவித்ததெனக் கூறப் படுகிறது. இத்துர்க்கமும் அதைச்சேர்ந்த மாளிகை முதலியவைகளேயும் கட்டுவிக்க மகாராணு கி. பி. 1443-ம் ஆண்டில் ஆரம்பித்து கி. பி. 1455-ம் வருட முடிவில் முடித்தார். கும்பமஹாராணுவால் கட்டப் பட்ட அரண்மனே சமுத்திரமட்டத்திற்கு 3568 அடி உயரமுள்ளது. ஆரவல்லிமலேத் தொடரில் நீலமலே, சுவேதமலே, ஹேமகூடம், இமவத், நிஷாதம், கந்தமா தனம் முதலிய மலேகள் இருக்கின்றன. சந்திரனேச் சுற்றித் தாரா கணங்களிருப்பதுபோல ஆரவல்லிமலே யைச்சுற்றி இம்மலேகளிருக்கின்றன. இத்துர்க்கத்தின் மத்தியில் சிறு கோட்டை யொன்று முண்டு. அதற்கு 'கதார் காரா' என்று பெயர். இதுடன் ஓர் சிறு மாளி கையுமுண்டு. கும்பல்மீர் துர்க்கத்திற்கு எழு கோட் டை வாயில்களுண்டு. அவை, ஹனுமான் வாயில், ஆரேத்வாயில், ஹாபல்லாவாயில், ஜயத்துவாரவாயில், இராமர் வாயில், கீர்த்திவாயில் என்பன. ஹனுமான் கோட்டை வாயிலுக்குள்ளே கும்பமஹாராணு யாகம் செய்த யாகசாலேயுமுண்டு. துர்க்கத்தின் அடிவாரத் தில் ஓர் கோயிலுண்டு. அதையும் கும்பமஹாராணுவே கட்டினுர். கும்பமஹாராணு எடுப்பித்த கீர்த்திஸ்தம்பம் மிகவும் பிரசித்தமானது. இதற்கு ஜயஸ்தம்பம் என்றுங் கூறுவர். இது சித்தூர் துர்க்கத்திலுள்ளது. இது மாளவ தேசாதிபதியின் மீது மஹாராணு கொண்ட வெற்றிக்காக கி. பி. 1448-ம் ஆண்டில் கட்டப்பட்

டது. இதை டில்லியிலுள்ள 'குதப்மினுர்' என்னும் கோபுரத்துக்கு ஒப்பிடலாமேயன்றி வேறுவித கோபுரங்களுக்கும் ஒப்பிட முடியாதெனஜேம்ஸ் டாட் கூறியுள்ளார். இது 120 அடி உயரமுள்ளது; அடி 35 அடி அகல முள்ளது: மேலே 17½ அடி அகல முள்ளது. இதற்கு ஒன்பது மாடி உண்டு. இந்த ஸ்தம்பம் வெகு வேலைப்பாடு கொண்டது. சிற்பசாரிகள் தங்கள் சாமர்த்தியங்களை யெல்லாம் காண்பித்தது போலத் தோன்றும். இதைக்கட்டி முடிக்கச் சற்றேறக்குறைய 1 கோடி ரூபாய் செலவழிந்ததென **கர்னல் ஜேம்ஸ் டாட்** கூறுகிறுர். சித்தூர் கோட்டைக்குள் கிருஷ்ணன் கோயில், மஹாதேவர் ஆலயம், சூரம் சாகரம் என்னும் புஷ்கரணி, குகரேஷ்வர் நந்தவனம் ஆகிய இவையாவும் கும்பமஹாராணு வால் கட்டப்பட்டன. இந்த சித்தூர் துர்க்கத்திற்கும் ஏழு கோட்டை வாயில் களைக் கட்டு வித்தார். ஸ்ரீராமர் வாயில், ஹனுமான் வாயில், பைரவ தாயில் இலட்சுமி வாயில், சாமுண்டி வாயில், தாரா வாயில், இராஜவாயில் ஆகிய இவைகளேயாம். ஆதிவாராகஸ்வாமி கோயிலொன்றையும் கும்பமஹாராணு சித்தூரில் கட்டுவித்தார். கும்பமஹாராணுவின் குமாரத்தி **இராமாபாய்** மீவாரில் இராம குண்டம் என்னு மோர் பெரிய தடாகத்தை வெட்டு வித்தாள். இம்மாது கிர்ஞர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மண்டலீக இராஜாவை மணந்து இல்லறம் நடாத்தி வந்தாள். கும்ப மஹாராணுவின் பொக்கிஷதாரி ஸாகோலபனுடைய மைந்தன் **பந்தாரிபேலன்,** கீர்த்தி ஸ்தம்பத்திற்கருகாமையில் 'சிங்கார சௌரி' என்னு மொரு மாளிகையைக் கட்டினன். கும்பமஹாராணு

வாலும் அவருடைய பரிசனங்களாலும் பல கட்டடங்கள் கட்டப்பட்டு மீவார் சமஸ்தானம் மற்ற சமஸ்தானங்களை விட பெருமையுற்றிருந்தது.

7. மஹாராணாவின் அரசியல்

மீவார் சாம்ராஜ்ய அரசியல் முறை வெகு காலமாகத் தாதை வழி என்னும் முறையைப்பற்றி வந்தது. குடும்பத்தலைமையைக் கொண்டும் வமிசத்தலைமையைக் கொண்டும் அரசு ஸ்தாபிக்கப்பட்டது. வமிசத் தலைவர் நாயகனாயிருந்து சமுகத்தைப் பரிபாலித்து வந்ததின் காரணமாகத் தாதை வழி ஏற்பட்டது. இவ்வரசு ஏகநாயகத்துவமாக யிருந்ததே யன்றி பிரஜாதிபத்திய முறையாகவில்லை. என்றாலும், பிரஜைகளின் பிரதிநிதிகள் அரசியல் நிர்வாகங்களைச் செய்து வந்தனர். இராஜபுத்திர சமஸ்தானங்கள் அநேகமாக எல்லாம் இராணுவ சமஸ் தானங்களாக வேயிருந்து வந்தன வென்று நாம் கூறலாம். இராணுவத்தைச் சேர்ந்த வீரர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. நில உரிமை பெற்றவர்களுக்கே அரசியலில் பாத்தியதை யுண்டு. ஐம்பதினாயிர ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாய் வரை வருட வரும்படியைக்கொண்ட நிலச்சுவான்தார்கள் அரசனுடைய மந்திராலோசனை சபைக்குரியவர்கள். அரசனுடைய விசேஷ உற்சவங்களுக்கும் அரசாங்கத்தில் நடக்கும் விசேஷ தினங்களுக்கும் வரவழைக்கப் பட்டு இவர்கள் உபசரிக்கப் படுவார்கள். இரண்டாவதாக, ஐம்மாயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதினாயிரம்

ரூபாய்வரை வருட வரும்படியைக்கொண்டநிலச்சுவான்தார்கள் அரசனுக்கு மெய்க்காப்பாகயிருப்பர். இராணுவ உத்தியோகஸ்தர்கள் முதலிய உத்தியோக பதவியைக் கொண்டவர்கள் இவ்விரண்டாவது இனத்தைச்சேர்ந்தவர் களாவார்கள். மூன்றாவது இனத்தைச் சேர்ந்தவர்கள் ஐயாயிரம் ரூபாய் வருடவரும்படிக்குக் கீழ்ப்பட்டவர் களாகவே யிருப்பார்கள். இவர்கள் கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் வசிப்பர். யுத்த காலங்களில் அரசர்களுக்கு இவர்களே சகல பண்டங்களேயும் கொடுத்து உதவுவதுடன் சைன்னியத்திற்கு ஆளனுப்புவது முண்டு. மீவார சமஸ்தானத்திற்கு இவர்களே முக்கிய அஸ்திவாரம். தவிர, அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு வகுப்பாவார். இராஜபுதன சமஸ்தானங்களில் வெகுகாலமாக அரசியல் சட்டங்களும் பிரமாணங்களுமிருந்தன. ஐரோப்பாவில் எழுத்து மூலமாகச் சட்டங்கள் ஏற்படாத காலத்திற்கு முன்னரே இராஜபுதனத்தில் தர்ம நீதி சட்டங்களும், இராஜ நீதி சட்டங்களுமிருந்தன. மீவார் சமஸ்தானத்தை யாண்ட பல மஹாராஜாக்கள் அப்போதைக் கப்போது தந்த இராஜ சாஸனங்கள், மானியங்கள், பட்டயங்கள் ஆகிய இவைகள் சிறந்த இராஜரீகத்தைக் குறிக்கக் கூடியவைகளாக யிருக்கின்றன. அவர்களுடைய வரி நிர்ணயம், பிரஜா பரிபாலன முறை முதலிய நிர்வாகச் சட்டங்கள் மகம்மதிய படையெழுச்சியால் அநேகமாக அழிந்தன. நிலத்தீர்வையும், வர்த்தகத்தீர்வையும், சங்கத்தீர்வையும் பிரதான மானவை. நிலத்தீர்வை ஜனங்களுக்கு அதிக பளுவைக் கொடுக்கவில்லை. ஜனங்களிடமிருந்து பெறும் வரிப்பணம்

மீண்டும் ஜனங்களுக்காகவே செலவழிக்கப் படும். மஹாராணுவுக்கே அரசாங்கத்தில் சர்வாதிகாரம் உண்டு. அவருக்கு உதவியாக மந்திரிமார்கள் நால்வர் உண்டு. அம்மந்திரிமார்கள் வரி முதலிய அரசிறை விஷயங்களையும், நீதி பரிபாலனங்களையும் மற்ற பல்வகை விஷயங்களையும் நடத்தி வருவர். அவர்களுக்குக் கீழே பல உத்தியோகஸ்தர்களிருந்தனர். உத்தியோகஸ்தர்களுக்கு மானியங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. தவிர அவர்களுக்குப் பட்டங்களும் கொடுக்கப்படும். அப்பட்டங்கள் தலைமுறை தலைமுறையாகவே சந்ததியார்களுக்கும் ஏற்பட்டு வரும். ஆயுதச்சட்டம் முதலிய சட்டங் கிடையாது. ஒவ்வொரு இராஜபுத்திரனும் தாராளமாக ஆயுதந்தாங்கி யிருப்பான். இராஜபுத்திர நிலச்சுவான்தார் ஒவ்வொருவரும் குதிரைகளையும் ஆயுதங்களையும் வைத்திருப்பர். ஒவ்வொரு நிலச்சுவான்தாரிடத்தும் சில வீரர்களுமிருப்பர். அவர்கள் யாவரும் மஹாராணுவுக்கு யுத்த காலத்தில் உதவி செய்வர். மஹாராணு யுத்தஞ் செய்யுங் காலங்களிலெல்லாம் பலர் இராணுவத்திற்கு வந்து சேர்வர். தண்ட யாத்திரை செய்கையில் சைன்னியம் தங்கு மிடங்களில் அவ்வூர் வாசிகள் வீரர்களுக்கு உணவும் குதிரை முதலிய ஜெந்துக்களுக்குப் புல் முதலிய தீனிகளும் கொடுக்கவேண்டும். அங்ஙனம் கொடுக்கும் அவ்வூர் வாசிகளுக்கு நிலவரி கிடையாது. மஹாராணுவின் கீழ் பல சிறு ஜமீன்தார்களிருந்தனர். அவர்கள் சமஸ்தானத்திற்கு ஆள் படையும் மற்ற பண்டங்களும் கொடுத்து உதவுவர். சில சமயங்களில் இராணுவ வரியும் யுத்த காலத்தில் வ்திப்பதுண்டு. இராணுவத்தில் சேராதவர்களுக்குத்

தான் இவ்வரி விதிப்பர். இராணுவத்தில் ஆட்கள் சேருவது கட்டாயமென இதனால் தெரிய வருகிறது. என்றாலும், இக்காலத்தில் ஐரோப்பா கண்டத்திலுள்ள சில வல்லரசுகள் யுத்த காலங்களில் இராணுவத்திலொவ்வொரு ஆண்மகனும் சேரவேண்டு மென்னும் நிர்ப்பந்தம் இருப்பது போல அவ்வளவு நிர்ப்பந்தம் இருந்ததாகத் தெரிய வில்லை. இராஜபுத்திர வம்சத்தார் ஒவ்வொருவரும் யுத்தப் பயிற்சி யுள்ளவர்களாதலால், அவர்களுக்குத்தான் இந்நிபந்தனை யுண்டெனக் கூறலாம். வர்த்தகர்கள், விவசாயிகள், பிராம்மணர்கள் மற்ற கைவினைஞர்கள் ஆகிய இவர்களை இராணுவத்தில் கட்டாயம் வந்து சேரும்படி ஒரு நிபந்தனை இருந்ததாகத் தெரிய வில்லை. இராஜ புத்திர வீரர்கள் நல்ல உடை தரித்து வாளுடன் வீரஞ் செறித்த வண்ணமிருப்பர். இராஜபுத்திர வீரர்களின் நடையுடை பாவனைகள் வெகு மேலானதாக விருக்கும். நாகரிக மற்ற தன்மை யென்பது அவர்களிடத்திலில்லை. இராஜபுத்திர அரசர்கள் யுத்த காலங்களில் தங்கள் இல்லுறைத் தெய்வங்களின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே போராடுவர். சில இராஜபுதன மன்னர்கள் தங்கள் இல்லுறைத் தெய்வங்களை யுத்த பூமிக்குக் கொண்டு போவது முண்டு. மீவார் சமஸ்தானத்திற்கு நல்ல சிவப்புத் துணியில் பொன்மய சூரியன் உருவம் பொறித்திருக்கும் கொடியுண்டு. இக்கொடி ஒவ்வொரு கோட்டையின் உச்சியிலும் வெகு உன்னதமாகப் பறந்துகொண்டிருக்கும். தவிர, யுத்தகாலங்களில் பல வீரர்கள் துவஜந்தாங்கிச் செல்வர். மீவார் இராஜ்யத்தில் நல்ல சுரங்கங்களிருந்தன. வெள்ளிச் சுரங்கங்களும்,

தகரச் சுரங்கங்களும், அபிரகச் சுரங்கங்களும் இருந்தன. இச்சுரங்கங்கள் நன்கு வேலை செய்யப்பட்டு அரசாங்கத்திற்குப் பணவருவாயிலை யுண்டாக்கின. நாணயங்களின் நடமாட்டம் மீவார் சமஸ்தானத்தி லிருந்து வந்தது. தங்க நாணயமும் வெள்ளி நாணயமும் கும்ப மஹாராணு காலத்தில் செலாவணி ஆயின. கைத்தொழில்கள் விர்த்தியாயின. நெசவுத் தொழில்கள், கட்டட வேலைகள், உலோகத்தொழில்கள் முதலியவைகளே சிறந்தவை. துணிகளுக்குப் பூப்போடும் வேலையும், சரிகை வேலையும் ஸ்திரீகளாற் செய்யப்பட்டு வந்தன. மஹாராணு, தொழிலாளர்களின் அபிவிர்த்தியைக் கவனித்து வந்தார். நிற்க, நீதி பரிபாலன வழியில் மஹாராணுவே உயர்ந்த நீதிபதி. மீவார் சமஸ்தானத்தில் பல நீதிமன்றங்களும் நீதிபதிகளுமிருப்பர். கிராமங்களின் பஞ்சாயத்து வை அனுதிகாலமாக ஏற்பட்டபடியிருந்து வந்தது. நீர்ப்பாசன முறைக்குப் பல வாய்க்கால்கள் வெட்டப் பட்டதாகத் தெரியவில்லை. என்றாலும், பல இடங்களில் ஏரிகளும் தடாகங்களும் நீர்ப்பாசனத்திற்கு கும்பமஹாராணுவும் அவருடைய மூதாதைகளும் வெட்டுவித்ததாகத் தெரிய வருகிறது. மீவார் சமஸ்தான அரசியல் தற்கால இராஜரீக சாஸ்திரக்ஞர்களுக்கு இராணுவ அதிகாரம் பெற்ற சுயேச்சாதிபத்யம் என்று புலப்பட்ட போதிலும், வழக்கமாக இந்து இராஜரீக சாஸ்திரத்தின்படி ஏற்பட்ட நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு மஹாராணுக்கள் அரசு நடாத்தி வந்தனர். பிரஜைகள் வெகு சுகமாகவே வாழ்ந்து வந்தனர். சுயேச்சையும் சுதந்தரமும் அவர்களுக்கிருந்தன. இப்பொழுது இந்தியர்கள் பிரிட்டிஷ்

சாம்ராஜ்யத்தில் அநுபவித்து வரும் உரிமைகளை விட பன்மடங்கதிகமான உரிமைகளையும் சுதந்தரங்களையும் கொண்டு வாழ்ந்து வந்தனர். இராஜபுத்திர மன்னர்களின் ஆட்சியில் பஞ்சமும் பிணியும் இருந்ததாகவுந் தெரியவில்லை. இடைவிடாமற்படி யுத்தம் நடந்திருந்தும் குடிகள் வருந்தி வந்ததாகத் தெரியவில்லை. மாதர்கள், ஆடவர்கள் முன்னிலையில் வரக்கூடாதென்னும் ஆசாரம் இருந்து வந்தது. என்றாலும், இராஜபுதன மாதர்கள் குதிரையேறி படைக்கலங் கொண்டு போர் புரிந்ததையும், அரசியல் நடாத்தி வந்ததையும் காணுமிடத்து மாதர்கள் கோஷாக்களாக யிருந்து வரவில்லையெனத்தெரியவரும். கணவன் மாண்டதும் மாதர்கள் உடன்கட்டையேறும் ஆசாரம் இருந்தது. இராஜபுத்திரிகள் தங்கள் கணவன்மார்களைத் தெய்வமாக வணங்கி வருவர். இராஜபுத்திரர்களிற் சிலர் சமணமதத்தையும் தழுவினர்களாக யிருந்தனர். இராஜ புத்திர மாதர்களிற் சிலர் மொகலாய வம்சத்தைச் சேர்ந்த மகம்மதீய மன்னர்களை மணந்து கொள்ள வாரம்பித்தனர். மீவார் சமஸ்தானத்தைச் சேர்ந்த சமஸ்தானாதிபதிகள் மட்டும் தங்கள் இராஜபுத்திர வம்சத்தைச் சாதி கலப்பின்றி பூர்வ ஆசாரப்படி யிருந்து வந்தனர். மீவார் சமஸ்தானத்தைச் சேர்ந்த இராஜபுத்திர மாதர்கள் தங்கள் இனத்தாரைத் தவிர வேறு இனத்தைத் தழுவினவர்களை மணப்பதில்லை. இதனாலேயே, இராஜபுதனத்தில் உள்ள எல்லா இராஜபுத்திர சமஸ்தானங்களை விட மீவார் சமஸ்தானம் பெருமை வாய்ந்து வந்தது. மீவார் சமஸ்தானம் இராஜபுதனத்தில் மத்தியிலிருந்ததினால், மத்திய தேசம் எனக் கூறுவர். இந்த சமஸ்

தானத்தை கும்பமஹாராணு 35 வருடகாலம் வெகு சிறப்புடன் அரசு நடாத்தி வந்தார். இவருக்குச் சோதிடத்தில் நம்பிக்கையதிகம். ஒரு நாள் சோதிட நூல் வல்லோரொருவர் கும்பமஹாராணுவிடம் வந்து 'உமக்கு சாரணனொருவனல் மரணம் உண்டாகும்' என்று கூறினர். அதுமுதல் மஹாராணு சாரண சாதியைச் சேர்ந்த எவரையும் தன்னுட்டில் வைக்காமல் அவர்களை நாடு கடத்தினர். அவர்களுடைய நிலங்கள் யாவும் சுவாதீனப் படுத்தப்பட்டன. அச்சாரணர்களுக்கு இராய்மால் என்னும் இளவரசன் சிநேகனுயிருந்தது பற்றி அவனும் நாடுகடத்தப்பட்டான். பிறகு சில காலங் கழிந்த பிறகு, கும்பமஹாராணு தான் செய்த காரியத்தை நினைத்துவருந்தி அச்சாரணர்களை மீண்டும் வரவழைத்துக் குடிபுகச் செய்தான். கும்பல்கார் கோட்டையில் கட்டப்பட்ட கும்பல் ஸ்வாமி கோவிலுக்கடுத்த மகாதேவர் தடாகத்தின் படிக்கட்டிலொன்றில் உட்கார்ந்து கொண்டு தடாகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில், கும்பமஹாராணுவின் மூத்த குமாரன் **உதயகரன்** பின்னல் ஒளிந்து வந்து அவரைக்குத்திக் கொன்முன். கும்பமஹாராணுவுக்குப் பிறகு இராய்மாலுக்கே பட்டங்கட்டி விப்பாரென்றும், தனக்குப் பட்டம் இல்லாமற்போகிற தென்றுங் கண்டு உதயகரன் தகப்பனைக் கொன்முன் எனக் கூறப்படுகிறது. சிலர் சாரணர்களின் தூண்டுதலினலேயே உதயகரன் மஹாராணுவைக் கொன்முனென்றும் கூறுவர். தகப்பனைக்கொன்ற காரணத்தால் உதயகரனுக்கு 'அத்திஹார உதயன் அல்லது கொலைகார உதயன்' என்று ஒரு நாமம் வழங்கி வந்தது. கும்பமஹாராணு கற்

பக விருட்சம்போல் மீவார் சமஸ்தானத்தில் செங்கோலோச்சி வந்தான். இவர் மிக்க கொடையாளி. தான தர்மஞ் செய்வதில் மிக்க ஆர்வமுள்ளவர். இவர் தன்னுடைய காலத்தில் பூந்தி, பமோதா, ஹாராவதி, மண்டல்கார், சிம்மபுரி, காத்தூ, ஜெனவா, சாட்சூ, தோடா, ஆஜ்மீர், சப்த லக்ஷ பிராஞ்சியம், நார்வார், யக்ஞபுரி, மால்பூர், யோகினிபூர், தங்கர்பூர், கர்காட், மல்லரான்யபூர், ரத்னபுரி, மாண்டூர், அமராத்ரி கிரிபூர், வர்த்தமான், ஜனகாசலம், அமீர்பூர், கோகர்ணகிரி, ஆபூ, கோடா, விஸால்பூர், தான்யநகர், காந்தல், ராந்தம்போர், மார்வார், ஜாங்கலதேசம் முதலிய நாடுநகரங்களை வென்று சுவாதீனப்படுத்தினர். இவர் படைமாட்சி மிகவும் சிறந்தது. இவர் தம் தோள் வலிமையினால் வட இந்தியாவில் உள்ள தேசங்களைத் தம் குடைக் கீழ்ப்படுத்திச் சிறப்புடன் மீவார் சாம்ராஜ்யத்தையாண்டுவந்தார். இவரை இராஜ குரு என்றும், தான குரு என்றும், அஸ்திர குரு என்றும், சைலகுரு என்றும், பரம குரு என்றும் பல நாமங்களால் பிரஜைகள் அழைப்பர். இவருடைய கீர்த்திப் பிரதாபங்களைப் பற்றிய பாடல்கள் இராஜபுதனத்தில் இப்பொழுதும் பாடப்பட்டு வருகின்றன. மீவார் சமஸ்தானத்தை கும்ப மஹாராணாவுக்குப் பிறகு பல தீரர்கள் ஆண்டு வந்தனர். இராஜபுதன சமஸ்தானங்கள் சுயாட்சியங்களாக இருந்த நிலைமை நீங்கி, இப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் கீழ் அடிமை சமஸ்தான சிற்றரசுகளாக இருக்கின்றன. பூர்வ இராஜபுத்திர மன்னர்களுக்கிருந்த தேசாபிமானமும், மதாபிமானமும் வீரத்தன்மையும், சுதந்தர உணர்ச்சியும் இப்பொழுதுள்ள இராஜ

புத்திர மன்னர்களுக்கு இல்லாமல் நவராத்திரி கொலுவில் பதுமைகள் அலங்கரித்திருப்பது போல இருந்து வருவதைக் காண நம்மனஞ் சோர்வடைகின்றது. இம்மன்னர்கள் மீண்டும் சர்வ சுதந்தரங்களையுங் கொள்ளும் காலம் வருவதெந்நாளோ !

(முற்றிற்று)

Only
1-11-90

PRINTED AT
THE HUXLEY PRESS, GEORGE TOWN MADRAS
1923

'திராவிட ரத்தினம்'

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றிய நூல்கள்.

சிறைச்சாலையில் இயற்றியவை.

நெபோலியன் (பிரன்சுவீரர்)	1	8
ஜோஸப்மாஜினி	0	12
இந்தியா இழந்ததனம்	1	0
அசோக சக்கரவர்த்தி	0	8
கும்பமகாராணு (இராஜபுத்திரவீரர்) ...	0	6
இராஜரீக சாஸ்திரம் (அரசியல்நூல் ...	1	0
அச்சில்)		
இராஜ இராஜ சோழன் (தமிழ்நாட்டு வீர மன்னர்)	0	10
லோகமான்ய பாலகங்காதர திலகர் ஜீவிய சரிதை	1	4

மகாத்மா காந்தி (2-ம் பதிப்பு)	1	8
முகம்மத் அலி ஷவுகத் அலி (2-ம் பதிப்பு) ...	1	0
சித்தரஞ்சனதாஸ்	0	12
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜிமகாராஜா	1	0
ஸ்வராஜ்யம்	0	8
டால்ஸ்டாய் (ருஷியஞானி) மகாத்மா காந்தியின் குரு	0	4
மகாத்மா காந்தியின் ஆன்மசக்தியும் சாந்தி நிலையும்	0	10
பண்டிதமதிலால் நேரு	0	2

"ஞானபோதினி பிரசுராலயம்"
33, இருளப்பன் வீதி, சௌகார்பேட்டை போஸ்ட்,
சென்னை.